தலைவர்கள் ஆலோசனை



டில்லியில் பிர்லா மாளிகையில் காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடியது. இதில் கலந்து கொண்ட டாக்டர் கான் ஸாஹேப், டாக்டர் மாமுத், பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய மூவரும் சம்பாஷிக்கின்றனர். (கே. கே. பி.)

வேண்டும். இது பலமான தேசீய கவர்ன்மெண்டிற்கு முரண்படாததாக இருக்க வேண்டும். தற்போது பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையின் சார்பாகச் செய்யப்படும் பிரேரணை யூனியன் ஏற்படுகையிலேயே பிரிவினை முறைக்கு ஆக்கமளிக்கிறது. அது பிரிவினை முயற்சிகளுக்கு இடமளிக்கும். இதனால் பூரண ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் அத்யாவசியமாக இருக்கும். சமயத்தில் தகராறுகள் ஏற்படும். இந்தப் பிரேரணை வகுப்புக் கோரிக்கையைத் தீர்ப்பதற்காக விடுக்கப்பட்டது போலும். ஆனால் இது விபரீத பலன்களையும் உண்டாக்கும். பல்வேறு சமூகங்களையும் சேர்ந்தவர்களாயும் ராஜீயத் துறையில் பிற்போக்காளராகவும் பிராபல்யமற்றவர்களாகவுமுள்ளவர்கள் தொல்லை விளைவிக்கவும், தேசத்தின் முக்கியமான பிரச்னைகளிலிருந்து மக்களது கவனத்தைத் திருப்பவும் கூடும்.

தற்போதைய நிலைமை

இன்றைய நெருக்கடியில் தற்போது என்ன நடக்கவிருக்கிறது என்பதே மிகவும் முக்கியமானது. இப்போதைய நிலைமை சம்பந்தப்பட்டவரை பிரிட்டிஷ் சர்க்காரின் யோசனைகள் தெளிவற்றவையாக அரைகுறையாக இருக்கின்றன. இப்போதைய அரசியலில் முக்கியமான மாறுதல் எதுவும் செய்ய உத்தேசித்திருப்பதாகத் தெரியவில்லை. எப்படியும் பாதுகாப்பு இலாகா பிரிட்டனுடைய அதிகாரத்திற்குட்பட்டதாகவே இருக்குமெனத் தெளிவாக்கபட்டிருக்கிறது. அந்த இலாகா எப்போதுமே முக்கியமானது. யுத்த சமயத்திலோ அது இன்னும் முக்கியமானது. அது எல்லா விஷயங்களையும் பாதிப்பதாகும். இந்நிலையில் அந்த இலாகாவை இந்தியரிடம் ஒப்படைக்காமல் மற்ற பொறுப்புகளைக் கொடுப்பதாகச் சொல்வது வெறும் கேலிக் கூத்து. இப்போது மிகவும் அவசியமானது ஜனங்கள் உற்சாகத்துடன் முன்வர செய்வதாகும். அவர்களிடம் பூர்ண நம்பிக்கை வைத்து பாதுகாப்புப் பொறுப்பை அவர்களிடம் கொடுத்தால்தான் அது சாத்தியம். அங்ஙனம் செய்தால இந்தக் கடைசி க்ஷணத்திலும் ஜனங்கள் உற்சாகத்துடன் முன்வருமாறு செய்யலாம். தற்போதுள்ள இந்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் இந்தியாவின் பாதுகாப்புப் பொறுப்பை நிர்வகிப்பதற்குத் திறமையற்றவர்கள். ஜனப்பிரதிநிதிகளே அதை ஏற்கக்கூடும். ஆனால் இப்போதே சுதந்திரம் ஏற்பட்டு, முழுப் பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் தான் அவர்கள் பொறுப்பை ஏற்கக்கூடும். எனவே காரியக் கமிட்டி பிரிட்டிஷ் பிரதிநிதி சபையின் சார்பாக வெளியிடப்பட்ட யோசனைகளை ஏற்க இயலவில்லை.

மாகாணங்களில் விரோதத்தையே வளர்க்கும். இதனால் இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் சேரும் விஷயத்திலும் மேற்கொண்டு சங்கடங்கள் விளையும்.

"விபரீத பலன் ஏற்படும்"

காங்கிரஸ், இந்திய சுதந்தரம் ஒற்றுமை இவற்றை ஸ்தாபிக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. உலக மக்கள் சதா பெரும் சம்மேளன தோரணையில் தங்கள் எண்ணத்தைச் செலுத்தி வருகையில் இந்த ஒற்றுமையில் ஏதேனும் பிளவு ஏற்பட்டால் அது சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் மிகுந்த தீங்கை விளைவிக்கும். இம்மாதிரியான நிலை ஏற்படுவதை நினைத்து பார்ப்பதே மிக்க வருத்தத்தை உண்டாக்கும். இந்திய யூனியனில் தங்களது விருப்பத்திற்கு மாறாகச் சேர்ந்திருக்கும்படி எந்தப் பிரதேச மக்களையும் கட்டாயப்படுத்தும் எண்ணமே கமிட்டிக்குக் கிடையாது. இத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளுகையில கமிட்டியார் பல அங்கங்களும் சேர்ந்து ஒரு பொதுவான கூட்டுறவு முறையிலுள்ள தேசீய வாழ்க்கை ஏற்படுவதற்கான நிலைமையை சிருஷ்டிக்க சகல முயற்சியும் செய்ய வேண்டுமென அபிப்பிராயப்படுகிறது. இத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ளுவதால் புதிய பிரச்னைகளை ஏற்படுத்தகூடிய மாறுதல் எதையும் ஏற்படுத்தக் கூடாது. அப்பிரதேசத்திலுள்ள இதர பெரிய கோஷ்டிகளைக் கட்டாயப்படுத்தக்கூடாது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் யூனியனுக்குள் பூரணமான பொறுப்பாட்சி இருக்க

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம்

டில்லி பிர்லா மாளிகையில் நடந்த காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் முடிவடைந்ததும் டாக்டர் மாமூத். டாக்டர் கான் ஸாஹேப், ஸ்ரீமதி ஸரோஜினிதேவி முதலியோர் வெளியே வரும்போது எடுத்த படம். (கே. கே. பி.)

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

..l. 13 No. 2 8-2-'42 ..rice 2 Annas.

"என் வருத்தம்"

ஸர் க்ரிப்ஸ் கடிதம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியாரின் முடிவைத் தெரிவித்து மௌலாஞ அபுல்கலாம் ஆஸாத் எழுதிய கடிதத்துக்கு மகா கனம் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் அனுப்பிய பதில் பின்வருமாறு:—

மாட்சிமை தங்கிய மன்னர் கவர்ன்மெண்டாரின் நகல் பிரகடனத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி ஏற்க மறுப்பதாகத் தாங்கள் ஏப்ரல் 10-ம் தேதியன்று எழுதிய கடிதம் பெறவும் நான் மிகவும் வருத்த முற்றேன்.

தங்கள் கமிட்டியின் முதல் தீர்மானத்தை எனக்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதில் அடங்கியுள்ள விஷயங்களைப் பற்றி இங்கே பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் உங்களுடைய முடிவுக்கு அவ்விஷயங்கள் காரணமில்லை என்பது தெளிவு.

தற்காப்பு மந்திரிக்கும் யுத்த மெம்பரான ஸேனபதிக்கும் உள்ள கடமைகளின் பாகுபாடுகளைப் பற்றித் தாங்கள் விவரமாக எழுதியிருக்கிறீர்கள். அதையும் இப்போது எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அப்பாகுபாட்டின் படி ராணுவ, கடற்படை, விமானப் படை தலைமைக் காரியாலயங்கள் சேனதிபதி இந்தியாவின் எல்லாப் படைகளுக்கும் தலைவர் என்ற முறையில் அவர் கீழ் இருக்க, அதற்குப் புறம்பான விஷயங்கள் தற்காப்பு மந்திரியின் கீழ் இருக்கும்.

"தற்காப்பின் இந்தக் குறுகிய பாகத்தில் அடங்கும் விஷயங்களைத் தவிர இதர இலாகாக்கள் எல்லாம் கீழ்க்கண்டவாறு நிர்வாக சபை மெம்பர்களான இந்தியப் பிரதிநிதிகளின் கைக்கு விடப்படும் என்றும் சொல்லப்பட்டது; அதாவது:—

உள்நாட்டிலாகா-உள் நாட்டு ஒழுங்கு, போலீஸ், வெளியேறி வந்தவர்கள். இத்யாதி.

போக்குவரத்து இலாகா:—ரயில்வே, ரஸ்தா, சாமான் போக்குவரத்து இத்யாதி,

நிதி இலாகா—இந்தியாவின் யுத்த வரவு செலவு பூராவும்.

சப்ளை இலாகா—எல்லாப் படைகளுக்குமான சாமான்கள், போர்த் தளவாடங்கள், செய்தி ஒலிபரப்பு இலாகா—பிரசாரம், பிரசுரம் இத்யாதி,

சிவில் தற்காப்பு இலாகா-ஏ. ஆர். பி. முதலிய பொது மக்கள் தற்காப்பு.

சட்டசபை இலாகா—உத்தரவுகள் ஒழுங்கு விதிகள்.

லேபர் இலாகா—ஆள் பலம்.

தற்காப்பிலாகா—இந்திய சிப்பந்திகள் நிர்வாகம் முதலியன.

சேனதிபதியின் கீழ் நேரிடையாய் இந்தியாவின் பாதுகாப்பு நடப்பதைக் கெடுக்காமல் இந்தியப் பிரதிநிதிகளான நிர்வாக சபை மெம்பர்களிடம் தற்காப்பு சர்விஸ்களின் பொறுப்பை விடுவதில் இதற்குமேல் போகமுடியாது. இந்த தற்காப்பு, மாட்சி தங்கிய மன்னர் கவர்ன்மெண்டின் முக்கியமான கடமையும் பொறுப்பும் ஆகும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இந்தியாவுக்கு நேச நாடுகள் உதவியளிக்க வேண்டியதற்கு தலைமை அதிகாரம் பிரிக்கப்படாமலிருக்கவேண்டியது இன்றியமையாதது. தேசிய கவர்ன்மெண்டில் பங்கெடுத்துக்கொள்ள நீங்கள் மறுத்ததற்கு. சுருங்கச் சொல்வதாயின், நீங்கள் விரும்புமாறு இந்திய மக்களைத் திரட்டுவதற்கு இப்போது கூறியுள்ள சர்க்கார் அமைப்பு பயன்தராது என்பதே காரணம்.

பண்டித ஜவஹருடன் பேட்டி

பண்டித ஜவஹர்லால் நேரு பல பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்து, க்ரிப்ஸ் திட்டம் நிராகரிக்கப்பட்டதன் காரணத்தை விளக்கினர். அவர் "ஹிந்து" "மித்திரன்" நிருபருடன் சம்பாஷிப்பதை படத்தில் காணலாம். (கே. கே. பீ.)

"புதிய யோசனைகள்"

நீங்கள் இரண்டுயோசனைகள் சொல்லுகிறீர்கள்: ஒன்று, அரசியல் அமைப்பை இப்போதே மாற்றலாம்: இந்த யோசனையை நேற்றிரவு தான் முதன் முதலாய் நீங்கள் பிரஸ்தாபித்தீர்கள் என்று முதலில் கட்டிக் காட்டவிரும்பிகிறேன். அதோடு நான் கலந்து பேசிய இதர பிரதிநிதிகள் அனைவரும், போர் மத்தியில், அதுவும் இவ்வேளையில், சட்டத்தை மாற்றுவது அசாத்தியம் என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

இரண்டாவதாக, நீங்கள் "வாஸ்தவமான தேசிய கவர்ன்மெண்டான பூரண அதிகாரங் கொண்ட மந்திரி சபை" அமைப்போம் என்றும் சொல்லுகிறீர்கள்.

அரசியல் அமைப்பில் மிகச் சிக்கலானதும், விஸ்தாரமானதுமான மாறுதல்கள் செய்தால் தான் இது சாத்தியம் என்பதை நீங்களும் உணர்ந்திருக்கவேண்டும்.

தற்போதைய நிலைமையில் இதை சம்பிரதாயம் மூலம்புகுத்தப்பார்த்தால், பெரிய அரசியல் ஸ்தாபனங்கள் நியமிக்கும் மெம்பர்கள் கொண்ட மந்திரி சபை, தனக்குத் தவிர வேறு யாருக்கும் பொறுப்பு வாய்ந்ததாக இராது. இதை அகற்றவும் முடியாது: நடப்பில் அது மெஜாரிட்டியின் சர்வாதிகாரமாகவே ஆகிவிடும்.

இந்த யோசனையை இந்தியாவில் உள்ள எல்லா மைனரிட்டிகளும் நிராகரிப்பார்கள், ஏனெனில் இது அவர்களை மந்திரி சபையிலுள்ள ஓர் நிரந்தரமான தனி நாயக மெஜாரிட்டிக்கு உட்படுத்திவிடும். இந்த மைனரிட்டிகளின் உரிமைகளைப் பாதுகாக்க மன்னர் கவர்ன்மெண்டார் ஏற்கெனவே அளித்துள்ள உத்தரவாதங்களுக்கும் இது ஒவ்வாது.



பத்ரிகா நிருபர்களுடன் ஸர் க்ரிப்ஸ்

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் பத்ரிகா நிருபர்களுக்குப் பேட்டி யளித்தார். கடைசியாக சம்பாஷணைகள் முறிந்ததும் அளித்த பேட்டியில் அவர் தமது திட்டம் வாபீஸ் ஆகி விட்டதை வெளியிட்டு, தமக்கு இதனல் வருத்தம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். —(என். என். பி. எஸ்.)

இன்னும் வகுப்பு வித்தியாசம் நீடித்துவரும் இந்தியாவைப் போன்ற தேசத்தில் இம்மாதிரி பொறுப்பற்ற மெஜாரிட்டி ஆட்சி சாத்தியமில்லை,

தவிரவும் பல்வேறு இந்திய ஜனங்கள் தங்கள் புது அரசியலை வகுக்கும்வரையில், மன்னர் கவர்ன்மெண்டு தான் வாக்குறுதி கொடுத்திருக்கும் பெரிய இந்திய மக்கள் பகுதிகள் பலவற்றிற்கும் தங்கள் கடமையைச் செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்.

அரசியலை அடியோடு மாற்றுவது இன்றைய நிலைமையில் அசாத்தியம் என்பதைப் பொதுவாக எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படி மாற்றாமல் எவ்வளவு செய்யலாமோ. அவ்வளவும் கவர்ன்மெண்டார் உத்தேசத் திட்டம் செய்ய முயன்றது.

தங்களாலான்மட்டும் எதிரியுடன் போராட தங்கள் காரியக் கமிட்டியார் ஊக்கமாயிருப்பதை நானும் மன்னர் கவர்ன்மெண்டாரும் உணர்ந்திருக்கிறோம். ஆனலும் இந்திய மக்களின் பல்வேறு வகுப்புகளையும் பகுதிகளையும் ஒன்று சேர்த்திருக்கக்கூடிய இந்த முறையில் மனப்பூர்வமாய்க் கொடுக்கவந்த இந்த நிபந்தனைகளின் பிரகாரம் யுத்த முயற்சியில் கலந்துகொள்ளத் தங்கள் காரியக் கமிட்டிக்கு இயலவில்லை என்பதற்காக நாங்கள் வருந்துகிறோம்.

மாஸ்கோவிலிருந்து!

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் ருஷ்யாவிலிருந்து லண்டன் திரும்பிய சமயம் எடுத்தது.

"ஆச்சர்யம் அடைந்தோம்"

மௌலாஞவின் பதில்

ஸர் கிரிப்ஸ் எழுதிய கடிதத்துக்கு உடனே மௌலாஞ ஆஸாத் பதில் அனுப்பினர். அதன் சாரம் வருமாறு:-

ஏப்ரல் மாதம் 10-ந் தேதி தாங்கள் எழுதிய கடிதம் இப்போது தான் கிடைத்தது. நானும் எனது சகாக்களும் அதைப்படித்து அதி ஆச்சரியமடைந்தோம். இந்த ஆபத்து சமயத்தில் இந்தியாக் கவர்ன்மெண்டில் பொறுப்பேற்று பாதுகாப்பு வேலை செய்யவேண்டுமானல் அந்த பொறுப்பும் அதிகாரமும் உண்மையாக இருக்கவேண்டும். யுத்த மந்திரிக்கும் ராணுவ மந்திரிக்கும் உள்ள வேலைப் பிரிவினையை விளக்கிச் சொல்லும்படியும் நாங்கள் கேட்டும் நீங்கள் சொல்லாமல் முன்னம் சமர்ப்பித்த ஜாபிதாவைப் பார்த்துக் கொள்ளும்படிச் சொன்னீர்கள். அதை நாங்கள் அப்போதே நிராகரித்து விட்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். யுத்த சம்பந்தமான சில விஷயங்களும் மற்ற இலாகாக்களால் நிர்வகிக்கப்படும் என்பதைத் தங்கள் கடிதத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். ஆனல் ராணுவ மந்திரியைப் பொறுத்தமட்டில் தாங்கள் கொடுத்த முதல் ஜாபிதாவில் அடங்கிய வேலைகளை மட்டுமே அவர் கவனிக்க முடியும் ஸேனதிபதியின் நியாயமான அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென ஒருவரும் சொல்லவில்லை. அவருக்கு யுத்த மந்திரி என்ற முறையில் இன்னும் அதிகமாக அதிகாரம் கொடுக்கலாம் என்றும் நாங்கள் சொன்னேம். ஆனல் ராணுவ விஷயத்தில்மட்டும் பிரிட்டிஷார் கருத்தும் எங்கள் கருத்தும் பெரிதும் மாறுபட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய மகாஜனங்களிடம் அவநம்பிக்கையே கொண்டிருக்கிறார்கள். அதனல் அவர்களிடம் உண்மையான அதிகாரத்தை விட பின் வாங்குகிறார்கள்.

ராணுவ விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்குள்ள பிரதம பொறுப்பைப்பற்றித் தாங்கள் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். இந்தியர் அவர்களின் பொறுப்பை உணரும்படிச் செய்தாலொழிய பிரிட்டிஷ் சர்க்கார் அவர்களது கடமையைச் சரிவர செலுத்த முடியாது. பொதுஜன ஆதரவுடன் இந்த யுத்தத்தை நடத்த வேண்டியது அவசியம் என்பதை இந்தியா கவர்ன்மெண்டாரும் உணரவில்லை:

"உண்மைக்கு விரோதம்"

மூன்று வாரங்களுக்குப் பிறகே நாங்கள் அரசியலை இப்போது மாற்றவேண்டுமென முதன் முதலாகக் கேட்டதாகத் தாங்கள் சொல்வது உண்மைகது விரோதமாகும். நமது சம்பாஷணையின்போது இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறோம். நாங்கள் அதை வற்புறுத்தவில்லை என்பது உண்மையே புதிய பிரச்னைகளைக்கிளப்ப நாங்கள் அப்போது விரும்பவில்லை.. யுத்த காலத்தில் அரசியல் மாறுதல்கள் வேண்டாமென நாங்களும் ஒப்புக் கொண்டதாகத் தாங்கள் சொல்லத்துணியும்போது அதை நாங்கள் ஆக்ஷேபித்து உண்மையான அபிப்பிராயத்தைத் தங்களுக்கு அறிவுறுத்த வேண்டியது அவசியமாக விருக்கிறது.

தங்கள் கடிதத்தின் கடைசி பாகம் தான் எங்களுக்கு அதிக வருத்தத்தையும் ஆச்சரியத்தையும் அளிக்கிறது. பேச்சுவார்த்தை நமக்கிடையே நடந்து வர வர பிரிட்டிஷ் சர்க்காரின், மனோபாவமும் கொஞ்சம் கொஞ்சமாக க்ஷீணித்து வந்தது, முதல் முதலில் எங்களிடம் தாங்கள் அறிவித்த விஷயங்களும் இப்போது மறுக்கப்படுகின்றன. அவற்றிற்கு வீண்சமாதானமும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். மந்திரி சபையைப் போல ஒரு தேசிய சர்க்கார்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

★ ★ ★

முஸ்லிம் லீக்கும் திட்டத்தை நிராகரித்தது



சமீபத்தில் அலஹபாத்தில் முஸ்லிம் லீக் மகாநாடு ஜனப் ஜின்ன தலைமையில் கூடியது: ஸர் க்ரிப்ஸ் திட்டத்தை லீக் காரியக் கமிட்டியும் இப்போது நிராகரித்திருக்கிறது. 1. மஹாநாட்டுத் தலைவர் ஜனப் ஜின்ன அலங்கரிக்கப்பட்ட ஒரு மோட்டார் காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறர். 2. மஹாநாட்டில் தலைவர் இதர முக்கியஸ்தர்களுடன் சம்பாஷிக்கிறர்.



ஆனந்த பவனத்தின் தோற்றம். வலதுபுறக் கோடியில் தேசியக் கொடி பறப்பதைப் பார்க்கலாம்.

காலத்தின் கோலம் ★

ஸ்ரீமதி

★ ★ **விஜயலக்ஷ்மி பண்டிட்**

எழுதியது

நான் படித்த புத்தகம்

பல வருஷங்களுக்கு முன்னர், நான் சிறு பெண்ணுயிருந்தபோது, எனக்கு ஒரு புத்தகம் பரிசாகக்கொடுக்கப்பட்டது. நீல நிறத்தோலினுல் வெகு நேர்த்தியாக பைண்ட் செய்யப்பட்டது அது. முதல் பக்கத்தில் "ராஜகுமாரர்களும் ராஜகுமாரிகளும்" என்ற எழுத்துக்கள் பொன் எழுத்தால் பொறிக்கப்பட்டிருந்தன. உட்புறமும் கவர்ச்சி தருவதாகவே இருந்தது. ஐரோப்பாவின் பிரபல ராஜ வம்சத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமிகளைப் பற்றிய கதைகள் அதில் கூறப்பட்டிருந்தன: சிறந்த ஆடைகளை அணிந்த அழகான சிறுவர் சிறுமிகள், மனோஹரமான பிரதேசத்தில் ஆடி விளையாடும் காட்சிகளைக் குறிக்கும் சித்திரங்களும் அதில் சேர்க்கப்பட்டிருந்தன; அப்புத்தகம் எனக்கு அதிக சந்தோஷத்தைத் தந்தது. ராஜகுமாரர்களும் ராஜகுமாரிகளும் அதிக சலுகைக்குரியவர்கள், அவர்கள் தப்பிதம் செய்யாதவர்கள், அவர்கள் காரியத்தைக் குறித்துக் கண்டனமோ குறையோ கூறுவது தகாது என்ற எண்ணமே சிறு பிராயம் முதற்கொண்டு என் உள்ளத்தில் ஊறிவந்ததால், அநேக ஆண்டுகளுக்குமுன்பு வாழ்ந்து அதிருஷ்டத்துடன் விளங்கிய அவர்களைபபற்றிய கதைகளைப் படிப்பதில் மிகுந்த திருப்தி ஏற்பட்டது. இந்தக்கதைகளில் சில எனக்கு மிகவும் பிடித்தமானவை. ஹாப்ஸ்பர்க் (Habsburg) வர்க்கத்தைச் சேர்ந்த ப்ரான்ஸ் தேசத்து அரசியான மேரிஅண்டாய்னெட் (Marie Antoinette)கதையும்இவற்றுள் ஒன்று. அவளுடைய சிசுபிராயத்தையும் பால்யதசையையும் பற்றி வெகு ஆவலுடன் நான் படித்தேன். அந்தக்கதையில் அவள் ராணியாக விருந்த நாளைப்பற்றி அதிகப் பிரஸ்தாபம் கிடையாது: இதனுல் நான் என் மனதிற்குகந்தபடி சம்பவங்களைக் கற்பனை செய்துகொள்ள வழியேற்பட்டது. கடைசியில் அவளது பரிதாபகரமான முடிவைப்பற்றிப்படிக்கும்போது துக்கத்தின் அறிகுறியாக கண்ணீர் வந்ததுடன், ஒரு ராணியை—அதிலும் அழகு வாய்ந்தவளை-கொலை செய்யத் துணிந்தவர்களிடம் கோபமும் ஏற்பட்டது.

காலப் போக்கில்

இவ்விதம் என் சிறு பிராயம் மறைந்தது: காலப்போக்கில் நான் சரித்திர புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்ததும், பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றில் என் மனம் லயித்துவிட்டது; முன்போல் மேரி அண்டாய்னெட்டின் ரூபத்திலோ, சௌந்தர்யத்திலோ நான் சிரத்தை கொள்ளவில்லை. "ரொட்டி இல்லாவிட்டால் அப்பத்தைப் புசிக்கட்டும்" என்ற பிரசித்த வாக்கியங்கள் என் நினைவில் சாஸ்வத ஸ்தானத்தைப் பெற்றுவிட்டன. அடிக்கடி இந்த வாக்கியத்தைப்பற்றியே நான் ஆழ்ந்து சிந்திப்பது வழக்கம்: இதற்கும் சில வருஷங்களுக்கப்புறம் மேரி அண்டாய்னெட் வர்க்கத்தையே நான் மறந்துவிட்டேன்: என்னைச் சுற்றி இருந்த முக்கியஸ்தர்களைப்பற்றியும், சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றியுமே சிந்தை அதிகரித்தது.

பழைய ஞாபகம்

இப்போது எவ்வளவோ வருஷங்கள் கழிந்துவிட்டன? ஆயினும் சமீபத்தில் மே பேர் (May fair) தியேட்டரில் மேரி அண்டாய்னெட் படம் காட்டப்படும் என்ற விளம்பரத்தைப் பார்த்ததும், பழைய ஞாபகம் மறுபடியும் உயிர்பெற்றது. உடனே அன்று பிற்பகல் என் அலுவல்களை வெகு சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு, அழகுமிகுந்து ஆனுல் அதிருஷ்டம் குன்றிய அந்த பிரான்ஸ் தேசத்து ராணியைப் பற்றிய படத்தைப் பார்க்க புறப்பட்டேன். தியேட்டருக்குள் போய், மிகுந்த வேதனைக்குட்படுத்தப்பட்ட அந்த ராணியின் சுக துக்கங்களும், ஏமாற்றங்களும், ஏக்கமும், தத்ரூபமாய் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். நடிப்பு உயர்தரமானதாக இருந்தது: படத்தின் கதை சரித்திர சம்பவங்களையே பூராவும் அப்படியே தழுவியிராத போதிலும், குறை காணுவதற்கு இடம் அளிக்காத விதம் அமைக்கப்பட்டிருந்தது: இடை வேளைக்கப்புறம் படக்காட்சி மறுபடியும் தொடங்கியதும் முதல் பகுதியில் எனக்கிருந்த உற்சாகமோ திருப்தியோ

இல்லை. புரட்சி ஆரம்பிப்பதற்கு முன்பு பிரான்ஸ் தேசம் இருந்த ஸ்திதி காண்பிக்கப்பட்டது. உணவின்றி வாடும் மக்கள் புரட்சிக்குத் தயாராகிக்கொண்டிருந்த நிலைமையிலும், பெரிய அதிகாரிகளும் பிரபுக்களும் தங்கள் சுகத்தையே பிரதானமாகக் கருதி வந்தனர். இந்தக் காட்சியைப் பார்த்தது தான், எனக்கு படத்தில் இருந்த மோஹம் மாயமாய் மறைந்துவிட்டது! உணவுப் பஞ்சத்தால் பரிதவித்த பிரெஞ்சு மக்களுக்குப் பதிலாக இந்தியாவின் லக்ஷக்கணக்கான மக்களின் ஞாபகமே எனக்கு வந்தது. இதே மாதிரி உணர்ச்சி மற்றவர்களுக்கும் ஏற்பட்டதா என்பதையறிய சுற்றி முற்றிப் பார்த்தேன். அந்த இருட்டில் இதரர்கள் படத்தையே தான் பார்த்துக்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றிற்று, அவர்களுக்கு அந்த நினைவே இல்லை போலும்! அப்படி ஏதாவது ஏற்பட்டாலும் அது படம் தரும் ஆனந்தத்திற்குப் பாதகம் புரியும் என்று எண்ணியதாகத்தான் கருதவேண்டும்! படம் பார்த்து விட்டு வீடு திரும்பினேம்: வீட்டில் ஒவ்வொருவரும் படத்தைப்பற்றித் தனக்குத் தோன்றிய கருத்துகளைத் தம் தம் மனப்பான்மைக்கேற்ப தெரிவிப்பது சகஜம் தானே!

லக்ஷ்மணபுரியில் ஒரு நாள்

மறு நாள் பத்திரிகையில் பல விசேஷச் செய்திகள். கான்பூரில் கலவரம்! இது கொட்டைத் தலைப்புடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பந்தேல்கண்ட் சமஸ்தானங்களில் ஏதோ கிளர்ச்சி நடப்பதாக ஒரு சிறு பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மக்கள் பொறுப்பாட்சி கோரியதை ராஜ்கோட் ஆக்ஷேபித்து நிற்கிறது. பிரஜைகளுக்கு ஜெயப்பூரில் உரிமை மறுக்கப்படுகிறது......இவற்றைப் பற்றி எல்லாம் என்னைப்பார்க்க வருவோர்களிடம் நான் சம்பாஷிக்க முயற்சித்தால், சிலர் இந்தச் செய்திகளையே படிக்கவில்லை யென்பது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. நம்மை நேரில் பாதிக்காததைப் பற்றி கவலைப் படுவானேன்? லக்ஷ்மணபுரியில் ஒரே குதூஹலம். அதிகம் கவனிக்க வேண்டியிருக்கிறது, ஏதோ ஒரு சில கிளர்ச்சிக்காரர் பிறருக்கு உபத்திரவத்தை விளைவிப்பதற்காகச் செய்யும் காரியங்களைப்பற்றி நமக்கு ஏன் விசாரம்? இந்தகாலத்தில் என்னைப் பார்க்க வருபவர் அநேகர்: அவர்கள் அனுப்பும் சீட்டுகள் என் மேஜைமேல் ஒரு குன்றுபோல் குவிந்து விடுகின்றன: ஸர்க்கார் தோட்டத்திற்குப் போய் நான் தீபாலங்காரங்களையும் பார்ப்பது வழக்கம். நான் ஓர் ஒதுக்குபுறமான இடத்திற்குப் போய் தனிமையாய் உட்கார்ந்து கொண்டு நடப்பவற்றை வேடிக்கை பார்ப்பேன்,

நம் காலம்

டென்னிஸ் ஆட்டப்போட்டிகள். அநேகம் விருந்துகள் இன்பகரமான காட்சிகள்......! ஆனுல் இளகிய மனதுடையவர்களுக்கு மட்டும், வெகுதூரத்திலிருந்து பசியையும் கஷ்டத்தையும் சகிக்கமாட்டாமல் அலறுவோர்களது குரல் கேட்கிறது: ஒவ்வொரு மணியும் இந்தக்குரல் வலுக்கிறது! சதுரங்க ஆட்டத்தில் உபயோகமாக்கப்படும் மரக்கட்டைகள் நாம். நமக்கு புலப்படாத ஒரு தெய்வீக சக்தி நம்மையும் இங்கு மங்குமாக இழுத்துச் செல்கிறது: நாம் சாப்பிடுகிறோம்: நாம் தூங்குகிறோம்; நமது பாகத்தை நாம் நன்கு நடிக்கிறோம்: நாம் அற்ப சந்தோஷத்திலும் துயரத்திலும் ஆழ்ந்திருக்கும் போது நம் காலம் முடிவடைகிறது.

பலதரப்பட்ட முறையீடு

உலகத்தில் இருக்கும் அநீதிக்கும், வறுமைக்கும் துயரத்திற்கும் குறைவே கிடையாது: மனிதனை திகைக்க வைத்து சோகசாகரத்தில் பலவித விஷயங்கள் வீழ்த்துகின்றன: இம்மாதிரியான ஸ்திதியை ஒழித்து சத்தியம், நியாயம், நீதி இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய முறையை சிருஷ்டிக்க வேண்டும் என்ற முறையீடு உலகின் நாலுபக்கங்களிலிருந்தும் கிளம்புகிறது: இந்த முறையீடு பலதரப்பட்டது: அவற்றில் சமஸ்தானங்களிடமிருந்து எழும்புவதும் ஒன்று. இதன் தத்துவத்தை நாம் நன்கு உணர்ந்து கொள்வோம்,

இதுதான் நம் வாழ்வு!

உலகம் வெகு விரைவில் முன்னேறுகிறது: மாறுதல்களும் மிகவும் அதிகம்: பழைய ஸ்தாபனங்களுக்குப் பதிலாக காலத்திற்கேற்ற புது ஸ்தாபனங்கள் தலைகாட்டுகின்றன. இது தான் காலத்தின் கோலத்தைக் குறிக்கும் நம் வாழ்க்கை!

போக்கு இதுதான்

ஒரு காலத்தில் மேரி அண்டாய்னெட்டிடம் பக்தி விஸ்வாசம் காட்டுவதே மனே வருத்தத்திற்கு ஆஸ்பதமானதாயிருந்தது: அவள் எந்த முறையின் அறிகுறியாயிருந்தாளோ அது முழுவதும் கலக்க முறும் ஸ்திதி இப்போது நம் நாட்டில் தோன்றியிருக்கிறது. வாழ்க்கையில் யாவும் மாறி வருகின்றன. நடந்ததைப்பற்றியும், நடந்துகொண்டிருப்பதைப்பற்றியும், நடக்கப் போவதைப்பற்றியும் நான் கனவு காண ஆரம்பித்தால், திடீரென்று என் புத்திரி நயந்தரா என் முன்பு வந்து அதைத் தடுத்து விடுகிருள். முன்பு நான் பெரிதும் விரும்பிய "ராஜகுமாரர்களும் ராஜகுமாரிகளும்" என்ற புத்தகம் அவள் கையில் இருக்கிறது: என் முன்பாக அந்த புத்தகத்தை மேஜை மீது விட்டெறிந்து விட்டு, தான் பள்ளிக்கூடத்தில் கற்ற அமெரிக்கர்களது காரியார்த்தப்பேச்சை ஆரம்பித்து விடுகிருள்: "என்ன அம்மா இது! இந்தக் குப்பைத் தொட்டி புத்தகங்களையா நீ சின்னவளாயிருந்தபோது படித்தாய்? எல்லாம் பைத்தியக்காரக் கதைகள்! அதிருக்கட்டும், ராஜகுமாரர்களைப்பற்றியும் ராஜகுமாரிகளைப்பற்றியும் இப்போது யாருக்குக் கவலை? இப்போது நம் முன்பு இருப்பவர்களைப்பற்றிப் படிக்க வேண்டும்: காரியம் செய்து முடிப்பவர்களைப்பற்றித்தான் நாம் அறிய வேண்டும்." அவ்வளவுதான்; இதைச் சொல்லிவிட்டு அவள் போய் விடுகிருள்! என் பதிலைக்கூட எதிர்பார்ப்பதில்லை. "ராஜ குமாரர்களும் ராஜ குமாரிகளும்" சீர்கெட்ட அட்டையுடன் அலக்ஷியம் செய்யப்பட்டுகிடக்கிறது. முன்பு பிரகாசித்த பொன் எழுத்துகள் மங்கியிருக்கின்றன. அதில் காணப்படும் கதைகளை இந்தக் காலக் குழந்தைகூட ரஸிப்பதில்லை. உலகத்தின் போக்கு இப்படித்தான்!

Vijaya Lakshmi Pandit

★

பண்டித ஜவஹர்லால் நேரு இங்கிலாந்து புறப்பட்டுச் சென்ற போது: பக்கத்தில் இரு சகோதரிகளும் நிற்கின்றனர்.

★

ஹிந்திக்கதை

உள்ளத்தின் தாகம்

★ கௌரி சங்கர வர்மா எழுதியது.

"ஆஹா! இதென்ன இது? வீரசேனாபதி, ஏன் உங்கள் உதடுகள் நடுங்குகின்றன? அழகான நெற்றி ஏன் சுருங்குகிறது? யராவது உங்களுக்குக் கோபம் வரும்படி எதை யாவது சொன்னார்களா? இல்லை அவமானம் எதையாவது...?"

"ஆமாம் மாலதி" வீர சேனாபதி கம்பீரத்துடன் சொன்னார், "இம்மாதிரி மோசமாக நடந்து கொள்வார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை."

கோபத்தினால் அவர் உடல் சிலிர்த்தது. அவர் புருவங்கள் விரிந்தன. தோள்கள் நடுங்கின, பழிதீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஜ்வாலை அவர் உள்ளத்தைத் தகித்தது. கண்களில் தீப்பொறி பறந்தன. ஒரு கணத்திற்குள் அவர் நிலைமையே மாறி விட்டது, "ரத்த ப்ரவாகம் பெருகட்டும். சாந்தியும் அமைதியும் பொங்கும் இடம் போர்க்களமாகட்டும். எங்கும் அமர்களமாகட்டும்" என்று அவர் மனம் ஒருகணம் எண்ணியது.

ஆனால் கோபத் தீயையும், மன எழுச்சியையும், உள்ளத்தின் ஜ்வாலையையும் ஒருவாறு சாந்தப் படுத்திக்கொண்டு அவர் கூறலானார். வேறு யாராவது இருந்தால் அவர்களுடைய ரத்தத்தால் என் வாளின் தாகம் சாந்தமடைந்திருக்கும், மாலதி! ஆனால் வருத்தமாக இருக்கிறது! அரசனே தான் என்னை அவமானம் செய்தவர். அவர் மீது நான் கையை ஓங்குவது அதர்மம் என்று கருதுகிறேன். ஆனால் அவமானம், அசட்டை, வெறுப்பு, முறைதவறி நடந்தது. ஆஹா! பழிக்குப் பழி! வாங்குகிறேன்! இதை மறக்க முடியாது! என்றார்.

மாலதி மௌனமாக கணவனை ஆச்சரியத்துடன் பார்க்கலானாள்.

"மாலதி! என்றென்றைக்கும் இந்த ராஜ்யத்தைத் தியாகம் செய்துவிட்டு வெளியேறி இந்த அவமானத்தை மறக்க முயற்சிக்கிறேன், வா! நாம் இந்த ராஜ்யத்தை விட்டு வேறு எங்காவது சென்றுவிடுவோம்! இந்த வீடு வாசல், பணம் காசு, சுக சௌகரியங்கள் யாவற்றையும் தியாகம் செய்துவிடு" என்றார்.

இதற்கு யாதொரு பதிலும் அளிக்க மாலதியால் முடியவில்லை. அவள் கணவன் முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். பயந்தாள். நடுங்கினாள் ஒன்றும் தோன்றாதவளைப்போல.

உஷையின் வருகைக்கு முன்பே வீர சேனாதிபதி நிர்ப்பயஸிம்மன், ராஜா ஸோஹன் ஸிம்மனின் ராஜ்யமான மோஹனபுரத்தைத் துறந்து மனைவியுடன், மழையைக் கண்டிராத பாலைவனப்பிரதேசத்தில் கால் நடையாக நடக்கலானார். ஓர் புறம் தலைமேல் வைகாசி மாதத்து வெய்யில், கீழே மணல் நெருப்பைப்போல் கொதிக்கிறது. இருவரும் நெஞ்சு வரள, வியர்வை சிந்த நடந்து கொண்டிருந்தனர். இடையிடையே அனல் காற்று வீசி அவர்கள் கண்களிலும் முகத்திலும் மணலை வாரி வீசியது. ஆயினும் ஆபத்துக்களைச் சகித்துக் கொண்டு அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் எங்கே செல்கிறார்கள்? அவமானம் செய்த அரசனுடைய ராஜ்யத்திற்குள் நுழைவதைவிட மரணமே மேல்!

மாலை நேரம் நெருங்கிற்று. கதிரவன் மேற்குக் கடலில் ஆழ்ந்துகொண்டிருந்தான். மாலதி கர்ப்பிணி; அவளால் நடக்க முடியவில்லை: நடந்து நடந்து அவள் கால்கள் பஞ்சடைந்துவிட்டன: தாகத்தால் நாவறண்டது. ஆயினும் கணவனைத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள்.

இருட்டுக்குமுன் இருவரும் ஒரு பீல் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். பீல்களின் தலைவன் சந்தோஷத்துடன் இவர்களை வரவேற்றான்.

"ஹரஹர மஹாதேவ!" என்று கோஷமிட்டுக்கொண்டே "இந்தக் குடிசை என்னுடையதல்ல. கடவுளுடையது, யாருக்கும் இது சொந்தம்!" என்றான் அவன்.

நிர்பயஸிம்மன் மனைவியுடன் பீல்களின் அதிதியாக வசிக்கலானார். காலாகாலத்தில் மாலதி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். புஷ்பத்தைப் போன்ற ம்ருதுவான மேனி-அபூர்வசௌந்தரியத்தின் ஜீவன் நிறைந்த சோபை. அலௌகிகமான ரூபத்துடன் திகழ்ந்தது குழந்தை. ஆனால் பீல்கள் தங்கள் ஜாதி வழக்கப்படி பெண் பிறந்ததை அபசகுனமென்று கருதினர்.

ஸாக்ஷாத் லக்ஷ்மியைப்போல் இருந்த குழந்தைக்கு தாய் கமலம் என்று பெயர் வைத்தாள். தந்தை அவளை அன்புடன் "கமல்" என்று அழைக்கலானார்.

பனிரண்டு வருஷங்கள் கழிந்தன. கமலா யௌவனத்தை நெருங்கிக்கொண்டிருந்தாள்.

வீர ஸேனாபதி நிர்பயஸிம்மனின் ஒரே மகளான கமலா சிறு வயதிலிருந்தே பீல்களின் கூட்டத்தில் இருந்ததாலும் தந்தையின் பயிற்சியினாலும் போர் வித்தையில் நிகரற்று விளங்கினாள். வில்வித்தை, குதிரை சவாரி, ஈட்டி எறிதல் வேட்டையாட குதிரையேறி மலை வனங்களையெல்லாம் சுற்றுதல், இவை அவளுக்கு தினசரி விளையாட்டாக ஆகிவிட்டன. அவளுடைய அழகும் வீரமும் எங்கும் பிரசித்தமடைய ஆரம்பித்தன.

ராஜா ஸோஹன் ஸிம்மனின் மகனான இளவரசன் பெயர் ஆனந்தன், அவன் அழகன், வாலிபன். சிறு வயதிலிருந்தே தேர்ந்த ஆசிரியர்களின் பயிற்சியால் அவன் சிறந்த வீரனாகி இருந்தான். அவன் சிறுவனாக இருந்த போது தன் தந்தையின் ராஜ்யத்தை விட்டு வெளியேறிச் சென்ற ஸேனாதிபதியையும் அவர் மனைவி மாலதி சித்தியையும் அவனுக்கு நன்றாக நினைவிருந்தது.

மாலதி சித்திக்கு அவனிடம் மிகுந்த பிரியம். இதை எண்ணும்போது அவன் கண்களில் கண்ணீர் வந்து விடும். அவன் அடிக்கடி மாலதி சித்தி எங்கே இருப்பாள். எப்பொழுது அவளுடைய புனிதமான தரிசனம் கிடைக்கும்?" என்று யோசிப்பான். ஆனால் தந்தையிடம் இருந்த பயத்தினால் அவன் தன் மனதிலுள்ளதை வெளியிடவில்லை.

கமலின் வீரம் ஆனந்தன் செவிக்கும் எட்டியது. இந்தக் கமல் யார்? எங்கு பார்த்தாலும் கமல், கமல் என்று பேசிக் கொள்ளுகிறார்களே? அவன் யாருடைய மகன்? நான் சீக்கிரத்திலேயே கமலைச் சந்தித்து அவன் வீரத்தைப் பரீக்ஷை செய்யவேண்டும். இது என்னுடைய திடமான பிரதிக்ஞை என்று எண்ணினான்.

'கமலா'விலிருந்து 'கமல்' என்று பெயர் மருவியதால் ஜனங்கள் அவளை ஸ்திரீ என்று கருதாமல் புருஷனென்றே எண்ணினார்கள். அவளுடைய ஆடையும் வேஷமும் ஆண் பிள்ளைகளைப் போல்தான் இருந்தன. ஆகையால் யாரும் உண்மையை உணர முடியவில்லை.

* * * *

"ஏண்டா குழந்தை! ஏன் கமலம் போன்ற உன் முகம் இன்று வாடியிருக்கிறது?"

"அம்மா! என் உள்ளத்திற்குள் ஏதோ ஒரு சக்தி வீர ஸேனாபதிக்கும் மாலதி சித்திக்கும் அப்பா பெருத்த அநீதியைச் செய்துவிட்டார் என்று கோஷித்துக் கொண்டிருக்கிறது!"

"இனி இம்மாதிரிப் பேசாதே! ஆனந்தா!"—பயமடைந்த மகாராணி மேலும் கூறலானாள். "அரசர் கேட்டால் பெரிய அனர்த்தம் ஏற்படும்! பிறகு பிரளயம்தான்!" என்றாள்.

"ஆனால் அம்மா! என்னுடைய மனோவிருப்பம் நான் தேச தேசாந்தரங்கள் சுற்றி அவர்கள் இருக்குமிடத்தை அறிய வேண்டுமென்பதே!"

"நீ அம்மாதிரிச் செய்ய அரசன் விட்டுவிடுவாரா?"

"கடவுள் நினைத்தால் என் மனோரதத்தைப் பூர்த்தி செய்வார். என்றைக்காவது ஒரு நாள் பார்த்துக்கொள்! அம்மா! நான் சொல்லி வைக்கிறேன்!" என்றான் ஆனந்தன்.

* * * *

"மந்திரி! நமது வனங்களில் அடிக்கடி வந்து வேட்டையாடும் அந்த யுவன் யார்? அவனைப் பற்றி ஏதாவது தகவல் தெரிந்ததா?" என்று கேட்டான் அரசன்.

"அரசே! விசாரித்து அறிந்த வரையில் அந்த யுவன் ரத்னபுரத்தில் உள்ள பீல்ஜாதியைச் சேர்ந்தவனென்றும், அவ்வப்பொழுது வேட்டையாட வருவதாகவும் தெரிகிறது" என்றார் மந்திரி.

"ஓஹோ! அரசன் கட்டளையை உல்லங்கனம் செய்கிறானா அவன்?"

"ஆமாம்! வேந்தே!"

"அவனை உயிருடன் கைது செய்துகொண்டு வந்து என் முன் நிறுத்துங்கள்!" என கோபம் நிறைந்த குரலில் அரசன் கட்டளையிட்டான்.

"உத்தரவு!" என்று கூறி மந்திரி தலை வணங்கிச்சென்றான்.

கமலைக் கைது செய்வதற்காக முடிந்தவரை முயற்சி செய்தார்கள். ஆனால் யாவும் வியர்த்தமாயின. ஆனால் கமலின் வீரமும், சௌந்தரியத்தைப் பற்றிய புகழும் நாளுக்கு நாள் கமலத்தைப் போல் விகசித்துவந்தன.

"ஆனந்தா! அந்தத் துஷ்ட பீல் யுவனை நீ உயிருடன் கைது செய்துகொண்டு வரமுடியுமா?" என்று கேட்டு ஆவல் நிறைந்த பார்வையுடன் மகனை நோக்கலானார் ராஜா ஸோஹன் ஸிம்மன்.

"தந்தையே! முடிந்தவரை முயற்சி செய்கிறேன்!" என ராஜகுமாரன் ஆனந்தன் பதில் சொன்னான்.

"அப்படியானால் சென்றுவா! முடிந்தவரை உன் கடமையைச் சீக்கிரத்தில் செய்து முடி!"

"உத்தரவு!" என்று சொல்லி ராஜகுமாரன் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

ராஜகுமாரன் ஆனந்தனின் உள்ளத்தில் பரமானந்தத்தின் அலைகள் எழுந்து உருண்டன. அவன் மனதிலிருந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளச்சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு குறியில் இரண்டு வேட்டை: இந்தச் சாக்கில் வீர ஸேனாபதியையும் அவர் மனைவியும் இருக்குமிடத்தையும் கண்டுபிடிக்கலாம் என்று எண்ணினான்.

* * * *

"பிராணநாதா! நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்கிறீர்களா?" என மெதுவான குரலில் மாலதி கேட்டாள்.

"சொல்லேன்! என்ன சொல்கிறாய்?"—வீர ஸேனாபதி நிர்பயஸிம்மன் கம்பீரமான குரலில் "சொல்ல வேண்டியதைச் சொல்!" என்றார்.

"நமது கமலாவுக்கு விவாக வயது வந்துவிட்டதல்லவா?"

"ஆமாம்! அதைப்பற்றி என்ன கவலை? இப்பொழுது என்ன அவசரம் வந்துவிட்டது? பார்த்துக்கொள்ளலாம்" என்று தட்டிக் கழித்துவிட்டார்.

மாலதியும் மேற்கொண்டு ஒன்றும் சொல்லவில்லை.

* * * *

பதினைந்து இருபது வீரர்களுடன் ராஜகுமாரன் ஆனந்தன் 'கமலை'க் கைது செய்யப் புறப்பட்டான்! உடம்பில் ஆயுதங்களுடனும் மனத்தில் பலவித ஆசைகளுடனும்!

ராஜ்யத்தை விட்டு வெளியே தெற்கு நோக்கி வெகு தூரம் வந்த பிறகு தூரத்தில் ஒரு அழகான வாலிப வீரன் குதிரையேறி வலது கையில் ஈட்டியுடன் அடர்ந்த காட்டினுள் ஓடும் காட்டுப் பன்றியை விரட்டிக் கொண்டு செல்வதைக் கண்டான்,

"யார் அது? நில்!"—ராஜகுமாரன் ஆனந்தன் இவ்விதம் கர்ஜித்துக் கொண்டு இதர வீரர்களுடன் அந்த வீரன் சென்ற திக்கை நோக்கி விரைந்தான்.

புருஷ வேஷத்தில் இருந்த கமலா அவர்களை அசட்டையுடன் ஒருதரம் திரும்பிப்பார்த்தாள். பிறகு தன்னுடைய வேட்டையைக் கை நழுவவிடுவது உசிதமல்ல என்றெண்ணி மேற்கொண்டு செல்லலானாள்.

இந்தச் செய்கையினால் ஆனந்தனின் கோபம் அதிகரித்தது. அவன் கணத்திற்குள் தன் துணைவர்களுடன் அவளை நெருங்கி வந்தான். இதற்குள் கமலா தன் வேட்டையைக் குறிவைத்து அடித்து விட்டாள். அந்தக்காட்டுப் பன்றி ரத்தத்தில் தோய்ந்து ஓர் புறம் கிடந்தது.

"நீ யார்? யாருடைய உத்தரவின் மேல் இந்தக் காட்டுக்குள் வேட்டையாட வந்தாய்?" என்று கோபம் நிறைந்த குரலில் ராஜகுமாரன் கேட்டான்.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனுடைய வீரர்கள் அவளைச் சூழ்ந்துகொண்டனர்,

"நான் அருகே யுள்ள ரத்னபுரி கிராமத்தில் வசிப்பவன்" என்று மதுரமான புன்னகையுடன் கமலா பதிலளித்தாள். அவள் சற்றும் கலங்கவில்லை. குதிரையை விட்டுக் கீழே இறங்கவும் இல்லை,

"யாருடைய உத்தரவின் மேல் இந்த வனத்திற்குள் வேட்டையாட வந்தாய்?"

"யாருடைய உத்தரவு! எனக்கு ஒருவருடைய உத்தரவும் அவசியம் இல்லை!"

"ஏன்?"

"அப்படித்தான்!"

"உன்பெயர் என்ன?"

"கமல்!"

"ஓ! கமலா! நீ தானா கமல்!" ஆச்சர்யமான பார்வையுடன் அவளை நோக்கி ஆனந்தன் கேட்டான்.

"ஆமாம்! என் பெயர் தான் கமல்." என கமலா திடத்துடன் பதில் கூறினாள்.

"இந்த வனம் யாருடைய ராஜ்யத்தில் இருக்கிறது தெரியுமா?"

"தெரியும்!"

"பின்னே?"

"பின்னே என்ன?"

"அப்படியானால் நாங்கள் உன்னைக் கைது செய்து அரசன் முன் கொண்டு போய் நிறுத்துகிறோம்!"

"உங்கள் இஷ்டம் போல் செய்யலாம். எனக்கு இதைப் பற்றிச் சிறிதும் வருத்தமில்லை!"

"நீ அரசனுடைய உத்தரவை மீறினாய்!"

"ராஜா—மஹாராஜா ஒருவரையும் தெரியாது!"

"ஓஹோ! இவ்வளவு அலட்சியமா? உன் தந்தையின் பெயர் என்ன?"

"வீர ஸேனாதிபதி நிர்பய ஸிம்மன்!" என்று கமலா பயமற்றுப் பதில் கூறினாள்.

"என்ன! நீ வீர சேனாதிபதி நிர்பய ஸிம்மரின் மகளா? மாலதி சித்தியின் அருமைக் கண்மணியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ராஜகுமாரன்,

"ஆமாம்! எனக் கூறி கமலா அவன் பக்கம் பார்த்த படியே, "நீ யார்?" என்றாள்.

"நான் மஹாராஜா ஸோஹன் ஸிம்மரின் புத்திரன் ஆனந்தன்."

"ஓஹோ! ராஜகுமாரன் ஆனந்தன் நீங்கள் தானா?"

"ஆமாம்! கமல்! நாம் இருவரும் சகோதரர்கள். ஆஹா! நான் சின்னஞ் சிறுவனாக இருந்த பொழுது மாலதி சித்தி என்னிடம் எவ்வளவு ப்ரியமாய் இருந்தாள் தெரியுமா?"

* * * *

குதிரையை விட்டுக் கீழே இறங்கினான் ஆனந்தன் அவனுடைய தோழர்களும் இறங்கினர்.

"தம்பி கமல்! நான் வெகு நாட்களாக உன் வீரசரித்திரத்தைக் கேள்விப்பட்டு வருகிறேன். ஆனால் அரசன் கட்டளையைமீறி இந்தக் காட்டில் வந்து வேட்டையாடும் நீ மாலதி சித்தியின் மகன், என் சகோதரன் என்பது எனக் கெப்படித் தெரியும்?" என்று சொல்லி ஆனந்தன் ஆண் உடையிலிருந்த கமலாவை மார்புடன் தழுவிக் கொண்டேன்.

கமலா உடலில் ஒரு சக்தி மின்னைப்போல் பாய்ந்தது. கண்களின் கணைகளால் அவள் காயமடைந்தாள். தன் மனதிற்குள் ஆனந்தனின் ரூபலாவண்யத்திற்கு தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தாள்: ராஜகுமாரனின் ஒப்பற்ற சௌந்தரியம், பெரிய பெரிய, கண்கள், அவளுடைய மனத்தில் பதிந்துவிட்டன. ஜீவசித்திரத்தைப்போல. அவள் கண்கொட்டாமல் தன் உள்ளங்கவர்ந்த கள்ளனை ஏறிட்டுப்பார்த்தாள். அவனுடைய அழகை இரு கண்களாலும் பருகினாள். ஆனால் ராஜகுமாரன் அவளைப்பற்றி வேறுவிதமாகச் சிந்தனைசெய்து கொண்டிருந்தான். முற்றிலும் விபரீதமாக!

விதியின் கூத்து! நியதியின் ரகசிய லீலை. காலத்தின் மாற்றம். சந்தர்ப்பத்தின் வேகம். பிரதீக்ஷணம் மாறுதல், வேட்டை தேடியலைந்த வீராங்கனையான கமலா ராஜகுமாரன் ஆனந்தனின் அழகுக்கு வேட்டையாகிவிட்டாள். காதல் ஜ்வாலை பற்றிக்கொண்டது. ஆனால் ஒரு பக்கம் தான். இரு பக்கமும் அந்தத் தீ பற்றியதாகத் தெரிவில்லை.

கமலா ராஜகுமாரனையும் அவனுடைய இதர வீரர்களையும் மரியாதையுடன் தன் குடிசைக்கு அழைத்து வந்தாள்.

(அடுத்த வார இதழில் முடிவாகும்)

"விதியின் கூத்து ! நியுதியின் ரகசிய லீலை. காலத்தின் மாற்றம். சந்தர்ப்பத்தின் வேகம், பிரதிக்ஷணம் மாறுதல். வேட்டை தேடியலைந்த வீராங்கனையான கமலா ராஜகுமாரன் ஆநந்தனின் அழகுக்கு வேட்டையாகி விட்டாள். காதல் ஜ்வாலை பற்றிக்கொண்டது. ஆனால் ஒரு பக்கம் தான். இரு பக்கமும் அந்தத் தீ பற்றியதாகத் தெரியவில்லை"—என்கிறர் இக் கதாசிரியர். கமலாவும் ஆநந்தனும் எப்போது எங்கே எப்படி சந்தித்தனர்? காதல் ஜ்வாலை ஒரு பக்கம்தான் பற்றிக்கொண்டது என்பதன் கருத்தென்ன? அடுத்த வாரம் பூர்த்தி பெறும் இக்கதை உணர்ச்சியை எழுப்ப வல்லது.

* * * * *

மொழிபெயர்த்தவர் — அ. க. ஜயராமன்

ருஷ்யாவுக்கு சகாயம் புரிய

ருஷ்யாவுக்கு சகாயம் புரிய செஞ்சிலுவை சங்கத்தார் நடத்தும் இயக்கத்தில் கலந்து கொண்ட மிஸஸ் சர்ச்சில் கொடிகளை விற்றார். முதன் முதல் அவரிடம் ஒன்றை அவரது பர்த்தா பிரதம மந்திரி வாங்கினார். தமது வாசஸ்தலத்திற்கு வெளியே அவர் பணத்தைக் கொடுப்பதைக் காணலாம். (இ. என். பி.)

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன.

7

நான் தன்னந்தனியாக உட்கார்ந்து யோசித்துப் பார்த்த பொழுது என் உள்ளத்தில் ஆழமாகப் புதைந்த பெண்மணிகளின் சரித்திரங்களில் குசாரி மகாசயருடைய தம்பி மனைவியினுடையதும் ஒன்று என்று கண்டேன். கூடிய மட்டில் நீண்டதான என் வாழ்க்கையில் சுநந்தையைப்பற்றி நான் மறக்கவில்லை: மனிதர்களை அவ்வளவு சீக்கிரமாகவும் சகஜமாகவும் தன் வசப்படுத்திக் கொள்ளும் சக்தி ராஜலக்ஷ்மியிடம் இருந்தது. ஆகையால் சுநந்தை ஒரு நாள் என்னை 'அண்ணு' என்று கூப்பிட்டது ஆச்சரியப் படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. வேறுவிதமாக அந்த ஆச்சரியகரமான பெண் எனக்கு அறிமுகமாவது எந்த விதத்திலும் முடியாத காரியம். யதுநாத தர்க்காலங்காரன் குடியிருந்த அந்த இடிந்துபோன வீடு, எங்கள் வீட்டிற்கு மேற்கே ஒரு புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தான் இருந்தது. அங்கே போனதுமே அது ஒரு துரோகியும், அவளுடைய புருஷன், பிள்ளையும் குடியிருக்குமிடம் என்ற மாதிரி என் மனதில் படவில்லை: மூங்கில் புஷ்பங்கள் சொரிந்துகிடந்த பத்து நிமிஷத்துப் பாதை. நடுவில் மரம் மட்டை ஒன்றுமே கிடையாது. வெகு தூரம் எல்லாம் நன்றாகக் கண்ணுக்குத்தெரிந்தன. அன்று அதிகாலைத் தூங்கி எழுந்து ஜன்னல் வழியாக அந்த ஜீர்ணமடைந்த விகாரமான குடிசையைப் பார்த்ததும், நான் வெகு நேரம், ஒரு விதமான என்று மறியாத வேதனையில் ஆழ்ந்து நின்று கொண்டிருந்தேன். அநேக தடவை அநேக சந்தர்ப்பங்களைக் கவனித்திருந்தும் இந்த விஷயத்தை நான் அடிக்கடி மறந்து போய்விடுகிறேன். வாழ்க்கையில் யாரையும் மேல் தோற்றத்தைப் பார்த்து ஒன்றும் முடிவு கட்டிவிட முடியாது. அந்தப் பாழடைந்த வீட்டில் நாய்நரிகள் இல்லை என்று யார் சொல்ல முடியும்? அல்லது அதே பாழடைந்த வீட்டில் 'குமார சம்பவம்,' 'ரகு வம்சம்' 'சாகுந்தலம்' 'மேக தூதம்' இவற்றில் பாடமோ, அல்லது ஸ்ம்ருதி நியாயம், மீமாம்ஸை-இவை சம்பந்தமான பாடமும், சிஷ்யர்கள் சூழ உட்கார்ந்து ஒரு புது ஆசிரியன் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்று யார் எண்ண முடியும்? அந்த வீட்டில் வங்காள தேசத்து இளம் பெண் ஒருத்தி தர்மத்தையும், நியாயத்தையும், கௌரவத்தையும காப்பதற்காகத் தானே துக்கத்தைத் தேடி அனுபவிக்கிறாள் என்று யாருக்குத் தெரியும்!

அந்த ஜன்னலிலிருந்து திரும்பி வீட்டிற்குள் பார்த்தேன். ரதன் ஏதோ செய்து கொண்டிருந்தான். ராஜலக்ஷ்மி அவனைக் கண்டித்துக் கொண்டிருந்தாள். இருவரும் கொஞ்சம் உரக்கவே பேசினார்கள். நான் எழுந்து வெளியே போய் நின்றதும் அவள் கொஞ்சம் திகைத்துப் போனாள்.

"என்ன தூக்கம் கலைந்து விட்டதா? அப்படித்தான் இருக்க வேண்டும். ரதன், உன் குரலை நீ கொஞ்சம் கம்மிப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் என்னால் தாங்கமுடியாது" என்றாள்.



இந்த மாதிரி உத்திரவும் வேண்டுகோளும் ரதனுக்கு மட்டுமில்லை. வீட்டில் எல்லோருக்கும் அடிக்கடி அப்பியாசமானதுதான். எனவே அவள் வாயை மூடிக்கொண்டிருந்தது போல் நானும் சும்மா இருந்து விட்டேன். ஒரு பெரிய பாத்திரத்தில் அரிசி, பருப்பு, நெய், எண்ணெய் முதலியவைகளும் மற்றொரு சிறு பாத்திரத்தில் பலவிதமான தின்பண்டங்களும் தயாராகி இருந்தன. அவ்வளவு சாமான்களையும் தூக்கிக் கொண்டு போக வேண்டிய விஷயத்தைப் பற்றித் தான், ரதன் தர்க்கம் செய்துகொண்டிருந்தான் போலிருக்கிறது. விஷயம் அதேதான்! ராஜலக்ஷ்மி என்னை மத்யஸ்தமாக வைத்து "இவன் சொல்வதைக் கேள். இந்த சாமான்களைத் தூக்கிக் கொண்டு போக முடியாதா? நானே தூக்கிக்கொண்டு போய் விடுவேனே" என்று சொல்லி பெரிய பாத்திரத்தை தூக்கி எடுத்துக் கொண்டாள்.

உண்மையில் சுமை என்ற விஷயத்தில் தூக்கிச் செல்வது என்பது மனிதர்களுக்கு அவ்வளவு கஷ்டமானதல்ல. கடினமானது மற்றொன்று. அதனால் அவனுடைய கௌரவத்திற்கு ஹானி வரும். ஆனால் அதை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. நான் அவள் முகத்தைப் பார்த்த உடனேயே இந்த ரகசியத்தை வெகு சுலபமாக அறிந்துகொண்டுவிட்டேன். சிரித்துக்கொண்டே "ஆட்கள் தான் யதேஷ்டமாக இருக்கிறார்களே, குடிகளுக்கும் குறைவில்லை. அவர்களிடம் கொடுத்தனுப்பு. வேண்டுமானால் ரதன் கூடப் போகட்டும்" என்றேன்.

ரதன் தலைகுனிந்த வண்ணம் நின்றுகொண்டிருந்தான், ராஜலக்ஷ்மி இருவர் முகத்தையும ஒரு தடவை பார்த்து சிரித்துக் கொண்டே "அடபாவி, அரை மணியாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாயே, இந்தச் சின்னக்காரியத்தை எல்லாம் ரதன் பாபுவிடம சொல்லாதீர்கள் அம்மா என்று முன்பே சொல்லக்கூடாதோ. வேறு யாரையாகிலும் அனுப்பியிருப்பேனே. சரி யாரையாவது கூட்டிக் கொண்டுவா" என்றாள்.

அவன் போனதும் "விடிந்ததும் விடியாததுமாக இதெல்லாம் என்ன?" என்று கேட்டேன் நான்.

"சாப்பாட்டுச் சாமான்களைக் காலையில்தான் அனுப்ப வேண்டும்."

"எங்கே அனுப்ப வேண்டும்? எதற்காக?"

"எதற்காக என்றால் சாப்பிடுவதற்காகத்தான். பிராமணர் வீட்டிற்குப் போகிறது"

"அந்த பிராமணர்கள் யார்?"

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். நான் பெயரைச் சொல்லுகிறேனா இல்லையா என்பதற்காக! ஆனால் மறுகணமே "கொடுப்பதைச் சொல்லிக் கொடுக்கக்கூடாது; புண்ணியம் கம்மியாகிப்போகும். போ நீ கை கால் அலம்பிக் கொண்டுவா—உனக்கு டீ தயாராகி விட்டது" என்றாள்.

நான் வேறு கேள்வி எதுவும் கேட்காமல் வெளியே போய் விட்டேன்.

மணி பத்து இருக்கும், வெளி அறையில் பெஞ்சியின்மீது உட்கார்ந்து கொண்டு வேறொன்றும் செய்யத் தொன்றாமல் பழைய வாரபபத்திரிகை ஒன்றை படித்துக் கொண்டிருந்தேன். அறிமுகமாகாத ஒருவருடைய குரல் காதில் பட்டது. தலை நிமிர்ந்து பார்த்தேன். வந்தவர் அறிமுகமாகாதவர்தான்.

"நமஸ்காரம் பாபுஜி" எனறார்.

நானும் கைகூப்பி வணங்கிவிட்டு "உட்காருங்கள்" என்றேன்.

பிராமணருக்கு மிகவும் கேவலமான ஆடை. காலில் செருப்பு கிடையாது. உடம்பில் சட்டை கிடையாது. அழுக்கடைந்த அங்க வஸ்திரம்தான். கட்டிக் கொண்டிருந்த வேஷ்டியும் அப்படித்தான் இருந்தது. இரண்டு மூன்று தையல்கள் கூட போடப் பட்டிருந்தன. கிராமாந்திரத்தில் பெரிய மனிதன் அழுக்கு ஆடை அணிந்திருப்பது அவ்வளவு ஆச்சரியமானதல்ல, அதைக் கண்டு அவன கஷ்ட தசையில் இருப்பவன் என்று நினைத்துவிடமாட்டார்கள். அவர் எதிரில் பிரம்புப் பாயின் மீது உட்கார்ந்து "நான் தங்களின் பிரஜையில் ஏழைக் குடிகளில் ஒருவன், இதற்கு முன்னாலேயே தங்களை வந்து பார்த்திருக்க வேண்டும், ரொம்ப வேலையாக இருந்து விட்டேன்" என்றார்.

யாராவது என்னை ஜமீன்தார் என்று நினைத்துப் பேச ஆரம்பித்தால் எனக்கு உள்ளுக்குள் வெட்கமும் வெறுப்பும் ஏற்படுகிறது. அநேகமாக இவர்கள் எல்லோரும் ஏதாவது வேண்டியதைக் கேட்க வருவார்கள். ஆகையால் நான் அவர்களிடம் சுமுகமாகவே பேசுவதில்லை. அதே மாதிரியாக இவரிடமும் நான் "தாமதமாகி விட்டதற்கு நீங்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம். நீங்கள் வராவிட்டால் கூட நான் பெரிய குற்றமாக நினைக்கமாட்டேன், நான் அப்படிப்பட்ட மனிதனல்ல. ஆனால் உங்களுக்கு என்ன வேண்டுமோ?" என்று கேட்டேன்.

பிராமணன் வெட்கமடைந்து போய் "சந்தர்ப்பம் தெரியாமல் வந்து உங்கள் காரியத்தைக் கெடுத்துவிட்டேன். நான் இன்னமொரு சமயம் வருகிறேன்" என்று சொல்லி எழுந்து நின்றார்.

நான் வெறுப்படைந்து "என்னிடம் உங்களுக்கு என்ன ஆக வேண்டும். சொல்லுங்கள்?" என்று கேட்டேன்.

என்னுடைய மனோபாவத்தை அவர் சுலபமாக அறிந்து கொண்டார். சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு அமைதியாக "நான் சாமான்யமான மனிதன், என்னுடைய காரியமும் சாதாரணமானது. ஜமீன்தாரிணி அம்மாள் என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். அவர்களுக்கு ஏதாவது தேவையிருக்கலாம். எனக்கு ஒரு தேவையும் கிடையாது" என்றார்.

கடுமையான பதில்! ஆனால் முற்றிலும் உண்மை. நான் கேட்ட கேள்விக்கு அது சம்பந்தப்படாததுமில்லை. ஆனால் அங்கு வந்தது முதல், அந்தமாதிரியான பதிலைச்சொல்லும்படியான மனிதர்களில்லை; ஆகையால் அந்தப் பிராமணனின் பதிலைக் கேட்டு நான் ஆச்சரியம் மட்டும் அடையவில்லை. சட்டென்று கோபமும் அடைந்தேன். அதனால் என் தன்மை ஒரு சாதாரணமாகக் கோபமடையக் கூடியதல்ல. வேறெங்காவது இது மனத்தில் கூடத் தாக்கி இருக்காது. ஆனால் ஐஸ்வரியத்திற்கு பொறுமை என்ற வஸ்து பொருத்தமற்றதல்ல. அந்த ஐஸ்வரியம் பிறருடையதாய் இருந்து அதன் சம்பந்தம் ஏற்பட்டால் கூட அதனுடைய வாசனையைத் தவிர்க்க முடிவதில்லை. ஆகையால் தேவையான கோபத்துடன், பதில் சொல்ல வாயெடுக்கு முன் பக்கத்தில் இருந்த கதவைத் திறந்து கொண்டு ராஜலக்ஷ்மி தான் செய்து கொண்டிருந்த பூஜையைக் கூட முடிக்காமல் எழுந்து வந்துவிட்டாள். தூரத்திலிருந்தே அவருக்குப் பரபரப்புடன் நமஸ்காரம செய்து "அதற்குள்ளா புறப்பட்டு விட்டீர்கள், உட்காருங்கள். உங்களிடம நான் அநேக விஷயங்கள் பேசவேண்டியிருக்கிறது" என்று அவரைப் பார்த்துச் சொன்னாள்.

பிராமணன் மறுபடியும் உட்கார்ந்து "அமமா தாங்கள், என் குடும்பம் பலநாள் பட வேண்டிய கவலையைத் தீர்த்து விட்டீர்கள். நீங்கள் கொடுத்தனுப்பியிருப்பது இன்னும் பதினைந்து நாளைக்குப் போதும். ஆனால் இது அகாலமாகயிருக்கிறது. இப்பொழுது விரதம் நோன்பு ஒன்றும் கிடையாதே என்று என் மனைவி ஆச்சரியப்படுகிறாள்" என்றார்.

மிஸஸ் ரூஸ்வெல்டின் சிரத்தை

பிரிட்டனுக்கு சாமான் அனுப்பும் இயக்கத்தை அமெரிக்க ஜனாதிபதி மனைவி மிஸஸ் ரூஸ்வெல்ட் ஆரம்பிதது வைத்தார், எலிஸபெத் ராணிக்கு அவர் ஒரு வாழ்த்துச் செய்தி எழுதிக் கொண்டிருக்கிறார். அமெரிக்காவிலிருந்து பணமும் அனுப்பப் படுகிறது. (இ. என். பி.)

இந்தியா கவர்ன்மேண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பேற்ற வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical Dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3, வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்த்தர பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனும்.

வைத்திய ஸித்தர்ச்ரமம்,
25-B. யதோத்காரி கீழ மாடவீதி,
சின்ன காஞ்சீவரம்.

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை		ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனும். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தாவாதம் அனுப்பப் படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr S. H. KHAN, (S. M) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

உங்கள்
அபிமானம் பெற்ற கடை
வெள்ளி சாமான்கள்

- சமீபத்திய மோஸ்தர்
- ரகம்
- விலைக்கு உத்திரவாதம்.

ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனு பஜார், மதராஸ்.
போன் : 3268.

ஜப்பானுக்கு எதிர்ப்பு

ஜப்பானிய ஆக்ரமிப்பைத் தடுக்க ஹவாய் கடற்கரை யோரம் வைக்கப்பட்டிருக்க பெரிய பீரங்கிகள் (இ. என். பி.)

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே "உங்களுடைய மனைவி விரதம் நோன்பு முதலிய காரியங்கள் தானதருமத்தைப்பற்றிதான் கற்றிருக்கிறள் போலிருக்கிறது. ஆனல் அண்டை வீட்டுக்காரர்களுக்கு சன்மானமளிக்கும் காலா காலத்தைப்பற்றி அவள் என்னிடம் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று சொல்லுங்கள்'' என்ருள்.

"இவ்வளவு பெரிய சன்மானம், அதற்கக—''

பிராமணன் மேலே பேசவில்லை. ஆனல் அந்தப் பிராமணனுடைய மனதில் என்ன இருந்தது என்பது எனக்குத் தெரிந்து விட்டது. ராஜலக்ஷ்மியும் என்னிடமிருந்து தப்பாக நினைத்துக்கொண்டு அவரிடமிருந்து ஒரு பதிலை வாங்கிக் கட்டிக்கொள்வளோ என்று பயந்தேன். அந்த ஆசாமியைப் பற்றி ஒரு விதமாக எனக்குப் பரிச்சயம் ஏற்படவில்லை. என்னுளும் மற்றொரு விதமாக எனக்கு ஏற்பட்டுவிட்டது. அது என் முன்னிலையில் மறுபடி நேரிடக் கூடாது என்பது என் விருப்பம். ஆனல் இது மட்டும் எனக்குத் தெரியும். யாரும் ஒரு நாளும் ராஜலக்ஷ்மியை வாயடைக்கச் செய்ததில்லை. அதே மாதிரி தான் ஆயிற்று! இந்த அசட்டுக் கேள்வியை கூட அவள் தூரத் தள்ளிவிட்டு அதைக்கொண்டு "தர்க்காலங்கார மகாசயரே, உங்கள் மனைவி மகா கோபக்காரி என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கூப்பிடாமல் நான் எங்கும் போவதில்லை. இல்லாவிட்டால் நானே அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வேன்'' என்ருள்.

அவர்தான் யதுராத குசாரி என்று அறிந்து கொண்டேன். அவர் தன்னுடைய மனைவியின் சுபாவமான புகழ்படுவதைக் கேட்டதும் தன் சுபாவத்தை மறந்து 'ஆஹா' என்று உரக்கச் சிரித்து வெகு சந்தோஷமான மனதுடன் "இல்லை அம்மா- எதற்காகக் கோபிக்கப் போகிருள்? அவள் ரொம்ப நல்ல மாதிரி. நாங்கள் ஏழை. நீங்கள் வந்தால் தகுந்த மரியாதை செய்ய எங்களால் முடியாது. அவளே இங்கு வருவாள். இன்னமொரு சந்தர்ப்பம் வாய்த்தால் நானே அவளை இங்கே கூட்டிக்கொண்டு வருகிறேன்'' என்ருர்.

"தர்க்காலங்கார மகாசயரே, உங்களுக்கு எவ்வளவு மாணவர்கள்?''

"இந்தே பேர்தான். இங்கே அதிகம் கிடைக்கமாட்டார்கள். சொல்லிக்கொடுப்பது என்பது பெயருக்கு மட்டும் தான்.''

"எல்லோருக்கும் சாப்பாடு துணிமணி கிடைக்கிறதா?''

"இல்லை. விஜயன் எங்கள் அண்ணவுடன் அடுத்த கிராமத்தில் இருக்கிறன். மூன்று பேர் தான் என்னுடன் இருக்கிறர்கள்''

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு மிகவும் அன்பு ததும்பிய குரலில் "இந்த கஷ்டகாலத்தில் அவர்களைப் போஷிப்பது கூடச் சாதாரண காரியமில்லை தர்க்காலங்கார மகாசயரே'' என்ருள்.

அவள் உபயோகித்த அந்தக் குரலின் கனிவால் ஒரு பிரயோஜனம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் ரோஷக்காரரான அந்தப் பிராமணர் கோபமடைந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ராஜலக்ஷ்மியினுடைய ஹிதமான மொழியில் அவர் மனது அந்தப் பக்கமே போகவில்லை. வெகு சகஜமாக வீட்டிலுள்ள சிரமத்தையும் ஏழ்மையையும் பற்றிச் சொல்லலாஞர். "நாங்கள் எப்படிக் காலங்கழித்திருக்கும் என்பது எங்கள் இருவருக்குந்தான் தெரியும். ஆனல் பகவானுடைய உதயஸ்தமனம் மட்டும் நிற்கவில்லை! என்ன உபாயம்தான் இருக்கிறது. அத்தியயனமும், அத்தியயனம் செய்து வைப்பதும் பிராமணனுடைய வேலை. ஆசார்யனிடத்தில் வரும் பிள்ளைகள் அவனிடம் சிறிது காலம் ஒப்படைக்கப்பட்ட தனங்கள்—என்னுடைய ஒரு நாள் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்'' என்று சொல்லி சிறிது நிதானித்து "ஒரு சமயம் இந்த அரசனுடைய பொறுப்பாக இருந்தது. இப்பொழுது காலம் முற்றிலும் மாறி விட்டது. அந்த அதிகாரமும் அவர்களிடத்தில்லை. அந்தக் கொடையும் போய்விட்டது. பிராஜைகளுடைய ரத்தத்தை உறிஞ்சுவதைத் தவிர அவர்களுக்கு இப்பொழுது வேறு வேலையில்லை, அவர்களை அரசர்கள் என்று சொல்லுவதற்கே வெறுப்பாக இருக்கிறது'' என்ருர்.

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே "ஆனல் அவர்களில் யாராவது ஒருவர் பிராயச்சித்தம் செய்து கொள்ள விரும்பினுல் ஏதாவது தடையுண்டா?'' என்று கேட்டாள்,

குசாரி வெட்கமடைந்து தாமும் சிரித்துக்கொண்டே "நான் வேறு ஏதோ எண்ணிக் கொண்டிருந்து விட்டதால் நீங்கள் சொன்னதை நான் கேட்கவில்லை, ஆனுல் தடை எதற்காகச் செய்ய வேண்டும்? சரி என்று தோன்றுவதை நீங்கள் செய்யத்தானே வேண்டும்'' என்ருர்.

"நான் பூஜை புனஸ்காரம் செய்கிறேன். ஆனுல் ஒரு மந்திரம் கூடச் சரியாக உச்சரிக்கத் தெரியவில்லை. அதை நீங்கள் செய்ய வேண்டும். அதற்காகத் தான் சொல்லி அனுப்பினேன்.''

குசாரி சிரித்துக் கொண்டே "அப்படியே ஆகட்டும் அம்மா'' என்று சொல்லி விட்டு நாழிகை ஆகிவிட்டது என்ற ஜாடையாக ஆகாயத்தைப் பார்த்து எழுந்தார், ராஜலக்ஷ்மி அவருக்கு பூமியில் விழுந்து நமஸ்கரித்தாள். போகும் பொழுது நானும் ஒரு விதமாக நமஸ்காரத்தைப் போட்டேன்.

அவர் போனதும் ராஜலக்ஷ்மி "இன்று நீ காலாகாலத்தில் குளித்துச் சாப்பிட்டுவிட வேண்டும்'' என்ருள்.

"ஏன்?''

"மத்தியானம் ஒரு தடவை சுநந்தை வீட்டுக்குப் போய் விட்டுவர வேண்டும்.''

நான் கொஞ்சம் ஆச்சரியமடைந்து "நான் எதற்கு? கூட வருவதற்குத்தான் ரதன் இருக்கிருனே?'' என்றேன்.

ராஜலக்ஷ்மி தலையை ஆட்டி "அவன் இனிமேல் கூட வரக்கூடாது, நீ கூடவராமல் நான் எங்கும் காலடி எடுத்து வைக்க மாட்டேன்'' என்ருள்.

"நல்லது அப்படியே ஆகட்டும்'' என்றேன் நான்.

8

ஒருநாள் சுநந்தை என்னை அண்ணு என்று அழைத்தாள் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அவள் அவ்வளவு எனக்கு நெருங்கினவளாகி விட்டாள். அது எப்படி நேர்ந்தது என்பதை முற்றிலும் விவரித்துச சொல்லாவிட்டால் நான் சொல்லுவதை நம்புவதே கடினமாக இருக்கும். ஆனுல் நாங்கள் முதன்முதல் சுநந்தித்த கதையையே நம்பமுடியுமா என்பது சந்தேகம். இது விசித்திரமாக இருக்கிறதே' என்று சிலர் நினைக்கலாம். தலையை அசைத்து அதெல்லாம் வெறும் கதைதானே என்று நாங்களும் வங்காளிகள் தான். வங்காளத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தான். ஆனுல் சாதாரண குடும்பஸ்தனுடைய வீட்டில் இந்த மாதிரி நடைபெறுவதை நாங்கள் பார்த்ததே கிடையாது. என்றும் சிலர் சொல்லலாம். இருக்கலாம். ஆனுல் அதற்குப் பதிலாக நான் இதுதான் சொல்லமுடியும். நானும இந்த தேசத்து மனிதன் தான்! சுநந்தையைப்போல வேறு பெண்ணை நானும் பார்த்ததில்லை தான். ஆனுல் இது என்னமோ உண்மை.

ராஜலக்ஷ்மி உள்ளே நுழைந்தாள். நான் அவர்களுடைய பாழடைந்த வீட்டின் சுவரோரம் நின்றுகொண்டு எங்காவது கொஞ்சம் நிழல் இருக்குமா என்று பார்த்துக்கொண்டிருந்தேன். அதற்குள் ஏழெட்டு வயது பையன் ஒருவன் ஓடிவந்து "வாருங்கள். உள்ளே வாருங்கள்'' என்ருன்.

"தர்க்காலங்கார மகாசயர் எங்கே? சிரமபரிகாரம் செய்துகொண்டிருக்கிருர் போலிருக்கிறது.''

"இல்லை, அவர் வெளியே போயிருக்கிருர். அம்மா இருக்கிருள். வாருங்கள் உள்ளே'' என்று சொல்லி அவன் வழி காட்டிக்கொண்டு உள்ளே போக ஆரம்பித்தான். நானும் தீர்மானமற்று அவன் பின்னுல் போனேன். ஒரு காலத்தில் அந்த வீட்டுக்கு வாசற்படி கதவு எல்

விஷக்கடி
பூச்சிக்கடி
சீக்கிரம்
குணமாகும்.

ஜாம்-பெக் உலகப் பிரசித்தி பெற்ற கிருமிநாச குணமளிக்கும் நிவாரணி

பூச்சிகள் கடித்தால் உடனே விஷம் உள்ளே பரவுகின்றது. கடுமையாக மாறி தொந்திரவு ஏற்படுமுன் புண்பட்ட இடத்தில ஜாம்-பெக் தடவுங்கள். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில்கள் சருமத்திற்குள் சென்று, வீக்கம், வலியைப் போக்கி, சீழ் வடிதலை நிறுத்துகின்றது. விஷமுள்ள கிருமிகள் முதலியவற்றை ஒழித்து, ஜாம்-பெக் குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1

ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்போழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.



ZAM-BUK

மிருகக் கோழுப்பற்றது.

லாம் எங்கோ இருந்தது போலும். இப்பொழுது அவற்றின் அடையாளம் கூடத் தெரியவில்லை. ஆகையால் முன்னே அரிசி குத்தும் இடமாக இருந்த ரேழியின் வழியாக உள்ளே போனதால் அந்த வீட்டினுடைய அந்தஸ்து ஒன்றும் குறைவுபடவில்லை. தாழ்வாரத்திற்குப் போனதும் சுநந்தையைக் கண்டேன். பத்தொன்பது இருபது வயது கொண்ட மாநிறமான பெண். அந்த வீட்டைப்போலவே அவளும் ஒருவிதமான அலங்காரமுமில்லாமல் இருந்தாள். எதிரே தாழ்வாரத்தின் ஒரு மூலையில் அவளுக்காக நெல் வாணலியில் இருந்தது, ராஜலக்ஷ்மியைப் பார்த்த உடன்தான் அவள் எழுந்து முன் வந்திருக்க வேண்டும்: பழய கம்பளி ஒன்றை எனக்கு ஆசனமாகப் போட்டு நமஸ்கரித்து விட்டு "உட்காருங்கள்'' என்ருள்.

பையனைப் பார்த்து "அஜேயா. ஹுக்காவில் நெருப்பு இருக்கிறது. கொஞ்சம் புகையிலை எடுத்துப் போட்டுக் கொடு'' என்று உத்திரவிட்டாள் சுநந்தை.

ராஜலக்ஷ்மி முன்பே தரையில் உட்கார்ந்து விட்டாள். அவளைப் பார்த்துச் சுநந்தை கொஞ்சம் வெட்கம் கலந்த சிரிப்புடன் "ஆனுல் நான் உங்களுக்கு வெற்றிலை கொடுக்க முடியவில்லை. வீட்டில் வெற்றிலை இல்லை'' என்ருள்.

இந்தப் பேச்சிலிருந்து நாங்கள் யார் என்று அஜேயன் அறிந்து கொண்டு விட்டான். தன்னுடைய குரு பத்தினி சொன்னதைக் கேட்டதும் அவன் மிகுந்த பதட்டத்துடன் "இல்லையா? அப்படியானுல் இன்று எதிர்பாராமல் வெற்றிலை ஆகிவிட்டதா அம்மா?'' என்ருன்.

சுநந்தை அவன் முகத்தைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு "இன்று திடீரென்று ஆகிப்போய் விடவில்லை அப்பா. என்ருவது இருந்ததா வீட்டில்?'' என்று சொல்லிச் சிரித்து விட்டு ராஜலக்ஷ்மியைப் பார்த்து "போன ஞாயிற்றுக் கிழமை சின்ன மஹாராஜா வரப்போகிருர் என்று கேள்விப்பட்டு காலணுவுக்கு வெற்றிலை வாங்கினேம். அது பத்து நாளைக்கு முந்திய சமாசாரம். இப்பொழுது வெற்றிலை ஆகப் போய் விட்டதா என்று எங்கள் அஜேயனுக்கு ஒரே அடியாக ஆச்சரியம் ஏற்பட்டுப் போய் விட்டது. பாவம்'' என்று சொல்லி விட்டு அவள் மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தாள்,

அஜேயன் மிகவும அசடு தட்டிபோன முகத்துடன் "ஓகோ அப்படியா! அப்படியில்லாவிட்டால்—இல்லை என்ருல்—'' என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்தான்.

ராஜலக்ஷ்மி சிரித்தவண்ணம் கனிந்த குரலில் "அவன் புருஷப் பிள்ளைதானே அம்மா. வீட்டில் என்ன இருக்கிறது, இல்லை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?'' என்ருள்.

அஜேயன் தனக்குச் சகாயமாக ஒரு ஆஸாமி வந்து விட்டதைக் கண்டு "பாருங்கள் பாருங்கள், அம்மா நினைக்கிருள்—'' என்று ஆரம்பித்தான்.

சுநந்தை சிரித்துக்கொண்டு "ஆமாம் அம்மா நினைக்கிருள்-இல்லை அக்கா எங்கள் வீட்டில் அஜேயன் தான் நிர்வாகம் செய்பவன். அவனுக்கு எல்லாம் தெரியும். ஆனுல் இந்த ஒரு கஷ்டம் தான் இருக்கிறது எனக்கு டம்பமெல்லாம்பிடிக்கிறதில்லை'' என்ருள்.

"ஏன் பிடிக்கிறதில்லை? ஆஹா டம்பம் எவ்வளவு நல்லது! அது தான் எங்களுக்கு-'' என்று சொல்லிக்கொண்டே பேச்சை முடிக்காமல் அவன் எனக்காக ஹுக்கா தயார் செய்ய வெளியே போய்விட்டான்,

"வைதீகப் பிராமணன்வீட்டில் மஞ்சள் யதேஷ்டமாக இருக்கும் அத்துடன் ஒன்று அரை பாக்கு ஏதாவது கிடைக்கிறதா என்று பார்க்கிறேன்'' என்று சுநந்தை போக யத்தனிக்கும் பொழுது ராஜலக்ஷ்மி சட்டென்று அவள் புடவையைப் பிடித்திழுத்து "அதெல்லாம் இப்பொழுது வேண்டாம். நீ கொஞ்சம் உட்கார். ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்'' என்று சொல்லி அவளைப் பலவந்தமாகப் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டாள்.

அதிதி ஸத்காரம் செய்யவேண்டிய கவலையிலிருந்து அவள் விடுபட்டதும் இருவரும் மௌனமாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள். அந்த சமயத்தில் நான் மறுபடியும் சுநந்தையை ஒருதரம் பாந்த்தேன். வாஸ்தவமாகவே வறுமை என்ற வஸ்து வாழ்க்கையில் எவ்வளவு அர்த்தமற்றவனுகவும உபயோகமற்றவனுகவும செய்து விடுகிறது என்பதை யாரால் மறுக்க முடியும்! இவள் சாதாரணமான வங்காளியினுடைய வீட்டிலிருக்கும் பெண்போலத்தான் இருந்தாள். வெளிக்கு வேருென்றும் விசேஷமாகத் தெரியவில்லை—அழகுமில்லை! ஆடை ஆபரணங்களும் கிடையாது! அந்த இடிந்த வீட்டில் எங்கு பார்த்தாலும் இல்லாமைதான் நிழல் தட்டி நின்றது. ஆனுல் அது வெறும் சாயை தான், அதற்கு மேல் அது ஒன்றுமில்லை என்பதும் உடனுக்குடன் மனதில் படாமலில்லை. இல்லாமையின் கஷ்டத்தை இந்தப் பெண் தன் கண்களில் கொஞ்சம்கூடத் தென்படாமல் விலக்கி விட்டாள். பலவந்தமாக உள்ளே பிரவேசிப்பதற்குக் கூட இல்லை, ஆனுல் சில மாதங்களுக்கு முன்பு கூட இவளுக்கு எல்லாம் இருந்தன—வீடு வாசல், உற்ருர் உறவினர்—ஒன்றும் குறைவில்லை. ஒரு பெருத்த அநியாயத்தை ஆட்சேபித்து மேலும் கடுமையான சிரமத்தை ஏற்று எல்லாவற்றையும் துறந்து விட்டு வந்துவிட்டான். ஒரு கிழிந்த வஸ்திரத்தைத் துறப்பதற்குக் கூடச் சில சமயங்களில் மனம் ஸ்திரப்படுவதில்லை. ஆனுல் அவளுடைய கடும் சித்தத்தின் தன்மை அவளிடம் எங்கும் தென்படவில்லை.

ராஜலக்ஷ்மி திடீரென்று என்னைப் பார்த்து "நான் என்னமோ சுநந்தையைப் பெரிய மனுஷி என்று நினைத்திருந்தேன். ஐயையோ ரொம்பச் சின்னப் பெண்'' என்ருள்.

அப்பொழுது அஜேயன் குருதேவருடைய ஹுக்காவில் புகையிலையை நிரப்பி எடுத்து வந்து கொண்டிருந்தான் சுநந்தை அவனைச் சுட்டிக் காட்டி "சிறு வயது என்ருல் எப்படி இருக்கும்! எவளுக்கு அவ்வளவு பெரிய பையன் இருக்கிருனே அவளுக்கு வயது குறைவாகவா இருக்கும்?'' என்று சொல்லி விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள்.

அந்தச்சிரிப்பு சாதுர்யமாகவும் களங்கமற்றதாகவும் இயற்கையாகவுமிருந்தது. அஜேயன் தானுகவே அடுப்பிலிருந்து நெருப்பு எடுப்பானு இல்லையா என்பதைப் பற்றிக் கேலியாக "அப்பா, நீ எந்த குலத்தைச் சேர்ந்த பையன் தெரியுமா, அடுப்பைக் கிண்டுவது உன் வேலையல்ல.'' என்று சொல்லிவிட்டு, உண்மையில் அவன் எரியும் அடுப்பில் இருந்து நெருப்பு எடுக்கத் தெரியாதவன் என்று சொல்லி அவள தானே சென்று நெருப்புத் துண்டு ஒன்றை எடுத்து வந்து அஜேயனிடம் கொடுத்து விட்டுச் சிரித்த முகத்துடன் முன்னிருந்த இடத்திற்கு வந்து உட்கார்ந்தாள்.

சாதாரண கிராமாந்திரப் பெண்ணிற்கு இயற்கையான வேடிக்கை தமாஷ் நிறைந்த அவள் பேச்சு எங்கும் ஒன்றும் விசேஷமாகத் தென்படவில்லை. ஆனுலும் அதன் மூலம் அவளுடன் ஏற்பட்ட பரிச்சயம் சாமான்யமானதல்ல. அந்த விசேஷத்திற்குக் காரணம் மறு நிமிஷமே எங்கள் இருவரிடையே வெளியாயிற்று.

அஜேயன் என் கையில் ஹுக்காவைக் கொடுத்துவிட்டு "அம்மா, ஆனுல் அதை எடுத்து வைத்து விடட்டுமா'' என்ருன்.

சுநந்தை அனுமதி அளித்த உடன் அவன் என்ன செய்தான் என்பதைப் பார்த்தபொழுது அருகில் புஸ்தகப் பலகையின் பேரில் ஒரு புஸ்தகம் திறந்து கிடந்ததைக் கண்டேன். அதுவரையில் யாரும் அதைப்பார்க்கவில்லை. அஜேயன் அதை மூடி வைத்துக்கொண்டே வருத்தம் நிறைந்த குரலில் "அம்மா உற்பத்திப் பிரகரணம் இன்று கூட முடியவில்லையே, இனி எப்பொழுது முடியப்போகிறது? முடியவே முடியாதோ?'' என வினவினுன்.

ராஜலக்ஷ்மி "அதுஎன்ன புத்தகம் அஜேயா?''என்றுகேட்டாள்

"யோகவாஸிஷ்டம!''

"அம்மா, அவளுக்கு நெல் வருக்கிற போது அவளுக்குப் படித்துக் காண்பிப்பதா?''

"இல்லை. நான் அம்மாவிடம் படிககிறேன்.''

அஜேயன் இந்த மாதிரி கபடமற்று பளிச்சென்று பதில் சொன்னதும் சுநந்தை திடீரென்று வெட்கத்தால் முகம் சிவந்து அவசர அவசரமாக "படிப்புச் சொல்லிக்கொடுக்கும் படியாக ஒன்றும் அவ்வளவு வித்தை அவன் தாயாருக்குக் கிடையாது. இல்லை அக்கா, மத்தியானம் தனியாக வீட்டு வேலை செய்து கொண்டிருக்கிறேனு. அவர்கள் சும்மாயிருக்கிறதில்லை. புஸ்தகத்தைக் கொண்டு வந்து அவர்கள் என்னென்னமோ படிக்கிருர்கள். நான் சரியாகக் கூடக் கேட்கிறதில்லை, அவனுக்கென்ன வேலை தோன்றினதை எல்லாம் சொல்லுகிருன்'' என்ருள்.

அஜேயன் தனது யோகவாஸிஷ்டத்தை எடுத்துக்கொண்டு போனுன். ராஜலக்ஷ்மி யோசனையில் ஆழ்ந்த முகத்துடன் ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு திடீரென்று பெருமூச்சு ஒன்று விட்டு விட்டு "வீடு அக்கம் பக்கமாக இருப்பதால் நானும் ஒரு சிஷ்யையாக இருக்கிறேன். அம்மா எனக்கு ஒன்றுமே தெரியாது. தின சரி பூஜை மந்திரம்கூட சரியாக உச்சரிக்கத்தெரியாது''என்ருள்.

மந்திர உச்சரிப்பு விஷயமாக அவள் புகார் செய்ததை நான் அடிக்கடிக் கேட்டிருக்கிறேன். எனக்கு அது வழக்கமாகப்போய் விட்டது. ஆனுல் சுநந்தை முதல் முதல் கேட்டுக்கூட ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. கொஞ்சம் சிரித்தாள். ஆனுல் அவள் என்ன நினைத்தாளோ யார் கண்டார்கள்? மந்திரத்தின் அர்த்தமும் பிரயோகமும் என்ன என்பதை அறியாதவள் வெறும் அர்த்தமற்ற உச்சரிப்பிற்கு ஏன் இவ்வளவு கவலைப்படுகிருள் என்று நினைத்தாளோ; அல்லது, அது இவளுக்கு மட்டும் தனிக் குறையில்லை, சாதாரணமாகப் பல வங்காள ஸ்திரீகள் சொல்வதைக் கேட்டு அதற்குப் பதில் சொல்வது உபயோகமற்றது என்று நினைத்தாளோ! அல்லது இப்படி யெல்லாம் ஒன்றுமில்லாமல் இயற்கையான வினயத்திலும் மௌனமாக இருந்திருக்கலாம். அப்படியிருந்தும், அவள் இன்று முதல் முதலாகப் பார்த்த அதிதியை மிகவும் சாதாரணமான பெண் என்று எண்ணி சிறிதாக நினைத்து விட்டால் பிற்காலத்தில் ஒரு நாள் மிகுந்த பச்சாதாபத்துடன் அவள் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும், என்றும் அப்பொழுது என்னுல் எண்ணுமல் இருக்க முடியவில்லை.

நான் எண்ணியதை ராஜலக்ஷ்மி நொடி நேரத்தில் அறிந்துகொண்டாள். அவளுடையமனத்தில் இருப்பதை யாராலும் கண்டறிய முடியாது என்பது எனக்குத் தெரியும். மந்திர தந்திரம் கூடப் பலிக்காது.

(தொடரும்)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.



கே.சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

மூன்று தலை முறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.



WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

உலகம் சூனியம்

★

சிறு கதை - வெங்கடாசலம்

ஹேமசந்திரனும் அவன் நண்பனும் தங்கள் ஊருக்கு அடுத்த குளக்கரையில் மரத்தடியில் அமர்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தி மயங்கும் சமயம், காற்று லேசாக வீசிக்கொண்டிருந்தது. குளத்தில் நிரம்பியிருந்த தண்ணீரில் சிறு சிறு அலைகள் எழும்பி கரையில் வந்து மோதியடித்துகொண்டிருந்தன. கரையைச் சுற்றிலுமிருந்த பெரிய மரம்கூட அந்த நேரத்தின் இன்பத்தை ரஸிப்பவைபோல கிளைகளை ஆட்டிக்கொண்டிருந்தன. ஹேமசந்திரன் தனக்குப் பிரியமான பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்தான். அவன் நண்பன் குளத்தில் விளையாட்டாக சிறு சிறு கற்களை எடுத்துப்போட்டுக் கொண்டிருந்தான்.

சற்று தூரத்தில் இரண்டு பேர்கள் அந்த நண்பர்களை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தார்கள். ஒரு ஸ்திரீ, ஒரு மனிதன். அந்த மனிதனுக்கு 50 வயதும், ஸ்திரீக்கு 40 வயதுமிருக்கலாம். மிக்க பதட்டத்தோடு வந்த அவர்கள் பக்கத்தில் வந்து அந்த நண்பர்களிருவரையும் பார்த்து ஏமாற்றமடைந்து விட்டார்கள். ஹேமசந்திரன் அவர்களைப் பார்த்து "யாரைத் தேடுகிறீர்கள்?" என்ருன். "ஐயோ, எங்கள் பையன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுப்போய் மூன்று நாளாகிறது. எங்கிருக்கிருனென்று தெரியவில்லையே. ஊரெல்லாம் சுற்றியலைகிறோம்" என்ருர்கள்.

"சிறு பையனு? வயது என்ன இருக்கும்? வீடு தெரிந்து வந்துவிடுவானே?" என்று கேட்டான்.

"பையனுக்கு 22 வயது இருக்கும். உங்களைப் போலவேதானிருப்பான். எங்கேயாவது பார்த்தீர்களா?" என்ருர்கள். அவன் 'இல்லை' யென்று தலையாட்டவும் கையைப் பிசைந்துகொண்டே போய்விட்டார்கள். அவர்கள் சென்ற பின்னர் ஹேமசந்திரன் பக்கத்திலிருந்த நண்பன் "22 வயதுக் குழந்தையை இவ்வளவு கவலையோடு தேடும் இந்த முட்டாள் பெற்றோர்களை என்னவென்று சொல்வது?..." என அவர்களை நிந்திக்க ஆரம்பித்தான். ஹேமசந்திரன் அவனைத் தடுத்து, "அதுதான் பெற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கு முள்ள வித்தியாசம். 22 வயதுப் பையனுயிருந்தாலும் அவர்களுக்குப் பச்சைக் குழந்தை தான். இரண்டு வருஷத்திற்கு முன்னுல் ராமநாதன் என்ற என் நண்பன் இந்தக் குளக்கரையில், அதோ அந்த இடத்தில் செத்துக் கிடந்தான். அவனைத் தேடுவாரில்லை, அவன் கதையை நினைத்துக் கொண்டால், பாவம், அவனுக்கும் பெற்றோர்களிருந்தால் இப்படித்தானே அலைந்து திரிந்து கொண்டிருப்பார்கள் என்ற எண்ணம் வருகிறது எனக்கு" என்று துக்கத்தோடு சொன்னுன்.

"ராமநாதனு? உன் நண்பனு? எனக்கு ஒன்றும் அவனைப்பற்றித் தெரியாதே"

"நீ ஹைஸ்கூல் படிப்போடு நின்று விட்டாய் அவன் என் காலேஜ் நண்பன். அந்தச் சோகக்கதையை இப்போது நினைத்துக் கொண்டாலும் பரிதாபமாயிருக்கிறது"

"அப்படியானுல் சொல், கேட்கிறேன்" என்ருன், ஹேமசந்திரன் ஆரம்பித்தான்:—

ராமநாதன் பிறந்து ஒரு வருஷம் கூட ஆகவில்லை: மாரடைப்பினுல் அவன் தகப்பனுர் இறந்து போனுர், அடுத்த வருஷமே அவன் தாயும் அதே கவலையால் இறந்தாள். அந்தம்மாளின் சகோதரர் கோமதி நாயகம் செட்டியார் அவனை எடுத்து வளர்த்து வந்தார். அவருக்கு குணமணி என்ற ஒரு சிறு பெண்குழந்தை இருந்தது. இரண்டு பேரையும் ஒருவித வித்தியாசமுமில்லாமல் கவனித்து வந்தார். அவர்களும் அவ்விதமே சகோதரன் சகோதரி போல வளர்ந்தார்கள். விளையாட வெளியே போனுலும், வீட்டினுள் சாப்பிட அமர்ந்தாலும், ஒருவரை ஒருவர் நிழல்போல் பின்பற்றி வந்தனர். சில சமயங்களில் இருவருக்கும் சண்டை மூண்டுவிடும், செட்டியாரின் தாயார் ஒரு கிழவி இருந்தாள். அவள் எங்கும் வெளியே புறப்பட ஆரம்பித்தால் அவர்கள் இருவரும் அவளைப் பின்தொடர்வார்கள். ராமநாதனை அவள் இடுப்பில் தூக்கிவைத்துக்கொண்டால் குணமணி அழ ஆரம்பித்து விடுவாள். அவனை இறக்கி விட்டுவிட்டு குணமணியைத் தூக்கினுல் அவன் தரையில் புரண்டு காலையும் கையையும் உதைத்துக் கொண்டு அழுவான். இரவில் அக்கிழவிக்கு இருபக்கத்திலும் இரண்டு பேரும் படுத்துக் கொண்டு அவள் சொல்லும் கரடி, புலி, சிங்கக் கதைகளையெல்லாம் கேட்டுக்கொண்டே தூங்கிவிடுவார்கள்.

குணமணிக்கு 6-வயது இருக்கும். ராமநாதன் இரண்டு வருஷம் மூத்தவன். ஒரு நாள் இருவரும் பள்ளிக்கூடத்திலிருந்து வருகையில் ஏதோ சிறு சண்டை ஏற்பட்டு அவள் அவனுடைய ஸ்லேட்டைப் பிடுங்கித் தூர வீசி எறிந்து விட்டாள். அது உடைந்து நொறுங்கி விட்டது. கோபம் முட்டப்பட்ட அவன் அவள் ஜடையைப் பிடித்து இரண்டு சுண்டுசுண்டி இழுத்து விட்டான். 'கோ'வென அலறிக் கொண்டு வீட்டிற்கு ஓடி தன் தாயார் மீனுக்ஷியிடம் சொல்லி விட்டாள். "அந்தத் தடிப் பயலோடே சேராதே, சேராதே என்று எத்தனை தடவை சொல்றது. இனிமேல் அவனேடே பேசறதைப் பார்த்தேனே உன் முழியைத் தோண்டி விடுவேன்" என்று மிரட்டி இரண்டு அடியும் கொடுத்தாள் மீனுக்ஷி. அவனுக்கும் சாபம் கிடைத்தது. அன்று முழுதும் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை: பள்ளிக்கூட விடுமுறை. காலையில் பக்கத்து விட்டில் போய் ராமநாதன் விளையாடிக்கொண்டிருக்கையில் அந்த வீட்டிலிருந்தவர் இரண்டு பெப்பர்மிண்டு கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு ஓடி வந்த அவன், 'குணம், குணம்' என்று சப்தம் போட்டுக் கொண்டு வீடெல்லாம் சுற்றியலைந்தான், அவள் கண்ணில் படவுமில்லை. பதிலும் பேசவில்லை. கடைசியாக அடுப்பறைக்குள் எட்டிப்பார்த்தான். தன் தாயின் பக்கத்தில் அமர்ந்து வெளியே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அடே, இங்கேயா இருக்கிறே. பக்கத்து வீட்டு மாமா மிட்டாய் குடுத்தாரு. இந்தா ஒனக்கு ஒன்னு" என்று கையிலிருந்த மிட்டாயைக் காட்டினுன். அவள் வரவில்லை. தன் தாயின் முகத்தைப் பார்த்தாள், மீனுக்ஷியம்மாள் காதிலும் அது விழுந்துவிட்டது. "உன்னுடைய மிட்டாயை நீயே தின்னு போடா. இனிமே இவ் கூடப் பேசவும் கூடாது. சேரவும் கூடாது" என்று கடுகடுப்பாய் பேசினுள். ராமநாதனுக்கு முகம் சுறுங்கிவிட்டது. அவனையுமறியாமல் கண்களில் நீர் துளிர்த்தது. ஏங்கிப் போய் அவ்விடத்தை விட்டகன்ருன், தெருத் திண்ணையில் வந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டே இருந்தான். அவன் கையிலிருந்த மிட்டாய் தண்ணீராய் இளகிச் சொட்டிக்கொண்டிருந்தது.

சற்றுநேரத்திற்குப்பின் அவன் முதுகில் 'பட்' என்று ஒரு அடி விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். குணமணி! அவன் அழுகை மாயமாய் மறைந்துவிட்டது, இருவரும் சப்தமிட்டுச் சிரித்தார்கள், தன் கையில் கரைந்துபோயிருந்த மிட்டாயை அவள் வாயில் திணித்தான், இதையெல்லாம் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மீனுக்ஷியம்மாள் குழந்தைகளின் அன்பை வியந்தும் தன்னுடைய குறுகிய மனப்பான்மையைக் குறித்துத் தன்னையே நொந்துகொண்டுமிருந்தாள், இரவில் செட்டியார் வந்ததும் நடந்த விஷயத்தைச் சொன்னுள், "பாவம், அவனை ஏன் அழவிட்டாய், நம் குழந்தையோடு அவனும் ஒருவன், வயது வரும் வரைக்கும் இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போலிருக்கட்டும், கடைசியில் கணவனும் மனைவியுமாகப் போகிறவர்கள், அவர்கள் விஷயத்தில் நீ ஏன் போய்த் தலையிடுகிருய்?" என்று கிண்டலாகச் சொன்னுர்,

எட்டு வருஷங்கள் ஓடிமறைந்தன, குணமணி பெரிய பெண்ணுகிவிட்டாள்! ராமநாதன் ஹைஸ்கூல் படிப்பின் கடைசி வகுப்பில்—பத்தாம் வகுப்பில்—வாசித்துக்கொண்டிருந்தான், அவளோ அதற்குமேல் பள்ளிக்கூடம் போக முடியாமல் வீட்டில் சிறைப்பட்டாள்! அரைப் பரீக்ஷையில் அவன் சில பாடங்களில் மார்க்குக் குறைவாக எடுத்திருந்தான், "இந்த வருஷம் பரீக்ஷையில் தேறினுல்தான் குணமணியை உனக்குக் கலியாணம் செய்து கொடுப்பேன், இலலாவிட்டால் என்னிஷ்டப்படி வேறு யாருக்காவது கொடுத்து விடுவேன்" என்று எச்சரிக்கை செய்தார் செட்டியார், இதுவரை தன் உள்ளத்திற்கு உவகையூட்டிவந்த ஒரு பொருள் தன்னைவிட்டு மறைந்துவிடுமோ என்று பயந்த ராமநாதன் அன்று முதல் வேறு எதிலும் தன் கவனத்தைச் செலுத்தாமல் படிப்பிலேயே ஆழ்ந்துவிட்டான், குணமணியிடம் கூடச் சரியாய்ப் பேசுவதில்லை, அவளும் பெண்களுக்குள்ள இயற்கைச் சுபாவத்திற்கிணங்க அவனிடம் அதிகமாய் நெறுங்கிப் பழகுவதில்லை, அந்த வருஷம் முதல் மாணவனுகத் தேறிவிட்டான், அவன் மனதிலிருந்த பாரமும் நீங்கியது;

செட்டியார் பெரிய பணக்காரரானபடியாலும், அவருக்கு ஆண் குழந்தையே இல்லாதபடியாலும் ராமநாதனைக் கல்லூரிப் படிப்புக்கும் அனுப்பினுர். இந்த ஊரில் மேல்படிப்பிற்கு இடமில்லையாதலால் திருச்சிக்கு அவன் போகவேண்டியதா

"அத்தான் நேரமாகிறது. நான் போகிறேன்" என்ருள் குணமணி. "ஆம். உன் கால்கள் நோகும். போ! இதோ நானும் போகிறேன். இன்று சாயந்திரம் என்னைப் பற்றியே இந்த ஊரில் பேச்சு நடக்கும்...." என்ருன் ஹேமசந்திரன். "ஏன், என்ன செய்யப் போகிறீர்கள்" என்று பயத்தோடு அவள் கேட்டாள். அவன் பதில் சொல்லாமல் போய்விட்டான்! ஹேமசந்திரன் கூறியதன் கருத்தென்ன? அவன் மனதில் இருந்த உத்தேசம் எது? அவனைப்பற்றி மற்றவர் பிரஸ்தாபிக்கும்படி அவன் செய்த காரியம்தான் யாது? இந்தக் கதையில் இந்த விவரத்தைக் காண்பீர்கள். வெகு அழகான வாழ்க்கைச் சித்திரம்!

காண்டர்பரி ஆர்ச் பிஷப் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாக பிஷப்கள் அடங்கிய சபையில் அறிவித்தார். மாஜி ஆர்ச் பிஷப் டாக்டர் காஸ்மோ லாங் இப்போது பிரபுவாக கப்பட்டிருக்கிறார். (இ. என். பி.)

யிற்று. பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது ஓர் நாள் காலை ஹாஸ்டல் பியூன் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். நான் அப்போது அவன் பக்கத்தில் தானிருந்தேன். "யாரிடமிருந்து வந்திருக்கிறது?" என்று கேட்டேன். "என் மாமாவின் கையெழுத்துமாதிரிதான் இருக்கிறது. குணமணியின் விவாஹத்தைப் பற்றித்தானிருக்கும். எனக்கு எப்போது விடுமுறையாரம்பமாகும், கல்யாணத்தை எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம், என்ற விபரங்களுக்குத்தான் எழுதியிருப்பார்..." என்று சொல்லிக் கொண்டே கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அவன் முகம் சிறிது சிறிதாக மாறுபட்டு வந்தது. கடிதத்தைப் படித்து முடித்ததும் பெருமூச்சு விட்டு என்னைப் பார்த்தான். "என்ன சமாச்சாரம்" என்று ஆவலோடு கேட்டேன். அவனால் பதில் கூடச்சொல்ல முடியவில்லை. கடிதத்தை என்னிடமே கொடுத்து விட்டான்.

"நண்பன் ராமநாதனுக்கு, உன் மாமன் மகள் குணமணியை திண்டுக்கல் சப் கலெக்டர் குமாரன் ரூபகாந்தனுக்கு கொடுப்பதாக பேசி முடித்து விட்டார்கள். உனக்குத்தான் முடிப்பார்கள் என்று என்னிடம் நீ சொல்லிக்கொண்டிருந்தாயே. காரணம் என்ன? நீ தான் மறுத்து விட்டாயா? அல்லது அவர்கள்...? ஒரு சமயம் இந்த விஷயம் உனக்குத் தெரியாமல் நடந்திருக்கலாமோ என்று சந்தேகித்தே இதை எழுதினேன்.

உன் நண்பன்,

ராஜகோபாலன்."

என்று அதில் கண்டிருந்தது. நானும் ஆச்சரியத்தில் ஒன்றும் பேசாமலிருந்தேன்.

ராமநாதன் வெகு நேரம் என்னென்னமோ யோசனை செய்துவிட்டு கடைசியில், சமீபத்தில் நடக்கவிருந்த பரீக்ஷையைக் கூடச் சட்டை செய்யாமல் பிரின்ஸிபாலிடம் லீவு கேட்டுக் கொண்டு அன்று சாயந்திர ரயிலிலேயே தன் ஊருக்கு-இங்கே-வந்துவிட்டான். அன்று தான் நிச்சயதார்த்தம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாப்பிள்ளை வீட்டிலிருந்து பெரிய மனிதர்களும், ஸ்திரீகளும் வந்து கூடியிருந்தனர். ராமநாதன் தடதடவென்று வீட்டிற்குள் நுழைந்ததைக் கண்ட அவர்கள் 'குசு குசு' வென்று ஏதோ பேசிக் கொண்டார்கள். அவன் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நேரே தன் மாமனிடம் சென்றான். கோமதி நாயகம் செட்டியார் ஹாலில் ஒரு நாற்காலியில் வீற்றிருந்தார். அவனைக் கண்டதும் அவர் திடுக்கிட்டு விட்டார்.

"அடடே, இது என்ன திடீரென்று வந்து விட்டாய்? காலேஜில் பரீக்ஷை சமயமல்லவா..." என்று கேட்டார்.

"ஒரு அவசர காரியமாகத் தங்களைக் கண்டு பேசி விட்டுப் போகத்தான் வந்தேன். பின் பக்கம் தோட்டத்தில் போய்ப் பேசலாம், வாருங்கள்" என்றான்.

அவன் குரல் கேட்ட குணமணி அறைக்குள்ளிருந்து ஓடி வந்து பார்த்தாள். அவனும் அவளைப்பார்த்தான். மறுகணம் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டே உள்ளுக்கு ஓடிவிட்டாள். தோட்டத்துப்பக்கம் சென்றதும் ராமநாதன், தன் நண்பன் கடிதத்தைச் செட்டியாரிடம் கொடுத்து "இதைப் பாருங்கள்" என்றான். அதைப் படித்துப் பார்த்த அவர், விஷயத்தை கிரஹித்துக் கொண்டாலும், அவனுக்கு என்ன பதில் சொல்வது, எப்படி சமாதானப் படுத்துவது, என்ற யோசனையிலேயே ஆழ்ந்து. ஆனால் அதை வெளிக்குக் காட்டாமல் கடிதத்தைத் திருப்பித் திருப்பி பத்து முறை படித்தார்-நேரத்தைக் கடத்த.

"உம். இதுக்குத்தானா இப்படி அவசரப்பட்டு வந்தாய்! அது கிடக்கட்டும். சாவகாசமாய்ப் பேசிக் கொள்ளலாம், நீ போய்ச் சாப்பிடு. களைப்பாயிருக்கிறாய்" என்றார்.

"என் மனம் நிம்மதியடைய வேண்டும். உண்மையைச் சொல்லுங்கள். என் களைப்பெல்லாம் மறைந்துவிடும்."

"விஷயத்தைப் பின்பு சொல்லிக்கொள்ளலாமென்று நினைத்தேன். நீயே வந்து விட்டாய். ஏனப்பா உனக்கு இந்தப் பொய்தானா பெரிதாய் போய் விட்டது. ஏதோ நிச்சயமாகும் சமயமாகிவிட்டது. உன் குணத்திற்கும் படிப்பிற்கும் தக்க நல்ல இடத்தை நானே தேடி முடிக்கிறேன், எனக்கும் உன்னைப் பற்றிய கவலைதான். ஆனால் உன் அத்தை அதற்கு இடங் கொடுக்கவில்லை. நான் என்ன செய்கிறது?" என்று வருத்தப் பட்டார்.

"அப்படியானால் நான் குணமணியை அடைய முடியாதென்று சொல்லுகிறீர்கள்! என்னை வளர்த்து வாலிபம் செய்த நீங்களே இப்போது என் மனதைச் சுட்டுப் பொசுக்கலாமா?" என ஆத்திரத்தோடு கேட்டான்.

"எனக்கு அப்படி கெட்ட எண்ணமில்லை. ஆனால் விதியை யாரால் தடுக்க முடியும்?"

"நீங்களே நினைத்துப் பாருங்கள். பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது என்னிடம் என்ன சொன்னீர்கள். வாக்கை நிறைவேற்றுங்கள். இன்னும் அவள் எனக்கு உரியவள் தான். காரியம் ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. நீங்கள் மனது வைத்தால்..." அவனுக்குத் துக்கம் பொங்கியது.

அவர் பொறுமை இழந்தவராய், "வீணாக என்னை ஹிம்சிக்காதே. அவளை மறந்து விடு" என்றார்.

"என்ன? மறந்துவிடவா? பூவும் மணமும்போல வளர்ந்த நாங்கள் பிரிந்து போவதா? எங்கிருந்தோ வந்த ஒருவன் அவளை அபகரித்துச் செல்வதா?" என்று சப்தம் போட்டான். மாமன் என்ற மரியாதை, பயம் எல்லாம் பறந்துவிட்டன. அந்தச் சப்தம் கேட்டு வீட்டுக்குள்ளிருந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் தோட்டத்துப் பக்கம் வந்தார்கள். மாப்பிள்ளையின் தகப்பனார்—சப் கலெக்டர்—வாக்கிங் ஸ்டிக்குடன் வந்துவிட்டார். பெண்கள் கூட்டத்தில் மீனாக்ஷியம்மாளுமிருந்தாள். குணமணி

உங்களுக்கு

மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்

உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:

சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.

154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

1942-ம் வருஷத்து புது கியாட்லாக் இனம். 2 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 'முத்தத்தின் ரகஸ்யங்கள்' என்ற புத்தகம் இனம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

ஒற்றுமை ஆபீஸ், தியாகராயநகர், மதராஸ்.

தளபதிகள் ஆலோசனை

ஜெனரல் ஸர் தாமஸ் ப்ளாமியும் லெப்டனன்ட் ஜெனரல் வி. ஏ. எச். ஸ்டர்டியும் மெல்போர்னில் விக்டோரியா பாரக்ஸில் கூடிப் பேசுகின்றனர்.

ஜன்னல்பக்கம், மறைவாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்குச் சம்பந்தியாகப் போகும் அவர்கள் முன்னிலையில் ராமநாதன் வாதாடுவது செட்டியாருக்கும் பெருத்த கோபத்தை யுண்டாக்கியது.

"ராமநாதா, இனி அதிகமாய்ப் பேசாதே. என்பெண்ணை என்னிஷ்டம் போல் செய்வதில் உனக்கு என்ன அதிகாரம்? ஒரு காலத்தில் சொன்னேன். இப்போது எனக்கு இஷ்டமில்லை. அவ்வளவுதான். ஏன் வீணாக மனஸ்தாபத்தை வரவழைத்துக் கொள்கிறாய்?" என்று கடுமையாக ஆரம்பித்து விட்டார்.

"அவனிடம் அவ்வளவு ஏன் பேசுகிறீர்கள். அவனை உள்ளே யார் விட்டது? போகச்சொல்லுங்கள் வெளியே" என்று கர்ஜித்தாள் அவர் மனைவி.

ராமநாதன் தலை சுழன்றது. அவர்களிருவரையும் ஒரு பார்வை பார்த்தான் இரக்கம் கோபம், அவமானம் எல்லாம் அதில் கலந்திருந்தன. அவன் நிலைமையைக்கண்ட கூட்டத்திலிருந்த ஒருகிழவி "பாவம், அவனுக்கும் தாய் தகப்பனிருந்தால் இப்படி இவர்கள் பேசுவார்களா?" என்றாள். அவள் பக்கத்து வீட்டுக்காரி. மீனாக்ஷியம்மாள் அவளை முறைத்துப் பார்த்துப் பல்லைக்கடித்தாள். தனக்காக ஒருவளாவது அங்கே பரிந்து பேசுவதற்கு இருக்கிறாளே என்று நினைத்தபோது ராமநாதன் கண்ணீர் குபுக்கென வடிந்தது. அதற்கு மேல் அவனால் நிற்க முடியவில்லை சட்டென வெளியே போய் விட்டான். அக்கம் பக்கமிருந்தவர்கள் சிலர் அவனைக் கூப்பிட்டு விசாரித்தார்கள். ஆனால் ஒருவராவது அவனுக்காக அவன் மாமாவிடம் போய் பேசி காரியத்தை முடிக்க முன் வரவில்லை. ஆனால் ஒரே ஒருவர் மாத்திரம் அவனுக்கு உண்மையைத் தெரிவித்தார் "உன் மாமா பேரில் ஒரு தப்பிதமுமில்லை. மீனாக்ஷியம்மாள்தான் தாய் தகப்பனில்லாத அந்த அநாதைப் பயலுக்குக் கொடுப்பதைவிட இந்த கலெக்டர் வீட்டு சம்பந்தம் எவ்வளவோ கௌரவமானது என்று சொல்லி விட்டாள். அதனால் தான் செட்டியாரும் இணங்கி விட்டார்" என்றார்.

மீனாக்ஷியம்மாளைத் தன் தாய் போலவே கருதியிருந்தான். கடைசியில் அவளே அவனுக்கு தீங்கு நினைப்பாள் என்று நினைக்கவே இல்லை. அவனுக்கு எங்கே போவது, என்ன செய்வது என்று விளங்கவில்லை. அன்று இரவு இந்த ஊரில் ஒரு தெரிந்தவர் வீட்டில் படுத்துக் கொண்டான். அவனுக்கு எப்படித் தூக்கம் வரும்? என்னென்னமோ யோசனைகள் அவன் மனதில் எழுந்தன. கடைசியாக ஒரு முடிவிற்கு வந்து அதிகாலை 4-மணிக்கு எழுந்து தன் மாமன் வீட்டின் தோட்டத்தில் போய் மறைவாய் ஒரு பக்கம் காத்திருந்தான். குணமணி பிரதி தினமும் காலை 5-மணிக்கெல்லாம் தோட்டத்திற்குள் வந்து மலர்ந்திருக்கும் மலர்களைப் பறிப்பது வழக்கம். அவளைக் கண்டு அவள் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ளவே அங்கே போனான், அவளும் சற்று நேரம் பொறுத்து வந்தாள். அவள் முகமும் வாட்டமடைந்து தான் காணப்பட்டது. சுற்றிலும் ஒருவருமில்லையென்று கவனித்துவிட்டு "குணம்! குணம்!!" என்று மெதுவாய்க் கூப்பிட்டான், தனக்குப் பழக்கமான குரல் வருவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். வாடி வதங்கிய முகம். குழி விழுந்த கண்கள். ஏங்கிய பார்வை. அக்காக்ஷி அவளைச் சிலிர்க்கச் செய்தது: வார்த்தை வரவில்லை: வேறு யாரேனும் பார்த்து விட்டால் அபச்சொல் சம்பவிக்குமே என்று பயந்து வீட்டிற்குள் ஓடி விடலாமா என்று எண்ணினாள்; "குணம், ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டான்:

"அத்தான், நான் என்ன செய்யட்டும்? உங்களிடம் பேசுவதைக் கண்டால் கூட என் தாய் என்னை நொறுக்கி விடுவாளே!"

"அப்படியானால் நீயும் என்னைக் கைவிட்டு விட்டாயா?"

"வேறு வழியில்லையே!"

"நான் சொல்லுகிறபடி கேட்கிறாயா?"

"என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"நீ, என்னைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை யென்று சொல்லி விடு அவர்களிடம்!"

"இனி அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை. காரியம் மிஞ்சிவிட்டது. நேற்று இரவே தாம்பூலம் மாற்றிக்கொண்டு விட்டார்கள்; நிச்சயமாகிவிட்டது!"

அவன் குரல் தழுதழுத்தது. "உன் பிடிவாதம்கூட அங்கே செல்லவில்லையா? என்ன உலகம் இது? அரும்பாடுபட்டு வளர்த்த காதற் செடியை கல்லி எறிய கிஞ்சித்தும் தயங்காத இந்த மனிதர்கள் என்ன பிசாசுகளா?"

"அத்தான் நேரமாகிறது. நான் போகிறேன்."

"ஆம், உன் கால்கள் நோகும். போ; இதோ நானும் போகிறேன். இன்று சாயந்திரம் என்னைப் பற்றியே இந்த ஊரில் பேச்சு நடக்கும்......"

"ஏன், என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று பயத்தோடு கேட்டாள். அவன் பதில் சொல்லாமல் போய்விட்டான்.

அன்று சாயந்திரம் இக்குளக் கரையில் அவன் சவமாகக்கிடந்தான். ஊர் முழுதும் கூடிவிட்டது. அவன் சட்டைப் பையில் ஒரு கடிதம் இருந்தது.

'தாய், தந்தை, யாருமற்ற எனக்குத் தெய்வம்கூட கருணை புரியவில்லை. காதலியும் என்னைக் கைவிட்டாள்: இந்தப் பிரபஞ்சத்தில் உயிர் வாழ எனக்கு இஷ்டமில்லை: ஆதலால் விஷம் சாப்பிட்டு மரணத்தை ஏற்றுக் கொண்டேன், இதற்கு யாரும் பொருப்பாளியல்ல—ராமநாதன்! என்று கண்டிருந்தது.

ஹேமசந்திரன் கதையை முடித்தான்:

"உலகமே சூனியம்தான்" என்று கண்கலங்க அவன் நண்பன் பதிலளித்தான்.

வார்பட இரும்பு

தண்ணீர் வளர்ச்சிக்கும்

தொட்டிகள்







இந்தியாவில் தயாரிக்கப்படும் மூன்று வித தண்ணீர் தொட்டிகளைப் படத்தில் காணலாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறந்தவைகளுக்குச் சமமானவை.

"டைபூன்" "மான்சூன்", தொட்டிகளில் கொசு பூராது. ஜே. ஸி. எஸ். டபிள்யூ. விதிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டவை.

"யானை" மார்க் தொட்டிகள் மலிவானதாயும், திறமையுள்ளதாயும் தேவையென விரும்புவோர்க்கென்றேப் பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டவை.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.

12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :

ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

சிறுவர் பகுதி

★

குரு உபதேசம்

★

மருதப்பா

சந்தானபுரி என்னும் ராஜ்யத்தை சந்திரவர்மன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு விவாஹமாகி அநேக வருஷங்களாகியும் புத்ர சந்தானமில்லாமையால் வருந்தினன். அந்தக் கவலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. அதனுல் தன் வாழ்க்கையிலேயேவெறுப் படைந்தான். ராஜ்ய காரியங்களை சரிவரக் கவனிப்பது மில்லை.

அதே கவலையுடன் ஒரு நாள் பூங்காவில் உலாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு ஒரு சன்னியாசி தோன்றினுர். அவரைக் கண்ட அரசனுக்கு தன்னையும் அறியாமல் அவரிடத்தில் ஒருவித் பக்தி ஏற்பட்டது. அவர் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்து, "குரு தேவா!. அடியேனுக்கு பிறகு இந்த ராஜ்யத்தை பரிபாலிக்க ஒரு புத்ரனில்லையே என்ற கவலை அடியேனை வெகுவாக வாட்டி வருகிறது. அந்தக் கவலையை தாங்கள் திர்க்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

அதைக் கேட்ட சன்னியாசி, "ஏ! அரச பூபா, நீ ஒரு உயிரை விரும்புகிருய். அதனுல் இரண்டு உயிர்களை பறி கொடுக்க நேருமென்பதை நீ அறிய மாட்டாய்'' என்றுர்.

"குரு தேவா, எதுஎப்படியானுலும் சரி, உலகில் பிள்ளை இல்லாதவனென்ற பெயரை வகிக்காமலிருந்தால் அதுவே போதும்'' என்றுன் அரசன்.

"அப்படியானுல் உமக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும்படி வரம் தந்தோம். இன்றோடு உன் கவலையை விடு'' என்று சொல்லி விட்டுச் சென்றுர்.

அரசன் சந்தோஷமடைந்தான். இந்த விஷயத்தை அரசிக்கும் தெரிவித்தான். அவளும் சந்தோஷமடைந்தாள். பத்து மாதங்களுக்குப் பிறகு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த மறு தினமே அரசி இறந்து விட்டாள். அரசன் மனம் வருந்தினுன். எனினும் குழந்தையின் பாசத்தினுல் துக்கத்தை ஒருவாறு மறந்தான்.

அரச குமாரனும் வளர் பிறை சந்திரனைப் போல் வளர்ந்து ஏழாவது வயதை யடைந்தான். அரசன் சமஸ்தான குருவை வரவழைத்து குழந்தைக்குக் கல்வி போதிக்கும்படி உத்தரவிட்டான்.

அன்று முதல் அரச குமாரன் குரு வாக்கிற்கு மறு வாக்கில்லாமல் அதிக பயபக்தியுடன் கல்வி கற்று வந்தான். குரு உபதேசத்தில் முக்கியமானது, "கோவிலைக் கண்டால் கும்பிடு'' என்பது. அது போலவே அரச குமாரன் எந்த கோவிலைக் கண்டாலும் வலம் வந்து வணங்காமல் ஒரு அடியும் எடுத்து வைக்க மாட்டான்.

அரசன் ஒரு நாள் வேட்டையாட காட்டிற்கு சென்றுன். அங்கு அடுத்த் தேசத்து இளவரசியும் வேட்டையாட வந்திருந்தாள். அவளைக் கண்ட அரசன், அவள் அழகில் ஈடுபட்டு அவளை விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்து, தன் விருப்பத்தை அவளிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்ட இளவரசி "அரசே, தங்களை விவாஹம் செய்து கொள்ள தடையில்லை.

ஆனுல் ஒரு நிபந்தனை. அதாவது என் விருப்பத்திற்கு தாங்கள் எதிராக நடப்பதில்லையென்று வாக்குறுதி தந்தால் தங்கள் எண்ணம் பூர்த்தியாகும்'' என்றுள்.

அரசன் அதற்குச் சம்மதித்தான். ஒரு சுப முகூர்த்தத்தில் விவாஹமும் நடந்தேறியது.பிறகு இரண்டு வருஷம் ஒருவித கலங்கமும் மில்லாது இருந்து வந்தது. அரசன் தன் பிள்ளையிடம் அதிக அன்புடன் இருப்பதைக் கண்ட அரசி இளவரசன் மீது பொருமை கொண்டாள். அவனை தொலைத்தாலன்றி தனக்கு நிம்மதி ஏற்படாதென்ற துர் எண்ணமுண்டாகி விட்டது. அவனை எப்படிதொலைப்பதென்பதைப் பற்றி பல வாறு யோசனை செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது அரசன் அங்கு வந்து எதைப் பற்றி இவ்வளவு பெரிய யோசனை என்று கேட்டான்.

அரசி:—கடந்த இரவு உமது மூத்தாளின் குமாரன் என்னை கொன்று விட்டதாக ஒரு துர் ஸ்வப்னம் கண்டேன். அதிலிருந்து என் மனம் ஒரு நிலையிலில்லை. பயமாகவும் இருக்கிறது. ஆதலால் தங்கள் குமாரனைக் கொன்றுவிட வேண்டும் என்றுள்.

அதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு, "ஒரு போதும் முடியாது'' என்றுன்.

அரசி:—ஆதியில் என் விருப்பத்திற்கு எதிராக நடப்பதில்லையென்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். ஆதலால் நான் சொல்லுகிறபடி தாங்கள் நடந்தே தீர வேண்டும். அடுத்த காட்டில் பெரிய குழி வெட்டி அதில் அக்னியை மூட்டும்படி உத்தர விடுங்கள். ரகஸியமாக இரண்டு ஆட்களை அக்னி குண்டத்தினருகில் நியமித்து தீர்ந்ததா வென்று யார் வந்து கேட்கிருர்களோ அவர்களை தீயில் தள்ளி விடும்படி கட்டளை இடுங்கள். பிறகு உமது குமாரனை தீர்ந்ததா என்று கேட்டுவிட்டு வரும்படி அனுப்பி வையுங்கள். அவன் போய் கேட்பான். உடனே காரியம் நடந்து விடும்.

அதைக் கேட்ட அரசன் வேறு வழியின்றி மேற் சொன்னபடி உத்தர விட்டான். அக்னி குண்டமும் கொழுந்து விட்டு எரிய வாரம்பித்தது. இரண்டு வீரர்கள் தீர்ந்ததா வென்று கேட்போரை தீயில் தள்ள தயாராய் கார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அரசன் தன் குமாரனை அழைத்து, "குழந்தாய், காட்டில் அக்னி வளர்த்துகிருர்கள். நீ அங்கு சென்று அது தீர்ந்து விட்டதா வென்று கேட்டு விட்டு வா'' என்று கண் கலக்கத்துடன் அனுப்பி வைத்தான்.

தந்தையின் கட்டளையை நிறைவேற்ற தனயன் அதிவேகமாக காட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு கோவில் ரொம்பவும் சீர் கேடான நிலைமையிலிருப்பதைக் கண்டான். கோவிலைக் கண்டால் கும்பிடு என்ற குருவின் உபதேசம் அவன் நினைவிற்கு வந்தது. உடனே கோவிலுக்குள் சென்று அதை சீர்படுத்திக் கொண்டிருந்தான்.

அரசி, அரச குமாரன் சென்று வெகு நேரமாகி விட்டபடியால் அவனை தீயில் தள்ளி விட்டிருப்பார்கள் என்ற சந்தோஷத்தினுல் ஓட்டமும் நடையுமாய் அக்னி குண்டத்தை அடைந்து தீர்ந்து விட்டதா வென்றுள். அவ்வளவு தான், அங்கு கார்த்துக் கொண்டிருந்த இரண்டு ஆட்களும் அவளை தீயில் தள்ளி விட்டார்கள்.

(18-ம் பக்கம் பார்க்க)

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஃ சித்திரைமீ

விசாகம்

இப்பக்கத்திலுள்ள படம், சென்னையில் இம்மாதம் முன்னிரவில் நமக்குப் புலப்படும் நக்ஷத்திரக்களைக் காட்டுகின்றன. படத்திலுள்ளபடியே முதல் தேதி இரவு 10-30 மணிக்கும், 15-ம் தேதி யன்று 9-34 மணிக்கும், 31-ம் தேதி யன்று 8-31 மணிக்கும் காணப்படும். சென்னைக்கு வடக்கே தெற்கேயுள்ள இடங்களுக்கும் இப் படத்தை உபயோகிக்கலாம்.

படத்தை உபயோகிக்க:—எந்த திசையைநோக்கி நிற்கிறோமோ அத்திசை படத்தின் அடிப்பாகமாக வரும்படி படத்தைத் திருப்பி வைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது நமக்கு எதிரிலுள்ள நக்ஷத்திரங்கள் படத்தில் அடிப்பாகம் முதல் நடு வரையில் காணலாம்.

நக்ஷத்ரக் கூட்டங்கள்

ராசிமண்டலத்தில் மிதுனம், கடகம். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் முதலியவை நமக்குப் புலப்படுகின்றன. விருச்சிகத்தின் தலைப்பாகம் தென் கிழக்கே அழகாய் விளங்குகின்றது. அதன் கொடுக்கு இன்னும் உதயமாகவில்லை. உச்சிக்கு மேற்கே சிம்மமும். கிழக்கே கன்னியும் காணப்படுகின்றன, முக்கியமாக சிம்மத்தின் மக நக்ஷத்திரமும், கன்னியின் சித்திரையும், விருச்சிகத்தின் அனுஷ-கேட்டை நக்ஷத்திரங்களும் மிகவும் அழகிய ஒளியுடன் பிரகாசிப்பதைக் காணலாம்;

கன்னிக்குச் சிறிது வட கிழக்கே "பூட்ஸ்'' கூட்டம் நன்கு அமைந்திருக்கிறது. கோடை காலத்தின் முக்கிய கூட்டங்களில் இது ஒன்று. நக்ஷத்திரப் படங்களில் இக் கூட்டத்தை ஒரு மனிதன் உருவால் சித்தரித்திருக்கிறது. இம்மனிதனின் அருகில் இரண்டு நாய்கள் இருக்கின்றன. இவன் ஸப்தரிஷி மண்டலத்தை துருவனைச் சுற்றி ஓட்டுவதாகத் தோன்றுகிறது.

புராதானக் கதைகள் படி இக் கூட்டம் ஒரு அதீனியனைக் குறிப்பிடுகிறது. இவன் தன்னுடனிருந்த இடையர்களை குடியில் பழக்கி விட்டான். அதனுல் அவர்கள் அவனைக் கொன்றுர்கள். பிறகு ஒரு தெய்வத்தின் உதவியால் ஆகாயத்தில் ஒரு நக்ஷத்ர மண்டலமாக விளங்குகிருன்.

இக்கூட்டத்தின் முக்கிய நக்ஷத்திரம் 'ஸ்வாதி' அரேபியர் இந்த நக்ஷத்திரத்தை "வானுலகின் பாதுகாப்பாளி'' யாகக் கருதினர். பண்டைக் காலத்தில் இந்த நக்ஷத்திரம் மாலுமிகளுக்கு மிகவும் உதவியாக இருந்ததாம்.

நம் பஞ்சாங்கங்களில் குறித்துள்ள 27 நக்ஷத்திரங்களில் "ஸ்வாதி''யும் ஒன்று. ஸ்வாதி என்றுல் பட்டாக்கத்தி என்று அர்த்தம். மற்ற 26 நக்ஷத்திரங்களும் ராசி மண்டல பாதைக் கறுகே யிருக்க இந்த நக்ஷத்திரம் மட்டும் வடக்கே வெகு தூரத்தில் இருப்பதால் இதை "நிஷ்டியா''வாகக் கொள்ளப் படுகிறது. அதாவது இது தள்ளி வைக்கப்பட்ட ஒரு நக்ஷத்திரம்.

இது முதல்தர ஒளி வீசுவது. ஒரு மணிக்கு சுமார் 3,22,000 மைல் வேகமாக ஆகாயத்தில் ஓடுகிறது. நல்ல பழுத்த கிச்சிலி நிறம். நம் சூரியனின் குறுக்களவு போல் 27 மடங்கு அதக் குறுக்களவு பெற்றது. நம் சூர்யனைப்போல் 115 மடங்கு அதிக ஒளி வீசுவது, ஆனுல் இதனிடமிருந்து ஒளி வந்து சேர சுமார் 43 வருஷங்கள் ஆகின்றன. வெகு தூரத்தில் இருப்பதால் நமக்கு ஒரு புள்ளி போலவே விளங்குகிறது.

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

சித்திரைமீ 1உ

புதன்	சூரியன்	குஜன் சனி குரு	
சுக்கிரன் கேது	2உ—மிதுன-குஜன் 5உ—மேஷ-புதன் 17உ—மீன-சுக்கிரன் 19உ—ரிஷப-புதன் 27உ—மிதுன-குரு		
			ராகு

கிரஹங்களின் நிலை

புதன்:—இம் மாத முதலில் மீனத்திலும் ஏப்ரல் 20-ம் தேதிக்கப்புறம் மேஷத்திலும் காணப்படும். மே மாதம் 3-ம் தேதியன்று மேஷத்திலிருந்து ரிஷபத்திற்கு மாறுகிறது. இம்மாதம் முதல் வாரக் கடைசியில் (20-4-42) புதன் சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கிறது. அதற்குப் பிறகு சூரியனுக்குப் பிறகு அஸ்தமிக்கிறது, மாதக் கடைசியில் புதனை மேல் வானில் சூரியன் மறைந்த பிறகு காணலாம். மே மாதம் 5-ம் தேதியன்று சனியருகே புதன் காணப்படும். சனி புதனுக்கு வடக்கே இருக்கும்.

சுக்கிரன்:— இம்மாதமெல்லாம் கீழ் வானில் சூரியன் உதயமாவதறகு முன் அதிக ஒளியுடன் பிரகாசிப்பதைக் காணலாம். மாத முதலில் கும்பத்திலும், ஏப்ரல் 28-ம் தேதி முதல் மீனத்திலும் காணப்படும். இதன் ஒளி தினம் தினமும் ஒரு சிறிது குறைந்து கொண்டே வருகிறது.

குஜன்:—இம் மாதம் ஆரம்பத்தில் ரிஷபத்தில் இருக்கிறது. ஏப்ரல் 23-ம் தேதி யன்று மிதுனக் கூட்டத்திறகு மாறுகிறது. மேல் வானில் சூரியன் மறைந்த பிறகு குஜனையும், அதற்குச் சிறிது மேற்கேயுள்ள குருவையும் காணலாம்.

குருவும், சனியும்:—ரிஷபத்திலேயே இருக்கின்றன. சனி கிருத்திகாக் கூட்டத்தருகே காணப்படும். குருவே மேல் வானின் முக்கிய நக்ஷத்திரம். மிகவும் ஒளி பொருந்தியது. ஏப்ரல் 28-ம் தேதி யன்று சனியருகே உரானஸ இருக்கிறது. ஆனுல் இக்காக்ஷி நமக்குப் புலப்படாது.

நெப்டியூன் கன்னிலேயே ஊர்ந்து வருகிறது.

சந்திரன் ஆகாயத்திலுலவி வருகையில் கீழ்க் கண்ட தேதிகளில் கிரஹங்களின் அருகே காணப்படும்.

ஏப்ரல் மாதம்
18உ—சனியருகில்
18உ—உரானஸருகில்
20உ—குருவினருகில்
20உ—குஜனருகில்
28உ—நெப்டியூனருகில்
மே மாதம்
11உ—சுக்ரனருகில்



பழைய நீதிக் கதை

குருடனும் சித்திரமும்

ஸ்ரீ எ. எஸ். பி. அய்யர், ஐ. ஸி. எஸ்.

குருடனும் அழகிய சித்திரமும்

சிறப்பு வாய்ந்த ஒரு சித்திர வேலைக்காரன், நல்ல சித்திரம் ஒன்றை எழுதி ஜனங்கள் பார்த்து மகிழும்படி தன்னுடைய சித்திர சாலையில் வைத்திருந்தான். ஜனங்கள் கூட்டம் கூட்டமாக சென்று சித்திரத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அதைப்போன்ற அழகிய சித்திரத்தைக் கண்டதில்லையென்றும், அது கண்ணைக்கவரும் சித்திரம் என்றும் ஜனங்கள் அந்த சித்திரத்தைப் புகழ்ந்துகூறினர். குருடன் ஒருவன், ஜனங்கள் சித்திரத்தைக் குறித்து சிலாகித்துப் பேசிக் கொள்வதைக் கேட்டு, சித்திரத்தைத் தன் கையினால் தடவிப் பார்த்து 'சீ! இவ்வளவு தானா. கையில் ஒட்டிக் கொள்ளும் இதைத் தானா மகா பிரமாதமாகக் கூறுகின்றனர்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சுரங்கக்காரனும் குடியானவனும்

கோலாரில் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவன் ஒரு குடியானவனைப் பார்த்து, 'உன்னைப் போல மடையனை நான் பார்த்ததில்லை. மண்ணையும் கல்லையும் சாகுபடிக்காக வெட்டுவதற்குப் பதிலாக, நீ ஏன் தங்கத்திற்காக பூமியை வெட்டக்கூடாது? ஏன் சுரங்கத்தில் வேலை செய்யக் கூடாது?' என்று சொன்னான்.

'நான் காய்கறிகளையும், தானியங்களையும் பயிர் செய்கிறேன்' என்றான் குடியானவன். 'காய்கறிகளையும் தானியங்களையும் விற்று, நீ லக்ஷக்கணக்காக சம்பாதித்து விட முடியுமல்லவா?' என்று சுரங்கக்காரன் குடியானவனிடம் சொல்லி ஏளனம் செய்தான். அதைக்கேட்டு, குடியானவன் பின்வருமாறு சொன்னான்:-

'ஜனங்களுக்கு மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததுமான வஸ்துவை நான் பயிரிட்டு வருகிறேன். தங்கமில்லாமல் ஒருவன் உயிர் வாழமுடியும். ஆனால் காய்கறிகளாவது, தானியமாவது இல்லாமல், ஒருவன் ஒரு போதும் உயிர்வாழ முடியாது. மேலும் நான் பயிர் செய்யும் தானியமும், காய்கறி வகைகளும் என்னைச்சேர்ந்தவை. நீங்கள் சுரங்கங்களில் வெட்டி எடுக்கும் தங்கமோ, சுரங்கத்தின் சொந்தக்காரனைச் சேர்ந்தது. நானே ஒரு சக்ரம். நான் என்னிஷ்டப்படி சுயேச்சையாகச் சுற்றிக்கொள்ள முடியும். ஆனால், நீயோ ஆயிரக் கணக்கான சக்ரங்களில் ஒரு சக்ரம். மற்ற சக்ரங்கள் சுரங்கங்களில் சுழல்வதுபோல், நீயும் சுற்றியாகவேண்டும். நான் ஆகாயத்தை நம்பியிருக்கிறேன். நீயோ பாதாளத்தை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் நான் குடியானவனாகவே இருக்க விரும்புகிறேன்''

கிருஷ்ண தேவராயரும் மந்திரியும்

விஜய நகரத்தின் சக்ரவர்த்தியாகக் கீர்த்தியுடன் விளங்கிய கிருஷ்ண தேவராயர், தக்ஷிணபீடபூமியிலிருந்த சுல்தான்களுடன் இடைவிடாது சண்டை பிடித்துக் கொண்டிருந்தார். அவருடைய மந்திரி, ஒரு நாள் அவரிடம் பின் வருமாறு சொன்னார்:— 'கீர்த்தி வாய்ந்த அரசரே, தங்களுடைய அபார சக்தியையும், பெருந்தன்மையையும், புத்திசாலித் தனத்தையும் நான் கண்டு வியப்படைகிறேன். ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் எனக்கு மனக் குழப்பத்தை 'உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. தாங்கள் நமது எதிரிகளாகிய மகம்மதியர்களுடன் சதா போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருந்தும் பல மகம்மதியர்கள் தங்கள் ராஜ்யத்தில் சந்தோஷத்துடன் வசித்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தாங்கள் செய்து வருகிறீர்கள். நமது தலை நகரிலும் பல முக்யமான உத்தியோகங்களை தாங்கள் மகம்மதியர்களுக்குக் கொடுத்து உதவியிருக்கிறீர்கள். நமது ராணுவப் படைகளிலும் பல மகம்மதியர்களுக்குத் தாங்கள் உத்தியோகம் அளித்திருக்கிறீர்கள். மகம்மதியர்களுடையமசூதிகளுக்கு திரவியத்தைச் செலவு செய்து தாங்கள் வேண்டிய வசதிகளை உண்டு பண்ணி இருக்கிறீர்கள். அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து அதிக திரவியம் செலவுசெய்து, தலை நகரில் பெரிய ஒரு மசூதியைத் தாங்கள் மகம்மதியர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். இவையெல்லாம் இயற்கைக்கு முற்றிலும் விரோதமாக எனக்குத் தோன்றுகிறது. இந்த மசூதியை இடித்து எறிந்துவிட்டு, மகம்மதியர்களையெல்லாம் கொன்றுவிட வேண்டும். இல்லையேல், நமது தேசத்திலிருக்கும் மகம்மதியர்களையெல்லாம் வேறு தேசத்திற்கு அனுப்பிவிட வேண்டும். நான் சொல்லும்படி செய்வதுதான் நியாயம்''

அதைக் கேட்டு அந்தப் பெரிய அரசர் சிரித்தார். பிறகு பின் வருமாறு பதிலளித்தார்: ''எதிரியின் நாய் உன்னைக் கடித்ததென்று உன்னுடைய நம்பிக்கையும், விஸ்வாசமும் வாய்ந்த நாய்களை, அவைகளும் நாய்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவை யென்னும் ஒரு குற்றத்தினால், நீ கொன்றுவிடமுடியுமா? நம்பிக்கையும், ராஜபக்தியும் வாய்ந்த என் தேசத்திலிருக்கும் மகம்மதிய பிரஜைகளைக் கொன்றால், நான் ஒருபோதும் அரசனுடைய கடமையைச் செய்தவனாகமாட்டேன். அரசனாக இருப்பவன் எப்போதும் நியாயத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்யவே கூடாது. வேறு மதத்தைச் சேர்ந்தவர்களென்று கருதி நான் மகம்மதியர்களுடைய மசூதியை இடித்து மகம்மதியர்களைக் கொன்று, பெரிய பாவத்தைச் செய்தேனால், ஹிந்துக்களுக்கு என்னிடம் இருக்கும் நம்பிக்கை குறைந்து போய்விடும். கர்ம வசத்தால், நான் வேறு மதத்தைத் தழுவினால், ஹிந்துக்களையும் அதே மாதிரியாக நான் சித்ரவதை செய்யத் தயங்கமாட்டேன் என்று ஹிந்துக்கள் நினைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஹிந்து தேவாலயங்களும் இடிபட்டுப்போகும் என்றும் ஹிந்துக்கள் நினைக்கக் கூடும். ஆதலால் ஒரு அரசன் எப்போதும் அநியாயமாக ஒன்றையும் செய்யக் கூடாது!''

குரு உபதேசம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விஷயம் அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு அக்னி குண்டத்தை அடைந்தான். அரச குமாரனும் கோவில் திருப்பணியை முடித்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். தன் குமாரனைக் கண்ட அரசன் சந்தோஷ மடைந்து, அவன் தாமதமாய் அங்கு வந்ததின் காரணத்தை தெரிந்து கொண்டான். ஆதியில் சன்னியாசி சொன்ன வாக்கு அவன் நினைவிற்கு வந்தது. பிறகு தன் குமாரனுடன் ராஜ்யத்திற்கு வந்து சேர்ந்தான்.

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

''ஷண்முகம் பிராண்டு''

ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094, 341. எஸ்பிளனேட், மதராஸ்

விலை: அணா 4.
—
ஸ்டாம்பு அணா 5 அனுப்ப

நவீன முறையில்

இகபர பலனளிக்கும் விஷயங்களுடன்

அமிர்தவசனி

30-வது வருஷ வெளியீடு.

தினசரி உதவும்

தமிழ் வருட பஞ்சாங்கமும் அடங்கியது.

100-க்கு ரூ. 20.
—
ரயில் செலவு வேறு.

பதிப்பகம் :—54, பந்தர் தெரு, மதராஸ். (மதுரை: 42, தெற்காவணி.) (கோவை: 234, ராஜா தெரு.)

கம்ஸ வதம் ★ ★

மஹாமஹோபாத்யாய

ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார்

''கம்ஸ வதம்'' என்னும் இந் நாடகத்தைச் செய்தவர் மஹாராஷ்ட்ர தேசத்திய சேஷஸ்ரீ கிருஷ்ண மஹா கவி. இவர் கி. பி. பதினாரும் நூற்றூண்டின் பிற்பகுதியில் காசியில் இருந்தார். இவர் ஸ்ரீ தோடர அரசனின் பிள்ளையான கிரிதாரியின் பிரேரணையினால் இந் நாடகத்தை எழுதியதாக இந்த நாடகத்திலேயே கூறியிருக்கிறார். ராஜா தோடர்மால் என்பவர் அக்பருடைய மந்திரி என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது காசி முதலிய வட தேசங்களில் வழங்கி வரும் வியாகரண ஸம்பிரதாயத்துக்குக் குலபதி இந்தக் கிருஷ்ண பண்டிதர் தான். எங்கும் பிரஸித்தி பெற்ற ''ஸித்தாந்த கௌமுதி'' என்னும் இலக்கண நூலை இயற்றிய ஸ்ரீ பட்டோஜி தீக்ஷிதர் இந்த மஹா பண்டிதருடைய மாணக்கருள் ஒருவர். இந்த ஸித்தாந்த கௌமுதிக்கு வழி காட்டிய ''ப்ரக்ரியா கௌமுதி' இந்த மஹா கவியால் எழுதப்பெற்றது. இந்த நாடகத்தில் ஏழு அங்கங்கள் உள்ளன. இங்கு மொழிபெயர்த்திருப்பது அதன் ஆரும் அங்கம். கதை பிரஸித்தமானது. கதைப் போக்கில் சொல்லக்கூடிய மாறுதலோ, சமத்காரமோ கிடையா. ஆயினும் ஆங்காங்குள்ள வர்ணனை விசேஷத்தாலும், கவிதை நடையின் காம்பீர்யத்தாலும், இந்நாடகமும் சிறந்த நாடக கோஷ்டியில் சேர்ந்ததேயாகும். காசி நகரை அடுத்துள்ள தாண்டவ பட்டணத்து அரசனுடைய தம்பியான நரோத்தமனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, ''பாரிஜாத ஹரண சம்பூ'' என்ற கிரந்தத்தையும் இந்தக் கவி எழுதியிருக்கிறார்.

முதல் காட்சி

கையில் பிரம்புடன் ஒரு மனிதன் (கொலு மண்டப வாயிற்காப்பவன்) வருகிறான்.

மனிதன்:— (மனத்துள்) ஐயோ! இந்த அரசனுடைய அகத்தில் தயையோ தாக்ஷிண்யமோ கடுகளவும் காணவில்லையே! எவ்வளவு மருமக்களைக் கொன்றான்? எவ்வளவு தடவை இவனைக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டிருக்கிறாள் இவன் தங்கை இவனோ வலிமை பெருத்தவன். ஆயினும் இயற்கையாகவே தீமையில் பற்றுள்ள இவன் ஒரு காரணமுமின்றி தன் மனிதர்களை வதைக்கின்றானே! ஓயவில்லையே! (வெறுப்புடன்) பேராசை என்னும் கருநாகம் வேந்தர்களுடைய உள்ளமென்னும் புற்றில் படுத்துக்கிடக்கின்றது. அது பிறரின் உயிர்க் காற்றை (பிராணவாயுவை) உட்கொண்டே உய்கிறது. (பெருமூச்சு விட்டு) என்னே! இந்த மதிகேடனுடைய மாறான ஸ்வபாவம்! வலுவுள்ள வானோர்படையை வென்றும், திக் கஜங்களை அச்சுறுத்தித் துரத்தியும் தன் காலில் முடிபட திக்பாலர்களை வணங்கச் செய்தும், சிறைபிடித்த தேவமாதர்கள் சாமரம் வீசும்படிச்செய்தும், இவ்வாறு அணுவளவும் அச்சமின்றி அரசியலை நடத்துபவனாயிருந்தும், இவன் குழந்தைகள் போன்ற ஸாதாரண மனிதர்களிடமிருந்தே தனக்கு மரணம் ஏற்படுமென்று எண்ணுகின்றானே! இப்போது இவன் ஆரம்பித்திருக்கும் காரியம் சுபமாக முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் ''கொன்றவன் குடிகளைக் கசக்கித் தவிக்கச் செய்தால், அதிலிருந்து கிளம்பும் நெருப்பு, அவனுடைய குலத்தையும் செல்வத்தையும் முடிவில் அவனுடைய உயிரையும் சாம்பராக்காமல் தணியாது'' என்பதல்லவோ பெரியோர்களின் பரசுரம். போஜவம்சத்திய அரசர்கள் அநேக காலமாக ஸம்பாதித்துச் சேமித்து வைத்த பெரும் புகழை இவன் மாசுறச்செய்துவிட்டான். எதிரி அரசர்களை வரையும் பிரதாபாக்னியால் எரித்தும், மூவுலகும் போற்றுமாறுள்ள விசேஷ காரியங்களைச் செய்தும் இந்தப் போஜகுலம் பெருத்த கீர்த்தி பெற்றிருக்கிறது. அந்தக் கீர்த்தி என்னும் வாழையை வெட்டித்தள்ள இவன் வாளாக வந்து சேர்ந்தான். அல்லது நான் ஏன் காட்டில் கதறவேண்டும். (அரண்ய ருதிதம்—வீண்) வேலைக்காரர்கள், தங்களுக்கு எஜமானர்கள் இட்ட கட்டளையைநிறைவேற்ற வேண்டுமேயன்றி, அவர்களுக்கு உபதேசம் செய்யப் புறப்படலாகாது. ஆகையால் எனக்கிட்ட ஆணையை அனுஷ்டிக்கிறேன்— (நடந்து) அடுத்துள்ள ஏசிற்றரசர்களே! மேன்மை பொருந்திய மஹாராஜா கம்ஸன் இவ்வாறு உங்களுக்குக் கட்டளையிடுகின்றார்—''இதுவரை நான் கிருஷ்ணன் விஷயத்தில், இவன் சிறுவன், மிகவும் எளியவன். என்று நினைத்தும் பந்துக்களிடம் எனக்குள்ள மதிப்பாலும் உபேக்ஷயாக இருந்துவிட்டேன். அவனோ இப்பொழுது அஸுர குலத்துக்கு அகால மிருத்யுவாக மாறி வருகிறான். இனி ஒரு க்ஷணம்கூட அவன் விஷயத்தில் நாம் ஒதுங்கியிருக்கலாகாது. தவறாலும், அறியாமையாலும், பக்குவமடைந்த பாபத்தாலும், பெருக்கெடுத்த செருக்காலும், அழிவு நிலை அடுத்தமையாலும், இந்த வாஸுதேவன் செய்த பல அடாத செயல்களையும், இவன் சிறுவனென்று எண்ணி ஒருவாறு இதுவரைப் பொறுத்திருந்தேன். இப்பொழுதோ இவன் மதுராபுரி வந்து என்னெதிரிலேயே இங்குப் பல தீமைகளைப் புரிகிறான். இது பொறுக்கக்கூடியதன்று, ஆகையால் நீங்களெல்லாரும் தவறுதலுக்கிடம் கொடாமல் ஜாக்கிரதையாய்த் தயாராயிருங்கள். நகர கோபுர வாயில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். குவலயாபீட யானை முன் நிறுத்தப்பட வேண்டும். மற்போரிற் சிறந்த மல்லர்களும் ஆயுதம் தாங்கிய படை வீரர்களும் வந்து சேர வேண்டும்: உட்கார்ந்து தனுர்யாகம் பார்க்க நான்கு புறமும் உயர்ந்த மஞ்சங்கள் அமைக்கப்பட வேண்டும். தேவர்கள், கண்ணுக்குப் புலப்பட்டவுடனேயே சுரு சுருப்பாய் கொல்லப்பட வேண்டும்'' என்பது கம்ஸ மஹாராஜாவின் கட்டளை. (மனம் இடிந்து) என்னே நந்தகுமாரர்களுடைய சேஷ்டை! இவர்கள், தங்களுடைய வாழ்க்கையையே கவனிக்கவில்லையே! இவர்களுக்குத் தகப்பன் கிழவன். பசுக் கூட்டத்தில் வாஸம். இடைச் சிறுவர்கள் கூட்டாளிகள். கழி ஆயுதம். படுக்கை பூமி. மாடு மேய்ப்பது தொழில். கம்ஸனோ மூன்று லோகங்களிலுமுள்ள வீரர்களுள் சிறந்தவன். இவ்வாறு நிலைமை இருந்தும், இவர்கள், கம்ஸனிடம் தங்களுடைய துஷ்டத்தனத்தைக் காட்டுகிறார்களே! ஐயோ! தவறு! தவறு!

(திரைக்குள், பெருத்த சப்தம் கேட்கிறது.)

மனிதன்:—(செவி சாய்த்து) ஓ! இஃது என்ன! கோடையிடி முழக்கம்போல் பயங்கரமாய்ப் பெரிய கோலாஹலம் ஸ்பஷ்டமாகக் கேட்கப்படுகின்றதே!

இரண்டாம் காக்ஷி

மிக்கப்பரபரப்படைந்த நகர கோபுர வாயிற்காப்போன் (ஆஜார வாயிற்காப்பவன்) வருகின்றான்.

நகர காப்போன்:—ஓ ஓ நகர வாஸிகளே! ஓடுங்கள் ஓடுங்கள் கம்ஸ குலத்துக்குக் காலாக்னியான கிருஷ்ணன் வந்து விட்டான், இவன் வஜ்ரத்தைக் காட்டிலும் அழுத்தமான ஆஜாரவாயிலுள்ள இருப்புக் கதவை ஒரு குத்துக் குத்திப் பொடிப்பொடியாக்கிவிட்டான். காவற்காரர்களைக் கொன்றுவிட்டான். மனம் கொதித்த மாவுத்தன், குவலயாபீடமென்னும் பட்டத்து யானையைத் தூண்டவே, அது வருவதைக் கண்டு பயந்து ஜனங்கள் ஒருவரையொருவர் மிதித்துக் கொண்டு ஓடுகிறார்கள். கிருஷ்ணனோ அதனை உறுத்த உறுதி கொண்டு தன் தலை மீதுள்ள மயிற்றோகையை இருகக்கட்டி அதன் மீது எழும்பிப் பாயக் கருதுகின்றான்.

மனிதன்:—அடே! கோஷ்டபாலா! (கோட்டை காக்கின்றவனே!) பரபரக்காதே. நிம்மதியாயிரு. கிருஷ்ணனுக்கும் குவலயாபீடத்துக்கும் நடக்கும் யுத்தத்தைத் தூர விலகி நின்றே காண்போமே.

கோஷ்டபாலன்:—(ஆறுதலடைந்து) அப்படியே செய்வோம்.

(இருவரும் விளையாட்டு மலை மீதேறி நிற்கிறார்கள்.)

மனிதன்:— (முன்புறம் பார்த்து, ஆச்சரியத்துடன்) கோஷ்டபாலா! அதோ பார்— குவலயாபீடம் கோபத்தால் தும்பிக்கை நுனியை உயர்த்திக் கர்ஜித்துக் கொண்டே அதிவேகமாக வருகின்றது. அதனிடமிருந்து தாரை தாரையாகப் பெருகும் மத ஜலத்தால் பூமி முழுதும் சேராகி விட்டது. பிரளய கால மேக முழக்கம் போலவன்றோ இதன் கர்ஜனை இருக்கின்றது. இது தனது தந்தங்களில் குத்துண்டு மாட்டிக் கொண்ட மேகங்களை உதறித் தள்ள அடிக்கடி தலையைக் குலுக்குகின்றது.

கோஷ்டபாலன்:— ஆமாம், அப்பா! ஆமாம். இது வேகமாக வரக் கால்களில் பூட்டிய சங்கிலிகளை இழுத்தவுடன் கட்டு மரம் வேரோடு விழுந்து விட்டது. சங்கிலிகள் அறுந்து போயின. கால்களில் பாக்கியிருக்கும் சங்கிலிகளை இது இழுத்துக்கொண்டே வருகிறது. கும்பஸ்தலத்தில் அணியப்பெற்றிருந்த முத்துமாலையைக் கழற்றி எறிந்து விட்டது. மத ஜலம் கொட்டுகிறது. இது, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் புஷ்கலாவர்த்தகம் முதலிய மேகங்களைத் தும்பிக்கையால் தாக்கிப் பிளக்குகிறது. தலையை ஆட்டிக் கொண்டு ஓடி வருகிறது. ஐயோ இதனைத் தெய்வம் தூண்டுகிறதே!

மனிதன்:—(பரபரப்புடன்) கோஷ்டபாலா! இந்தப் பக்கம்

புதுமாதிரி விமானம்



"பிரிட்டிஷ் பிரிஸ்டல் போபைடர்" என்ற புது மாதிரி விமானத்தில் 4 பீரங்கிகளும் 6 யந்திரத் துப்பாக்கிகளும் இருக்கின்றன. இவை வெகு வேகமாகப் பறந்து எதிரிகளை முறியடிக்கும சக்தி வாய்ந்தவை.

பார்—நந்த குமாரன், நன்கு பயிற்சி பெற்றிருப்பதால் என்ன சுரு சுருப்பு காட்டுகிறான்—குவலயா பீடம் இவனைக் கொல்ல நினைத்துத் தந்தங்களால் குத்தத் தொடங்கினால், இவன் அதன் கால்களிடையில் நுழைந்து விடுகிறான். அது தும்பிக்கையால் இழுக்க எத்தனித்தால், பின்புறமாக வெளி வந்து, தன் இரு கைகளாலும் அதன் வாலைப் பிடித்துக் கொண்டு வட்டமிடுகிறான். அதன் கண்ணிற்படாமல், அதன் மஸ்தகத்தில் எழும்பித் தாவி ஏறிக்கொண்டு, அங்குசத்தால் (தோட்டி) குத்திப் பிளக்கிறான். விரல்களை மடக்கி முஷ்டிகளால் அதன் இரு புறமும் எலும்புகள் புறப்படுமாறு குத்தி அவற்றையும் பொடியாக்கி விடுகிறான். (ஆச்சரியத்துடன்) "கிருஷ்ணா! நிரம்ப நேரமாக விளையாடுகின்றாயே. நடைபெற வேண்டிய காரியம் கெடுகிறதே. இந்த மிருகத்தை மாய்ப்பதால் உனக்கு வீரப் பெருமை என்ன வரப் போகிறது" என்று தமையனை பலராமன் சொல்லவே. கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே குவலயா பீடத்தின் தும்பிக்கையை இரு கைகளாலும் பிடித்து, அழுத்தி இழுத்து நான்கு புறமும் வட்டமிட்டுச் சுழற்றி கீழே தள்ளித் தன் இரு கால்களையும் அதன் கழுத்தில் வைத்து அமுக்கி, அதன் தந்தங்களையும் அதனுயிரையும் பறித்து விட்டானே!

கோஷ்டபாலன்:—ஆ ஹா! ஹா! தீமை! தீமை! குவலயா பீடம் கொல்லப்பட்டு விட்டதே! இது மஹாராஜனின் வெற்றிக் கொடியன்றோ. இனி போஜ வம்சம் க்ஷேமமாயிருக்குமென்று தோன்றவில்லை.

மனிதன்:—பாபம் நீங்குக. இப்படிச் சொல்லாதே. இந்த ஒரு காரியம் வீணாய்ப் போய் விட்டால் என்ன? வேறு சிறந்த ஒருபாயமும் செய்யப்பட்டிருக்கிறது. அந்த உபாயம் பயன் படக் கூடும். நம் மஹாராஜன் அகண்ட பூ மண்டலத்தையும் அல்லலொன்றுமின்றி ஆளப் போகின்றார்.

கோஷ்டபாலன்:—அஃது என்ன? சொல்லு, அதனைக் கேட்டு என் மனம் ஆறுதலடையட்டும்.

மனிதன்:—ஏகாந்தமாகவும் ஜாக்ரதையாகவும் கேள்—நமது மஹாராஜன் முன் கூட்டியே ஒரு ஆலோசனை செய்து வைத்திருக்கிறார்— குவலயா பீட விஷயம் ஒரு ஸமயம் விபரீதமாய் விட்டால், பிறகு மல்ல யுத்தம் நடப்பதாகப் பிரஸ்தாவித்துப் பல தேசங்களிலிருந்தும் வர வழைக்கப்பட்ட மல்ல வீரர்களை யுத்தரங்கத்தில் நிறுத்தி வைக்க வேண்டும். இந்த மல் யுத்தம் பார்க்க ஆவலாலும்,நாம் அழைத்திருப்பதாலும் பலராமனும் கிருஷ்ணனும் அந்த அமர்க்களத்துக்கு மிகுந்த கர்வத்துடன் வருவார்கள். அப்போது மற்போர் வேடிக்கை என்ற வியாஜத்தில் இவர்களைக் கொன்றுவிட வேண்டும்" என்பது கம்ஸனுடைய ஆலோசனை. இதற்காக வேண்டிய ஸகல ஏற்பாடுகளையும் நான் அரசன் கட்டளைப்படி முன்னதாகவே செய்து முடித்து விட்டேன். மல்யுத்தம் புரிய அரங்கஸ்தலமும், அதனைச் சுற்றி நான்கு புறமும் அகழியும் அதனைச் சுற்றி மதிலும் அமைக்கப் பெற்றன. வஞ்சனை யுத்தத்தில் வல்லமை வாய்ந்த கூடன் முதலிய பொல்லாப் படர்களையும் வரவழைத்தாய் விட்டது. சலன் தொசலன் முதலான போக்கிரி மல்லர்கள் வாயிற்படிகளில் நிறுத்திவைக்கப் பெற்றிருக்கின்றனர். எனவே கம்ஸமஹாராஜன் பந்துக்களுடன் எல்லார்க்கும். விளங்கி மேலேவாழுகின்றார்.

கோஷ்டபாலன்:—(களிப்புடன்) நன்று! கபட நீதியில் கரைகண்டவனே! நன்று. இது சிறந்த ஏற்பாடு. "அரசர்கள், சத்துருவை, அவன் இரவில் தூங்கும்பொழுதோ, அஜாக்ரதையாயிருக்கும் ஸமயத்திலோ விஷத்தாலோ, நெருப்பினாலோ, வஞ்சனையாலோ, வலிமையினாலோ, அழித்துவிடுவார்கள்" என்றல்லவோ நீதிசாஸ்திர நிபுணர்களின் பேச்சு.

மனிதன்:—ஆகவே, போவோம் வா. மல் யுத்தரங்கஸ்தலத்துக்கு அடுத்தவிடம் சென்று இந்த ராம கிருஷ்ணர்களுடைய பௌருஷத்தைப் பரீக்ஷை பார்ப்போம்.

கோஷ்டபாலன்:— அவ்வாறே ஆகட்டும். (இருவரும் சென்றனர்.)

மூன்றாம் காக்ஷி

பலராமனும் கிருஷ்ணனும்: இவர்களை எதிர்க்கும் சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்களும் வருகின்றார்கள்.

கிருஷ்ணன்;—அடே! அடே! வாயிலை மறைத்துத் தடை செய்யாதே. ரங்கஸ்தலம் போக எங்களுக்கு வழி விடு.

சாணூரன்:— சூரர்கள் தான் உட்செல்ல விடவேண்டும். மற்றவர்களை விடக்கூடாது என்பது எங்கள் அரசரின் ஆணை.

கிருஷ்ணன்:— (சிரித்துக் கொண்டு) என்னைச் சூரனென்று கம்ஸன் அறியவில்லையோ?

சாணூரன்:—நீ குலத்தால் சூரனேயன்றிச் செய்கையால் அன்று என்பது கம்ஸராஜனுடைய கருத்து. (சூரனென்ற அரசன் கிருஷ்ணனுடைய முன்னோருள் ஒருவன்.)

கிருஷ்ணன்:— இவ்வாறு கூறாதே. எனது குலத்தினர், பொருளில்லாப் பெயரை வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

முஷ்டிகன்:— சாணூரா! கிருஷ்ணன் சொல்வது உண்மை. இந்த ராமனும் கிருஷ்ணனும் கோகுலத்தில் மிகப் பலிஷ்டர்களான இடையர்களோடு மல் யுத்தம் புரிந்து விளையாடியதாயும், அநேக வீரர்களை அழித்திருப்பதாயும், இயற்கையாகவே திமிருடன் வாழுகிறதாயும், மதுரை மாகாணத்தை அலங்கரிப்பதாயும், நாமும் நம் மஹாராஜனும் கேட்டிருக்கிறோமல்லவா! இதனால்தானே மஹாராஜன் வீரப் போரைக் காணக் குதூஹலங் கொண்டு இவர்களை வெகு மதிப்புடன், இங்கு வரவழைத்திருக்கின்றார். இவர்களைத் திருப்திப் படுத்தத்தான் மல்யுத்த ஏற்பாடு இங்கே செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் நம் மஹாராஜனுடைய மனோரதத்தை இவர்களும் பூர்த்தி செய்ய வேண்டியதுதானே உசிதம். (கிருஷ்ணனைக் குறித்து) கிருஷ்ணா! ராஜாக்ஞையை மீறாமைதான் குடிகளுக்கு முக்கியமான தர்மம். லாபம், கியாதி, பெருமை, ஐஸ்வரியம் இவையும், கைத் தினவு தீருவதும், பின்னால் ஏற்படும் பயன்களேயாம். ஆகையால், நீ, உனது யுத்த ஸாமர்த்தியத்தை என்னிடம் காட்ட வேண்டும். என் பேச்சை நம்பித்தான், பிரபு கம்ஸன் உங்களிடம் ப்ரீதி கொள்வார். இல்லாவிடில் நீங்கள் உட்செல்வதோ ஊருக்குத் திரும்பிப் போவதோ முடியாத காரியம்.

கிருஷ்ணன்:—நாங்கள், அரசனுடைய சட்ட திட்டங்களுக்கு அடங்கிக் காட்டில் வசிக்கும் இடையர்கள். நீங்களோ வீர கோஷ்டியில் விருது பெற்றவர்கள், யுத்தங்களில் வெற்றி மாலை சூடியவர்கள். உங்களோடு நாங்கள் யுத்தப்போட்டி போட முடியுமா? உங்களை மீறிக் கொண்டு நாங்கள் உட்புக முடியுமா? முடியாது. ஆகையால் கருணை கூர்ந்து நீங்கள் எங்களிருவர்க்கும் போர் புரியக் கற்றுக் கொடுங்கள்.

சாணூரனும் முஷ்டிகனும்:—(ஸந்தோஷத்துடன்) இதை ஒப்புக்கொண்டோம். கச்சை கட்டிக்கொள்ளுங்கள். (பலராமனும் கிருஷ்ணனும் அவ்வாறே கச்சைக் கட்டிக்கொள்கின்றனர்.)

அமிர்தாஞ்சன்



போலிகள் எச்சரிக்கை

"சுதேசமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னை - கல்கத்தா.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூடு பல்பொடி

பல் வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்

ஊக்கம், உற்சாகம் ஊட்டி — **ஜீர்சப்** — அஜீர்ண, பித்த சமனி

உஷ்ண சமனி — **கூலாயில்** — ஸ்நான தைலம்

கவனிக்க: போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

பலராமனும் கிருஷ்ணனும் (அவ்விருவரையும் குறித்து):—எங்களுள் ஒருவருக்கு உங்களுள் ஒருவரும், மற்றவர்க்கு மற்றவரும் ஆசிரியராயிருக்க வேண்டும். அதி சீக்கிரத்தில் நாங்கள் தேர்ச்சி அடைந்து எங்கள் மாமனை மகிழ்விக்க வேண்டும்.

சாணூரன:—நல்ல ஆலோசனை இது. முஷ்டிகா! நீ பலராமனுக்கு யுத்த சிக்ஷை சொல்லிக் கொடு. நான் கிருஷ்ணனுக்கு போர்ப் பயிற்சி செய்விக்கிறேன். (கிருஷ்ணனும் சாணூரனும், பலராமனும் முஷ்டிகனும் கைகோர்த்துக் கொள்ளுகிறார்கள்.)

பலராமனும், கிருஷ்ணனும்:—ஆசிரியரே! நாங்கள், சிறுவர்கள். அறிவிலிகள். எங்களுக்கு யுத்த நுட்பம் தெரியாது. ஆனாலும், நீங்கள் செய்யும் செய்கைகளைக் கொஞ்ச நேரம் நாங்களும் பின்பற்றிச் செய்து கொண்டு வருவோம். சாணூரனும் முஷ்டிகனும் (ஸந்தோஷத்துடன் மனத்துள்) கம்ஸ மஹாராஜானுடைய பாக்யமே பாக்யம். என்னே கம்ஸனுடைய மதிமஹிமை! இவர்களை வேறு வழியில் அடக்க முடியாதென்பதைக் கருதி இவ்வாறு ஒருபாயம் செய்து இவர்களை அழிக்க ஏற்பாடு செய்தாரே! ஒன்றுமறியாத இவர்கள் பசுக்களையொப்ப நம் கையில் சிக்கியதும் நமது பாக்கியம் தான்! எனவே இவர்களை மூட்டைப்பூச்சியைப்போல் கையினால் தேய்த்து நசுக்கி பார்த்திபனிடமிருந்து பரிசு பெறுவோம். (வெளிப்படையாக) ராமகிருஷ்ணர்களே! செம்மையாகவே செப்புகிறீர்கள். முதலில் நாங்கள் உங்களுடைய எந்த எந்த அவயவங்களை இடித்துத் தாக்குகின்றோமோ, எங்களுடைய அந்த அவயவங்களையே நீங்களும் தாக்க வேண்டும். சிக்ஷையின் சிரமம் இவ்வாறு தான. ஆகவே, நீங்கள், எங்களுடைய தோளை உங்களுடைய தோளாலும், முஷ்டியை முஷ்டியாலும், தொடையைத் தொடையாலும், மார்பை மார்பாலும், தலையைத் தலையாலும் காலைக் காலாலும், கையைக் கையாலும் தாக்கவேண்டும்.

ராம கிருஷ்ணர்கள்:—உபாத்தியாயர் உரைக்கின்றபடியே செய்வோம். (துவந்த்வ யுத்தம் புரிகிறார்கள்.)

சாணூர முஷ்டிகர்கள்:—(மனத்துள்) என்னே! இது! இவர்களோ சிறுவர்கள். இவர்களுடைய உறுப்புக்களோ, இரும்புலக்கையால் தாக்கக் கூடியவாறு மிகவும் திடமுள்ளவையாயிருக்கின்றனவே! இந்த அவயவங்களாலே இவர்கள் எங்களை இடிக்கும்பொழுது அந்தத் தாக்குதல் இடி விழுவதைப் போலத் தாங்கமுடியாமலிருக்கின்றது. எங்களுடைய உயிர் நிலையைக் குலைக்கின்றதே! (நன்றாகப் பார்த்து) என்ன ஆச்சரியம்! இவர்களுடைய அவயவங்கள், நொடிதோறும் வீர ரஸம் வளர்ந்து மேட்டிமை மேலிட்டு மஹிமை பொங்கி விளங்குவதால், இவற்றைக் காணக் கண் கூசுகின்றதே! இங்கு எதிரில் நிற்கும் வஸ்து என்ன? இந்திரனுடைய வஜ்ரமா? வடவாமுகாக்கினியா? காலகூட விஷமா? புஷ்கலாவர்த்தகமென்னும் பிரளயகாலமேகமா? கல்பாந்த காலத்திய மின்னற் கூட்டமா? ஒரே காலத்தில் பனிரண்டு ஸூரியர்களின் உதயமா? இந்த வஸ்துவைக் காணும்பொழுதே ஐம்பொறிகளும் கவரப்படுகின்றனவே! ஆகையால் நமக்கு ஜீவன் முக்தி (உயிருடன் விடுதலை) கிடைக்குமென்ற ஆசை கிடையாது. பரமமுக்திதான் (மோக்ஷ ஸாம்ராஜ்யம்) இடையூறின்றி நிச்சயமாகக் கிடைக்கப் போகின்றது. எப்படி முடிவதாயிருந்தாலும் போரிலிருந்து ஒழிவது கூடாது. யுத்தத்தில் தெய்வாதீனமாய் நமக்கு வெற்றி கிட்டினால், நமக்குப் பேரும் பெருமையும் கிடைப்பதுடன் நாம் அரசனுடைய அன்புக்குரியவராவோம். இதற்கு மாறாக மரணம் ஏற்பட்டாலோ, தேவ அணங்குகள் சாமரம் வீச அவர்களுடைய கைவளை யொலியைக் காது குளிரக் கேட்டுக் கொண்டே ஸ்வர்க்க ராஜ்யத்தை அடைவோம். (வெளிப்படையாக) அடே! அடங்காத இடைப்பயலே! நீ தொலைந்தாய்.

கிருஷ்ணன்:— நித்யனுக்குச் சாவு ஏதடா?

(திரைக்குள்:— போர்புரியும் ஆட்டுக்கடா செய்யும் மாதிரி முழங்காற் பின்னல் வட்டமிடுதல், விழுதல், இருத்தல், பாய்தல், கழுத்தைச் சுற்றல், ஓடல், தாவல், மறைதல் இச்செய்கைகளைச் செய்து கிருஷணன் சாணூரனை வெகு உயரம் தூக்கி யெறிந்தான்! சாணூரன் பூமியில் விழுந்து, உயிர்போகும் தருவாயில் உருளுகிறானே!)

மனிதன்:— (மனம்பதறி) ஐயோ! சாணூரன் செத்தான், ஐயோ! இவன் பூமி குலுங்கக் கீழே விழுந்தான். குகை போன்ற இவன் வாயிலிருந்து தாரை தாரையாக உதிரம் பெருகி ஓடுகிறதே! பய முறுத்தும் இவனுடைய கருவிழி தன் கோபத்தால் பிதுங்கிச் சுழல்கின்றனவே! பிராணவாயு மூக்கின் நுனியில் வந்து நிற்கின்றதே! இவன் செயலற்றுக் கிடக்கின்றானே!

கோஷ்டபாலன்:— ஐயோ! ஐயோ! கஷ்டம்! அடா கஷ்டம்! கைதேர்ந்த முஷ்டிகனும், பலராமன் முஷ்டியால் தாக்கவே கூற்றன் வீட்டுக்கு விருந்தாளனாகச் சென்றானே!

(மறுபடியும் திரைக்குள்:—பலராமனும், கிருஷ்ணனும் குவலயாபீடத்தின் ஒவ்வொரு தந்தத்தை ஒவ்வொருவர்க்கு ஆயுதமாக எடுத்துக்கொண்டு கையும் கத்தியுமாய் வாயிலைக் காக்கும் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொன்று எதிர்க்கவந்த கூடனையும், சலனையும், தோசலனையும் ஒரே குத்தினால் வீழ்த்தி வாசல் தடைகளை நீக்கிக்கொண்டு ரங்கஸ்தலத்தின் நடுவுக்குள் புகுந்துவிட்டனர்.)

மனிதனும் கோஷ்டபாலனும் (கேட்டு மனத்திடுக்கத்துடன்):—இனிக் கம்ஸனுக்குத் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டிய ஆபத்தான நிலைமை அணுகிவிட்டது. இதற்குப் பரிஹாரம் என்ன என்பது நமக்குப் புலப்படவில்லை. எப்படியிருந்தாலும், நடந்த செய்திகளைக் கம்ஸனுக்கு முன்னதாகத் தெரியப்படுத்துவோம். நம் உயிரைப் பறிகொடுத்தாவது எஜமானனிடம் நமக்குள்ள பக்தியைக் காட்டுவோம் (இருவரும் செல்கின்றனர்.)

அறிக்கை

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதரின்

ஓர் புதிய பிராஞ்சு

கும்பகோணம்

நெ. 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதியில் ஸ்தாபிக்கப்பட்டிக்கிறது

வைத்ய நிபுணர் குழந்தைகளை பரீக்ஷிப்பார்

பாத்ருடுவின்

"பால சஞ்சீவினி"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டியை குணப்படுத்தும்

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ். போன்: 86257.

திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பகுளம்.

நான்காம் காக்ஷி

பலராமனும் கிருஷ்ணனும் மஞ்சங்களில் அரசர்களும், உயர்ந்த ஒரு உப்பரிகையில் கம்ஸனும் பிரவேசிக்கிறார்கள்.

கிருஷ்ணன்:—(நான்கு புறமும் பார்த்து, ஸந்தோஷத்துடன்) என்னே! ரங்கஸ்தலத்தின் அழகு! ரத்தினங்களிழைத்த சுவர்களை எழுப்பி மதிள்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நடுவில் ஸ்படிகக் கற்களும் அவற்றின் இருபுறமும் பெருத்த இந்திர நீலக் கற்களும் பதிக்கப்பட்டு முற்றங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. பல ஆஸ்தான மண்டபங்களை அமைத்து அவற்றின் ஓரங்களில் முத்து ஸரங்கள் வைடூரிய மாலைகள், பூமாலைகள், பட்டு வஸ்திரங்கள் இவை கட்டித் தொங்க விடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு கந்தம் கமழும் அகில் கட்டைத் தூபங்கள் போடப்பட்டிருக்கின்றன.

பலராமன்:—(ஆச்சரியத்துடன்) இந்த ரங்கப் பிரதேசத்தைப் பிரம்மாவோ, விசுவகர்மாவோ, மயனோ நிர்மாணிக்க முடியாது. இது என்ன இந்திர லோகமா? அல்லது பாதாள லோகமா? அல்லது வைகுண்ட லோகமா? இதற்கு நிகராக ஒன்றும் கிடையாது. கண்ணைக் கவருகின்றதே! (உயர மஞ்சங்களைப் பார்த்து) பல தேசங்களிலிருந்தும் அரசர்கள் வந்து மஞ்சங்களில் அமர்ந்திருக்கின்றனர். (நிரம்பவும் உயரப் பார்த்து, கிருஷ்ணனைக் குறித்து) கிருஷ்ணா! அதோ பார்—நம் அம்மான் கம்ஸன், ஏழு மாடியுள்ள உப்பரிகையின் வெளிப்புறத்தில் உட்கார்ந்து நம் வரவைப் பிரதீக்ஷித்துக்கொண்டிருக்கிறார். நாம் விரைவில் அவரருகு போவோம். (படி ஏறுகிறார்கள்)

கம்ஸன்:—(தூரத்திலேயே பார்த்து, அச்சத்துடனும் பரபரப்புடனும் விரைந்து எழுந்து) ஏ சிற்றரசர்களே! ஏ ஸபையோர்களே! குடிகேடர்களாய்ச் செருக்கு செறிந்த இந்தப் பாவிகளிருவரையும் இங்கு விடாமல் தடுத்து நிறுத்துங்கள். விட்டிற் பூச்சி நெருப்பில் விழுந்து அழிவதுபோல இவர்கள் என் பார்வையில் விழுந்து அழிய வேண்டாம்.

ஸபையோர்கள்:—(ஆதரவுடனும், ஆநந்தத்துடனும்) அழகிய ஆகிருதியுள்ள இந்த நந்தகோப குமாரர்களைப் பார்த்தவுடன் நமது அந்தராத்மா, சாந்தியையும் சுத்தியையும் அடைகின்றது. குவளை மலரொத்த நிறமும், பூர்ணிமைச் சந்திரனைப் போன்ற முகமும் பெற்று விளங்கும் கிருஷ்ணனையும், பச்சைக் கற்பூர நிறமுள்ள பலராமனையும் கண் குளிரக் காணும் எங்களுடைய உள்ளம் அமுதக் கடலுள் அமிழ்ந்து கிடக்கின்றது. (மனம் நொந்து) ஐயோ! மஹாராஜன் தர்மத்தை மீறி நடக்கின்றானே! குண தோஷங்களறியாத இச்சிறு பையன்களைக் கபட யுத்தமூலம் கொல்ல நினைக்கின்றானே! ஸ்திரீ, பாலன், கிழவன், எளியவன், ஸம பலமில்லாதவன், குடியன், பித்தன், ரோகி, கெஞ்சுகிறவன், ஓடுகிறவன், இவர்களை அரசன் கொல்லலாகாது. கொன்றால் மஹா பாபம் வரும். இத்தகைய அரசனை அநுஸரித்துப் பேசும் மந்திரிகளுக்கும் ஸபையோர்களுக்கும் இருமடங்கு பாபம் ஏற்படும். மேலும் இவர்களைத் தடுக்க யானையால் முடிந்ததா? மல் யுத்தத்தால் இவர்களுடைய கைவலிமை அடங்கிற்றா? இவ்வாறிருக்க, நாம் எப்படி இவர்களைத் தடுக்க முடியும்? பெரும்பாலும் இந்த



கடலிலிருக்கும் சுரங்க வெடிகளை அப்புறப்படுத்துவதற்கான கப்பலை கொச்சி ராஜகுமாரர் ராம வர்மா (மத்தி) கடலில் மிதக்க விட்டார். மதராஸ் சமஸ்தான ரெஸிடண்டும், ராஜகுமாரர் ராம வர்மாவும், கப்பல் ப்டை அதிகாரியும் இருக்கின்றனர்.

ராஜ்யம் சீர்குலேந்து நிற்கின்றது. ஆகையால், நாம் இந்த ராஜாவையும் ராஜ்யத்தையும் விட்டுச் செல்வதுதான் உசிதம்.

கம்ஸன்:—அடே! அடே! என்னடா? இந்தப் பயல்கள் நமது கட்டளையை மீறிப் பயமில்லாமல் என் பக்கமாகவே வருகின்றார்களே! ஆகவே இவர்களுக்கு ராஜத்ரோஹத்துக்குரிய தண்டனையை விதித்துச் சீக்கிரமாக அருகு வருவதற்கு முன்பே அடக்கி விடுங்கள். (கடுங்கோபத்துடன்) ஐயோ! எதற்காக இனியும் தாக்ஷிண்யம் பார்க்க வேண்டும்? கோகுல வாஸிகளான நந்தன் முதலியவர்களை குழந்தை குட்டிகளுடன் பிடித்துச் சிறையிலிடுங்கள். எனக்கு எதிரியாகத்தீர்ந்த என் தகப்பன் உக்கிரஸேனனைக் கொன்று விடுங்கள். அவமதிக்கப்படவேண்டிய என் தங்கையையும் அவளது பர்த்தாவையும் கடினமான சங்கிலி கொண்டு விலங்கிட்டு, மேன்மேலும் பலவித தண்டனைக்குள்ளாக்குங்கள்.

பலராமன்:—கிருஷ்ணா! இன்னும் என்ன எதிர்பார்க்கின்றாய்? அதோ பார்—கம்ஸன் கோபத்தால் உதட்டைக் கடித்தும், நெற்றியை நெறித்தும், கருவிழி கலங்கிய கண்களை உருட்டியும், மயிர் முடி அவிழ்ந்து தொங்குமாறு அஹந்தையால் தலையைக் குலுக்கியும், நமனுடைய நாவு போல் பயங்கரமான கத்தியை உரையிலிருந்து உருவியெடுத்தும், நம்மோடு போர் புரிய அதிவேகமாக ஆஸனத்திலிருந்து கிளம்புகிறான்.

கிருஷ்ணன்:—(சிரித்துக்கொண்டு) கம்ஸன் நமக்கு அம்மான், நம் மனிதன், அரசன், ரஜோகுணம் மேலிட்டு அறிவை இழந்தவன், தன் நிலைமையைத் தெரிந்து கொள்ளாதவன். ஆகவே இவனிடம் என் மனம், இரக்கம் கொள்கிறது. இவனைக்கொல்ல மனம் வரவில்லை.

பலராமன்:—(கோபத்துடன்) ஆ! என் க்ஷத்ரியையின் குமாரா! இதுவா ஆராய்ந்து பார்க்கும் ஸமயம்? போரிலிறங்கிய பிறகு க்ஷத்திரியனுடைய தர்மம் என்ன? உலகத்துக்குத் துரோஹமிழைக்கும் தீயோரனைவரையும் கொள்வதற்காக வன்றோ ஸர்வ லோக சரண்யனாய் நீ அவதரித்திருப்பது.

கிருஷ்ணன்;—(ஸங்கோசத்துடன்) பெரியார் கட்டளையை மீறக்கூடாது. (விரைந்து கம்ஸன் பக்கம் போகிறார்.)

(திரைக்குள்.கலகலத் தொனி "ஓஹோ ஹோ! பல படை வீரர்கள், கையில் கத்தி, இருப்புலக்கை, கதை, ஈட்டி, பாலா, சூலம் முதலிய ஆயுதங்களுடன் வந்து எதிர்த்துத் தடுக்க, அவர்களையெல்லாம் தூரத்தள்ளிவிட்டு, யானைமீது சிங்கம் பாயுமாப்போலே மெய்த்காப்பாளர் பலருடைய நடுவிலிருக்கும் கம்ஸன் மீது பாய்ந்து கிருஷ்ணன். கம்ஸனுடைய குடுமியைப் பிடித்துக்கொண்டு அவனை மஞ்சத்திலிருந்துபூமிக்கு இழுத்து வருகின்றார். பருந்து பாய்ந்து சிட்டுக்குருவியைப் பிடித்துப் போவதைப்போல, கிருஷ்ணன், கம்ஸன்மீது பாய்ந்து அவன் குடுமியைப் பிடித்து இழுத்துவந்து பூமியில் கற்பாறைமேல் மோதி, அவன் ஆவி நீங்கியும், தன் தாய் தந்தையர்க்கிழைத்த தீங்கை நினைத்து, வைரத்தால், அவனைக் கால்களால் உதைத்து உருட்டுகின்றார்.—எல்லாரும் பயத்துடன் கேட்கின்றனர்.)

(நன்றாகப் பார்த்து, ஆச்சரியத்துடன்:-என்னே! அத்புதம்! இந்தக் கம்ஸன் ஸச்சிதாநந்த ஸ்வரூபமான ப்ரும்மம் ஒன்று என்பதைக் கேட்டவன். க்ரியா சக்தி, ஞான சக்தி என்கிற யுக்திகளைக் கொண்டு, அந்தப் ப்ரம்மத்தின் பற்பல மாறான் தோற்றங்களைக் கேட்டபடி மனனம் (யுக்தி கொண்டு உறுதிப் படுத்திக் கொள்ளல்) பண்ணினவன். பயத்தாலே உலகம் முழுவதையுமே, கிருஷ்ண மயமாகக் தியானித்தவன். ஆகையால் இவனுடைய மரண காலத்தில் இவனுடைய தலை யுச்சிக் குறியைப் பிளந்து கொண்டு ஒரு ஜோதி கிளம்பி, ஜோதி ஸ்வரூபனான பகவானோடு ஒன்றாகக் கலந்து விட்டதே!)

(பலராமன், கிருஷ்ணனிடம் சென்று இறுகத் தழுவி உச்சி முகக்கின்றார். கிருஷ்ணன், மனம் நொந்தவராய்த் தலை குனிந்து நின்கின்றார்.)

பலராமன்:—சிரஞ்சீவி! கிருஷ்ணா! ஸந்தோஷப்பட வேண்டிய ஸமயத்தில் இப்படி நீ வருத்தப்படலாமா? இது உசிதமன்று. தேவர்களுடைய கொண்டாட்டத்தைப் பார்—தேவதுந்துபிகள் உரக்க ஒலிக்கின்றன. அப்ஸர ஸ்திரீகள் ஆடுகின்றனர். மேகங்கள் இனிமையாக முழங்கி வழிகளில் நீர்த்துளி தெளிக்கின்றன. தேவர்கள், கம்ஸனுடைய மரணங்கண்டு மனமகிழ்ச்சி கொண்டு தேவமாதர் பறித்துக் கொண்டு வந்த பரிமளம் மிகுந்த பாரிஜாதமலர்களை வர்ஷிக்கின்றார்கள்.

கிருஷ்ணன்:—(புன்னகையுடன்) பந்துவைக் கொன்று பாபம் கசியும் என்னை நான் கொண்டாடுவதற்கில்லை. வெட்க மூட்டை சுமந்து அமுங்கும் என் முகத்தை உயர்த்த என்னால் முடியவில்லை. ஆலோசனையின்றிச் செய்த ஸாஹஸ காரியத்தை எண்ணி என் மனம் எரிகிறது.

பலராமன்:—ஆ! ஈதென்ன விபரீதம்! மதிமயக்கம் பெருத்துப் போய்விட்டதே! அமர்க்களத்தில் போர்புரியும் படை வீரர்களைக்கொன்றால், ஹிம்ஸா தோஷம் வருமா? ஒருக்காலுமில்லை. இது குற்றமாகாது. அதிலும் விசேஷமாக ஆததாயியைக் கொல்வதில் அணுவளவும் தோஷம் கிடையாது. தன்னை கொல்ல வந்த ஆததாயி வேதாந்த சாஸ்திரத்தின் கரையைக் கண்டவனாயினும் அவனைக் கொல்லலாம். அத்தகைய ஆததாயியைக் கொன்றதினால் கொன்றவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் வராது என்றல்லவோ ஸ்மிருதிகள் கூறுகின்றன. போவோம் வா. அரசனுடைய மரணத்தால் மனம் உடைந்து துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும், அந்தப்புர ஸ்திரீகளுக்கு ஆறுதல் கூறி ஸமாதானப் படுத்துவோம். (ஆததாயி=கொல்ல முயல்பவன் என்பது அமரகோசம். நெருப்பு வைப்பவன், விஷம் கொடுப்பவன், ஆயுதவெறி பிடித்தவன், பொருளைப் பறித்தவன், பூமியை அபஹரித்தவன், மனைவியை அபஹரித்தவன், இந்த ஆறு பெயர்களும் ஆததாயிகள் என்று சுக்கிர நீதி சொல்கின்றது.)

கிருஷ்ணன்:—அப்படியே ஆகட்டும். போவோம்.

(எல்லாரும் சென்றனர்.)

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணா 5. ஜனனகால விவரம் or எழுதும்நேரம். சுமார் வயது தேவை.

ஹநுமான் ஆச்ரமம், திருத்தணி S.I

41 வருட அனுபவம் உள்ளது.
இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.
தாது புஷ்டிக்கி நிகரற்றது

பழநி ஆர். எம். கே. **தங்க மாத்திரை.**

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்
இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100–வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ. 10
25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் „ ரூ. 5
(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமி,**
சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.
68, செட்டியார் தெரு, கொழும்பு.

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
8—2—42

சந்தேகிகளுக்கு மகாத்மா பதில்

"ராஜாஜிக்கு என்ன வந்து விட்டது. தாங்களும் அவரும் ஒருவருக்கொருவர் விட்டுப் பிரிந்து செல்வதாகத் தெரியவருகிறதே?" என்று ஒருவர் கேட்ட கேள்விககு காந்திஜி 'ஹரிஜன்' பத்திரிகையில் பதில் அளித்திருக்கிறார்.

"ஆம், நாங்கள் பிரிந்து விட்டது போல் தான் இருக்கிறது. ஆயினும் நாங்கள் பிரியவில்லை. ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்து கொண்டு மேன்மேலும் நெருங்கிய சம்பந்தம் பெறுவதற்காகவே எங்களுக்குள் பிரிவு போல் ஒரு தோற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு என்னிடமுள்ள விசுவாசத்தில் சந்தேகமே இல்லை. பொது மக்கள் ஒப்புக்கொள்ளும்படி அவர் அபிப்பிராயத்தை வெளியிடுமாறு அவரை நான் வற்புறுத்தியிராவிட்டால் அவர் தமது அபிப்பிராயத்தை அடக்கிக் கொண்டு இருந்திருக்கக் கூடும்.

நாங்களிருவரும் ஒரே தெய்வத்தைத் தான் வழிபடுகிறோம். எங்களுடைய வியாக்கியானத்தில் அபிப்பிராயப் பேதம் ஏற்பட்டிருக்கிறது. தமது அபிப்பிராயம் தவறென்று தெரிந்து கொண்டால் அவர் தாமாகவே என் வழிக்குத் திரும்பி விடுவார். நானும் என்வழி தவறு என்று தெரிந்து கொண்டால் அவர் வழி சென்று விடுவேன் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே அவரைப்பற்றி எனக்கு கொஞ்சம்கூட சந்தேகமே கிடையாது. என்னைக்கேள்வி கேட்கிறவர்கள் கூட அதே நம்பிக்கையுடனிருக்கலாம்."

* * * *

பிரட்டனின் யுத்த மந்திரி சபை.

பிரதம மந்திரி வீட்டில் எடுத்த படம்: உட்கார்ந்திருப்பவர்:—(இடதிலிருந்து) ஸர்ஜான் ஆண்டர்ஸன், மிஸ்டர் சர்ச்சில், மேஜர் அட்லி, மிஸ்டர் ஈடன்; நிற்பவர்....மிஸ்டர் க்ரீனவுட், மிஸ்டர் பெவின், லார்ட் பீவர்ப்ரூக், ஸர் கிங்ஸ்லிவுட்.

காந்திஜி வற்புறுத்தல்

இவ்வார "ஹரிஜனி"ல் காந்திஜி எழுதியுள்ள ஒரு கட்டுரையில் நாட்டில் ஏற்படக் கூடிய கொள்ளைகளைத் தடுக்க காங்கிரஸ்காரர் என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி விவரித்திருக்கிறார். கொள்ளையர்களின் மனதை மாற்ற முயல்வதே அவர்களின் கடமை என்கிறார் அவர். இதற்குத் துணையாக சமாதானப் படைகளை நிறுவ வேண்டும் என்கிறார்.

பணக்காரர்களுக்கும் அவர் உபதேசித்துள்ளார். அவர்கள் தேவைக்கு மேல் பணத்தை வைத்துக்கொள்ளாமல், அதைச் சமூகத்துக்கு வழங்கி அநுபவிக்க வேண்டுமென்பதே மகாத்மா விடுத்துள்ள மந்திரம், யுத்தத்துடன் முதலாளித்துவமும் ஒழிந்து விடுமென அவர் அபிப்பிராயப்படுகிறார்.

அஹிம்ஸா தர்மத்தில் தமக்குள்ள நம்பிக்கையை எடுத்துரைக்கையில் காந்திஜி அழியாத ஆத்ம சக்தி மூலமாகவே ஆளும் சக்தியைப் பெறவேண்டுமெனக் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கம்

காமன்ஸ் சபையில் சென்ற மாதம் 27-ந் தேதி பேசியபோது மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டதாவது;—

"தூரக்கிழக்கிலிருந்து இன்னும் மோசமான செய்திகள் வரக்கூடும். இதுவரை விபரீதமான சம்பவங்கள் நடந்திருப்பதாலும், விபரீதமான சம்பவங்கள் மேலும் நடக்கப்போவதாலும் தான், நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். சகல குற்றங்களுக்கும் நானே பொறுப்பு; மந்திரி சபையில் மாறுதல் செய்யப் போவதில்லை.

"என் கக்ஷியினரை வேலையிலிருந்து விரட்டி, ஹிட்லர் இஷ்டப்படி சமாதானம் செய்து கொள்ளச் சில பேரைப் பார்ப்பதற்காகவே நாஸித் தலைவரான மிஸ்டர் ஹெஸ் இங்கு வந்தார்.

"பர்ல் துறைமுகம் தாக்கப்பட்டதால் யுனைடெட்ஸ்டேட்ஸின் பஸிபிக் சமுத்திரப் படை தற்காலிகமாக முடமாக்கப்பட்டது. பஸிபிக்கிலும் மலேயா தீவுக் கூட்டத்திலும் தற்காலிகமாக ஜப்பானியக் கடற்படையே பிரதம ஆதிக்கம் பெற்றது. தூரக்கிழக்கில் பாத்யதைகளுள்ள நேசதேசங்களுக்குக் கடுஞ்சேதம் விளைவிக்கக்கூடிய அளவுக்கு ஜப்பானின் கடலாதிக்கமிருக்கிறது. ஆனால் சோர்வடையாது முயன்று வந்தால் நம் ஆதிக்கம் திரும்ப ஓங்கச்செய்யலாம்.

"மலேயா தீபகற்பத்தையும், சிங்கப்பூரையும் காக்க பிரிட்டிஷ், ஆஸ்திரேலியா, இந்தியப் படைகள் கடைசிவரை போர் செய்யும். சென்ற வாரம் இப்படைகளுக்கு உதவியனுப்பியிருக்கிறோம்.

"போர் தந்திரத்தை ஆலோசித்து, போர் நடத்தும் வேலை

பிரிட்டிஷ் மந்திரிசபை

உட்கார்ந்திருப்பவர்:—(இடதிலிருந்து) மிஸ்டர் பெவின், லார்ட் பீவர்புருக், மிஸ்டர் ஈடன், மேஜர் அட்லி, மிஸ்டர் சர்ச்சில், ஸர் ஜான் ஆண்டர்ஸன், மிஸ்டர் க்ரீன்வுட், ஸர் கிங்ஸ்லிவுட். (நிற்பவர்) ஸர் எட்வர்ட் பிரிட்ஜன் (காரியதரிசி), ஏர் மார்ஷல் ஸர் ஸி. போர்டல், ஸர் எ. ஸிங்க்ளேர், அட்மிரல் ஸர் டட்லி பவுண்ட், மிஸ்டர் எ. வி. அலெக்ஸாண்டர், லார்ட் க்ரூான்போர்ன், மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் லார்ட் மாய்னே. காப்டன் மார்கஸன், மிஸ்டர் ப்ரெண்டன் ப்ராககன், ஸர் ஜான் டில், ஜனரல் இஸ்மே, ஸர் ஏ. கடோகன்.

த்யாகராஜ கீர்த்தனம் •

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா, [காபிநைட]

I

பல்லவி

தாசு கோவலெனு! தாசரதீ! நீது தய

அனுபல்லவி

ஜூசுவாரலலோன சுலகனே நனு ஜூசி

சரணம்

1. கனிகரமு காந்தபை கலிகி முத்திடுவேள
ஜனகஜ நாமாட ஸமயமனி பல்கின
2. கரகி பதமுல வ்ரால களி கருணஸேயுவேள
பரதுடெந்தோ நன்னு பக்துடனி பல்கின
3. நேமமுன பரிசர்ய நேர்ப்புன பொகடுவேள
ஸௌமித்ரி த்யாகராஜூனி மாட பல்கின

II

தாசரதீ!	—தசரத குமாரனை ஸ்ரீராமா!
ஜூசுவாரலலோன	—காண்போர் முன்
நன்னு	—என்னை
சுலகனே ஜூசி	—கேவலமாகப் பார்த்து
நீது தய	—உனது கருணையை
தாசு கோவலெனு	—ஒளித்துக்கொள்ள வேண்டுமா? (என்னை நன்கு கடாக்ஷித்தருளக்கூடாதா?)
காந்தபை	—மனைவியான சீதாதேவியிடம்.
கனிகரமு கலிகி	—அன்புகொண்டு
முத்திடுவேள	—அவள் கன்னங்களில் நீ முத்தமிட்ட தருணத்தில்
ஜனகஜ	—ஜனகன் புதல்வியான அந்த சீதாதேவி
ஸமயமனி	—சரியான தருணமென்று உணர்ந்து
நாமாட பல்கின	—என் முறையீட்டை குறித்து உன்னிடம் தெரிவித்தும்
நீதுதயதாசுகோவலெனு	—நீ உனது கருணையை ஒளித்துக்கொள்ள வேண்டுமா?
பரதுடு	—தம்பியான பரதன்
கரகி	—மனமுருகி
பதமுல	—உன் திருவடிகளில்
வ்ரால	—நமஸ்கரிக்க
களி	—அதைக்கண்டு
கருணஸேயுவேள	—அவனுக்கு நீ அன்புடன் அனுக்ரஹித்தருளிய ஸந்தர்ப்பத்தில்
பரதுடு	—அந்தப் பரதன்
நன்னு	—என்னைக் குறித்து
பக்துடனி	—உனது பக்தன் என்று
எந்தோபல்கின	—உன்னிடம் எவ்வளவோ சொல்லி சிபார்சு செய்தும்
நீதுதயதாசுகோவலெனு	—நீ உனது கருணையை ஒளித்துக்கொள்ள வேண்டுமா?
ஸௌமித்ரி	—தம்பியான லக்ஷ்மணன்
நேமமுன	—மிகுந்த நியமத்துடன்
பரிசர்யநேர்ப்புன	—உன் கைங்கர்யங்களை செய்து
பொகடுவேள	—உன்னை துதித்த சமயத்தில்
தியாகராஜூனி	—த்யாகராஜன் என்று பெயர்கொண்ட என்னுடைய
மாடபல்கின	—வேண்டுகோளையும் உன்னிடம் சொல்லி எனக்கு அருள்புரிய சிபார்சு செய்தபோதிலும
நீதுதயதாசுகோவலெனு	—நீ உனது கருணையை ஒளித்துக்கொள்ள வேண்டுமா?

III

ஸ்வாமிகள் தன் பூஜா மூர்த்திகளான ஸ்ரீராம பஞ்சாயதன விக்ரகங்களைக் காணாது தேடி வருந்திய தருணத்தில் பாடிய கீர்த்தனங்களில் இதுவுமொன்றாகும். இக்கீர்த்தனத்தில், ஸீதாதேவி, பரதன், லக்ஷ்மணன் முதலானவர்கள் ஸ்வாமிகளிடம் கருணை கொண்டு ஸ்ரீராமனிடம் சிபார்சு செய்யப் புகுந்ததாகவும், ஸ்ரீராமன் அதை பொருட்படுத்தாதிருந்ததாகவும் உள்ள ஓர் காக்ஷியை காணப் பெற்றது போன்ற மனோபாவம் கொண்டு, தன்னை அவ்விதம் அலக்ஷ்யம் செய்யாமல் ரக்ஷித்தருள வேண்டுமென பகவானைப் பிரார்த்திக்கிறார்.

ஜூசுவார லலோன:—'ராம ராம கோவிந்த' என்ற கீர்த்தனத்தின் 5-வது சரணத்தில் 'மதி ஹீனுலு ஸ்ரீ பதி தாஸுல கிகதி ராராதனி பல்கனுயே கதா' என்று காணப்படும் அபிப்பிராயத்தை யொட்டியே இங்கும் தெரிவித்துள்ளார்.

கனி கரமு:—கருணா ரூபிணியாகிய ஸீதாபிராட்டி ஸ்வாமிகளிடம் இரக்கம் கொண்டு, தன் நாயகனான ஸ்ரீராமன் தன் மீது அதிக ப்ரேமை கொண்டு ஸம்பாஷித்த தருணத்தில் த்யாகராஜன் படும் கஷ்டங்களைத் தெரிவித்து, அக்கஷ்டங்களை நீக்கி யருளுமாறு வேண்டிக் கொண்டாள். அவ்வேண்டுகோளை ஸ்ரீராமன் நிராகரித்து விட்டார் என்ற தன்மையில் ஸ்வாமிகள் வருத்தம் கொள்கிறார்.

கரகி பதமுல:—இந்த சரணத்தால் பக்தியில் சிறந்த பரதன்தன் முறையீட்டைக் குறித்து ஸ்ரீராமனிடம் தெரிவித்து சிபார்சும் செயதும் ஸ்ரீராமன் தன்னை அலக்ஷ்யம் செய்துள்ளார் என்ற தன்மையில் ஸ்வாமிகள் வருத்தம் கொள்கிறார்.

நேமமுன:—எப்போதும் ஸ்ரீராமனின் அருகிலேயே நின்று கைங்கரியங்களைச் செய்து வரும் லக்ஷ்மணஸ்வாமி, ஸ்வாமிகள் மீது இரக்கம் கொண்டு ஸ்ரீராமனிடம் சிபார்சு செய்ததையும் பகவான் கேட்டருளவுல்லையே என்ற தன்மையில் ஸ்வாமிகள் வருந்துகிறார்.

நரஸூஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்றுமில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNCK-11-TM

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps. SANTI ASRAM, Dacca (Bengal)

IV

ராகம் தோடி ஜம்ப தாளம்

(8—வது மேள ராகம்.)

பல்லவி

1.	தா ; ; ; பதநீ பாதா மாபா காமா மபதப	பம	கா	ரீ ;	ஸா ;
	தா சு . . கோ	வ .	.	லெ	னு
	ஸாரிக ரீஸா நிஸநிரி ஸநிதா நீ ; ஸாரீ கா ;	மா	;	கா மா	கம பம
	தா . . . . ச . . . ர . . தி நீ . .	து		த .	ய . . .
2.	தா ; ; ; பத நிஸ்நித தநிதா பமகா ; மபதப	பம	கா	ரீ ;	ஸா ;
	தா சு . . . கோ	வ .	.	லெ	னு
	ஸாரிக ரீஸா நிஸநி ரிஸநி தா நீ ; ஸாரீ கா ;	மா	;	கா மா	கம பம
	தா . . . . ச . . . ர . . தி நீ .	து		த .	ய . . .
3.	தா ; ; ; தநிஸ்ரிஸ்ரி தநிஸா ; நிதபா மபதப	பம	கா	ரீ ;	ஸா ;
	தா சு . . . கோ	வ .		லெ	னு
	ஸாரிக ரீஸா நிஸநிரி ஸநிதா நீ ; ஸாரீ கா ;	மா	.	கா மா	கம பம
	தா . . . . ச . . . ர . . தி நீ . .	து		த .	ய . . .
4.	தா ; தநிஸ்ரி க்ரிஸ்நி தநிஸ்ரி ஸ்நிதப பமகா மபதப	பம	கா	ரீ ;	ஸா ;
	தா . . . . சு . . . கோ	வ .	.	லெ	னு

அனுபல்லவி

1.	தா ; ; ; தா ; தா , நி ஸ்ா , நி தா ; நிஸ்ரிஸ்	க்ரி	ஸ்நி	ஸ்ா ;	நித பம
	ஜூ சு வா . . . . ர . .	ல .	. .	லோ	ன . .
2.	தா ; ; ; தா ; தா ; நி ஸ்ா , நி தா ; நிஸ்ரிஸ்	க்ரி	ஸ்நி	ஸ்ா ;	ஸ்ா ;
	ஜூ சு வா . . . . ர . . .	ல .	. .	லோ	ன
	ஸ்ரிக்ா ஸ்ாரீ நீஸ்ா தாநீ தநிஸ்ா ஸ்ரிஸ்ரி நீஸ்ா	ரி ஸ்ா	நி	பத	பாம கம
	சு . . ல . கனே . . . நன் . . . னு .	ஜூ .	.	. . சி	. . . .

சரணம்

	தாகாரீ கமகா ; ; ; காரீ ஸாரீ கமபத	மப	தப	பம கா	ரீ ஸா
	கனி . க . ர மு . காந்	த .	. .	பை . .	. .
	ஸரிகா ரீஸா நிஸநிரி ஸநிதா நீ ; கா ; ரி ;	கா	மா	கா, ரி	ரீ ஸா
	க . . லி . கி . . . . . முத் தி டு	வே	.	. .	ள .
	தா தா பா ; மபதப பமகா தாதா பாதா நிஸ்ரிஸ்	ரிரி	ஸ்நி	ஸ்ா ; .	; ;
	ஜனக ஜா . . . . . நா . . . மா . . .	. .	. .	ட	
	ஸ்ரிக்ா ஸ்ாரீ நீஸ்ா தாநீ தநிஸ்ா ஸ்ரிஸரி நீஸ்ா	ரி ஸ்ா	நி	தபத	பாமகம
	ஸ . . ம . ய . ம . . . . னி	பல் .	.	. . கி	. ன . .

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடாராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்)

★

யுத்த ப்பயிற்சி

★

ஹிட்லரது படையெடுப்பைத் தடுப்பதற்காக வட அயர்லாந்தில் வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு யுத்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மாதிரி பயிற்சி ஒன்று நடப்பதை படத்தில் பார்க்கலாம்.

★



★

பெரிய கப்பல்

★

விமானமேற்றிச் செல்லும் பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் "எச். எம். எஸ். விக்டோரியஸ்." இக்கப்பலின் மேல் தளத்தின் மீது விமானங்கள் இருப்பதைக் காணலாம்.

★

நவநாகரீகம்

ஒரு வளையல்

★

காசினி எழுதியது

* * * 'மாமி,மாமி!' என்று அவசரமாகக் கூப்பிட்டுக் கொண்டே லேடி சுந்திராசாரியின் மகள் உள்ளே வந்தாள்.

'என்ன சமாசாரம்? சங்கு பிடிக்கப் போருளா?' என்று குரலில் கலவரம் தொனிக்க என் அத்தை கேட்டாள்.

'முதலில் சொல்லி விட்டா சங்கு ஊதப் போகிருர்கள்? என்ன அம்மா சமாசாரம்? ஆத்தில் எல்லாரும் செளக்கியம் தானே?' என்று நான் கேட்டேன்.

'எல்லாரும் செளக்யம்தான் அம்மா, சிநேகிதிகள் இரண்டு பேர்கள் வந்திருக்கிருர்கள். அவர்கள் இருக்கும் பக்கம் அநேகமாக எல்லாப் பெண்டுகளும் ஊருக்குப் போய் விட்டார்களாம். புருஷாளும் ஆபீசுக்குப் போய் விடவே, வீட்டிலே,மொட்டு, மொட்டு என்று உட்கார்ந்திருக்க இவாளாலே முடியலையாம்! வாஸ்தவம் தானே? பயமாகத்தானே இருக்கும்?' என்று சொல்லி விட்டு லேடி சுந்திராசாரியின் மகள் என் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்த்த பார்வை நான் இதை ஆமோதிக்க வேண்டும் என்று கேட்பதுபோலிருந்தது.

'ஆமாம்! அதனுல் என்ன?' என்று கேட்டேன்.

'அதுதான், போது போக்கா சீட்டு ஆடலாமே என்று சொன்னுர்கள். சரி என்று ஆட உட்கார்ந்தோம். அதுக்குள் மத்தியான சினிமாவுக்குப் போகலாம் வா என்று என்னுடைய நாத்தனுர் வந்து கூப்பிட்டாள். அம்மா உங்களை அழைத்துவந்து விட்டால் ஒழிய நான் போகக் கூடாது என்ருள். ஏதடா சங்கடம் என்று உங்களை அபயம் கேட்க வந்தேன். வாருங்கோ சினிமாவுக்கு நாழிகை ஆகிறது!' என்ருள்.

நானும் உடனே புறப்பட்டேன். லேடி சுந்திராசாரியின் சிநேகிதிகளில் ஒருத்தி, சீட்டை ஆடும்போது கை வளையல் குலுங்கும் சப்தம் கேட்கவே அவள் அணிந்திருந்த வளையல்களை கவனித்தேன். மற்றவர்கள் கவனிக்கவேண்டும் என்றே இவள் இப்படி வளையல்களை குலுக்கினுள். ஆனுல் போட்டிருந்த வளையல்களும் பார்க்க அழகாக, நன்ருகத்தான் இருந்தது.

சுமாருக்கு ஒரு விரல் அகலமான கண்ணுடி வளையல். இதை சற்றே வளைவு கொடுததுச் செய்திருந்தது. அதாவது நடுவு அகண்டு ஓரங்கள் சற்றே குறுகிய ஒரு பட்டி. இதையும் அடுத்த பட்டியையும் இசைக்க புஷ்பம் தொடுத்தாற்போல் இரண்டு மொக்குகள் என்று செய்திருந்தது, பட்டியை முக்கால் வாசி கில்ட் பூசி மூடி இருந்தது; இதன் மேல் ரவை மாதிரியில் பொட்டுப் பொட்டாக வைத்திருந்தது. ஆழ்ந்த சிகப்பில் ஒரு ஜதையும், இலேசான நீலத்தில் ஒரு ஜதையும் இவள் போட்டிருந்தாள். நான் முதலில் சொன்னபடி வளையல் ரொம்பவும் நாசூக்காகவே இருந்தது; இதை உபயோகிப்பதும் நாசூக்காக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கறுத்து கெட்டுவிடும். ஜதை வளையலின் விலை எட்டு அணுக்களாம்,

என்ன செய்தீர்கள்

நாங்கள் கொஞ்ச நேரம் சீட்டாடினேம். ஆனுல் லேடி சுந்திராசாரியின் சிநேகிதிகள் மனசு சீட்டாட்டத்தில் செல்லவில்லை. யுத்தத்தைப் பற்றிய பேச்சே மறுபடியும் தொடங்கிற்று.

'ஆமாம்; அன்னிக்குச் சங்கு ஊதின போது நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று ஒருத்தி கேட்டாள்.

'என்ன செய்வது? எல்லாரும் காதிலே இத்தனை பஞ்சை அடைச்சுக் கொண்டு, இதுக்கு என்று தயாராக்கி வைச்சிருக்கும் அறையில் உட்கார்ந்திருந்தோம், வெங்கடேசப் பெருமாளை வேண்டிக் கொண்டோம். நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்ருள் லேடி சுந்திராசாரி,

'எனக்கு ஒன்னுமே தெரியாது; நன்னுத் தூங்கிவிட்டேன் போலிருக்கு! அவர் எழுப்பினுர்; ஒரே பயமாக இருந்தது. நீ இப்படி பயப்படுவதாக இருந்தால் இன்னிக்கே உன்னை ஊருக்கு அனுப்பிவிடுவேன் என்று பயமுறுத்தினுர். அப்புறம் என்னசெய்வது?' என்ருள்.

'நானேதான் முழிச்சுக்கொண்டேன்! காதில் பஞ்சை நன்னுத் திணிச்சுக்கொண்டு, இழுத்துப் போத்திக்கொண்டு படுத்துவிட்டேன். முதலிலே மறுபடி சங்கு ஊதினதுகூட காது கேட்கலை, அவர், 'எழுந்திரு, 'ஆல்-கிளியர்' ஊதி ஆச்சு!' என்கவிட்டுத் தான் எழுந்தேன்!' என்ருள்.

'நீங்களோ?' என்று லேடி சுந்திராசாரி என் பக்கம் திரும்பினுள்.

'நல்ல வேளையாகப் பால் வந்திருக்கு, காபியைப் போட்டுக் குடிச்சு விடலாம்; அப்புறம் ஆனது ஆகிறது என்று அத்தை முதலிலே காபி போட்டு விட்டாள். அடுப்பு மூட்டக்கூடாதே என்று சொன்னதை லக்ஷியம் பண்ணவே இல்லை. காபியை நினைச்சுக்கொண்டு நாங்களும் அடுப்பு மூட்டலாமா என்று அரைமனசாகத்தான் சொன்னேம் என்று வைச்சுக்குங்கோளேன். சுடச்சுட நல்ல கர்பி சாப்பிட்டபின் தெம்பாகத்தான் இருந்தது!' என்றேன்.

'சரித்தான் போங்கோ? எங்களுக்கு எல்லாம் மூலையில் உட்காரணம் என்று போதித்து விட்டு, நீங்கள் நீள வளைய வந்து, காபிபோட்டு, வீட்டு அலுவல்களை கவனித்தீர்களாக்கும்? ஊருக்கெல்லாம் சாஸ்திரம் சொல்லு பல்லி என்ற வசனம் சரியாகத்தான் இருக்கு? என்ருள் லேடி சுந்திராசாரி. நல்லவேளை போன தடவை சங்கு மட்டும் ஊதினதுடன் நின்னு விட்டது! இன்னும் என்ன வருமோ, யாரு கண்டார்கள்!

மாங்காய்ப் பச்சடி

அதிகம் புளிப்பு இல்லாத மாங்காயை ஒன்று பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். அல்லது கொப்பரைத் துருவலில் துருவிக் கொள்ள வேண்டும். முதலில் தோலைச் சீவி விட வேண்டும். அப்புறம் ஒரு தேங்காய்த் துண்டு, காரம் வேண்டிய அளவுக்குப் பச்சை மிளகாய் அல்லது மிளகாய் வத்தல், மட்டாக இரண்டு பச்சைக் கடுகு இவைகளை அம்மியில் வைத்து நன்ருக அரைக்க வேண்டும். திட்டமாக உப்புப் போட்டு, இந்த விழுதையும் நறுக்கின மாங்காயையும் கலந்து பச்சடி போல் தண்ணீர் விட்டு நெகுழ்த்தி உபயோகிக்க வேண்டும். கொஞ்சம் காரம் தூக்கலாகத் தயாரித்தால் சாத்தில் கலந்து சாப்பிடவோ அல்லது தோசை, இட்டிலி முதலியவைக்குத் தொட்டுக்கொள்ளவோ ருசியாக இருக்கும். பச்சைக் கடுகின் வாசனை பிடியாதவர்கள் கடுகு இல்லாமல் இதைத் தயாரித்துக் கொள்ளலாம். ஆனுல் இதை ஒரு ஊறுகாய் மாதிரியில் இரண்டுமூன்று நாள்கள் கூட வைத்திருக்க முடியாது. அன்றன்றைக்குப் புதிசாகத்தான் செய்துகொள்ள வேண்டும். மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

முஸ்லீம்களுக்கு

அவசியமான மத சம்பந்தமான நூல்களும், அங்கீகாரம்பெற்றஸ்கூல் புக் 1-5வது வரையும் கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ,
நாச்சியார் கோவில்.



கொடுவாயூர் போர்ட் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ டி. கே. சுப்ரமணியம், எம். ஏ., எல். டி. குமாரத்தி செள. ராஜலக்ஷ்மிக்கும் நெல்லிப்பள்ளி சாண்டத் எஸ்டேட் மானேஜர் ஸ்ரீ பி.என். ஸ்வாமிநாத அய்யர் குமாரர் ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணனுக்கும் 23-3-42௨ திருச்சூரில் விவாகம் நடைபெற்றது. மணப்பெண் பிரபல வித்வான்களான செம்மை சகோதரர்களின் சிஷ்யை. சென்னை, திருச்சி ரேடியோவில் பன்முறைபாடியுள்ளார்

ஸ்ரீ கே.வி வீரராகவாச்சாரியார் குமாரன் சி. வி. பி. சாரதிக்கும் சென்னை அட்வகேட் ஸ்ரீ வி. கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் புத்திரி செள. ஜயலக்ஷ்மிக்கும் சமீபத்தில் கோயமுத்தூரில் விவாகம் நடந்தது.

பம்பாம் ஸர் டொரப்ஜிபேடா சமூக சேவா சங்கத்தைச்சேர்ந்த மிஸ் கோகிலா துரைஸ்வாமி, பி.ஏ.(ஆனர்ஸ்) சென்னை சிசுசம்ரக்ஷண சங்கத்தின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். இவர் கடலூர் அட்வகேட் ராவ் சாஹேப் ஸி. ஆர். துரைஸ்வாமி முதலியாரின் புத்ரி. (பி.பி.பி.)

சித்திரமும் சிருங்காரமும்

★

இவ்வாரம் மஹா கனம் டாக்டர் எம். ஆர். ஜயகர் இந்திய சினிமா சம்பந்தமாகத் தெரிவித்திருக்கும் மிகவும் ரஸமான கருத்துகள் பிரசுரமாகின்றன. சினிமாத் தொழில். அதில் ஈடுபடலாமா கூடாதா, அதனுல் அபக்யாதி ஏற்படுகிறதா, படப் பிடிப்பு எத்தகையதாய் இருக்கவேண்டும். மேனுட்டுப் படங்கள் சிறப்புடன் சோபிப்பதேன். காரணம், இந்தியப் படங்களில் காணப்படும் குறைகள், புராணக் கதைகளைப் படம் பிடித்தல், ஆகிய பல விஷயங்களைப்பற்றியும் அவர் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியதவசியமாகும்.

ராஜகுமாரிகள் நடிப்பு

ராஜ குடும்பத்தைச் சேர்ந்த சிப்பந்திகளின் சகாய நிதிக்காக ஒரு நாடகம் நடத்தப்பட்டது. அதில் சில கிராமச் சிறுவர் சிறுமிகள் கலந்துகொண்டதுடன் அரச குமாரி எலிஸபெத் ப்ளாரிஸல் இளவரசாகவும், அரச குமாரி மாகரெட் ஸிண்ட்ரல்லாவாகவும் நடித்தனர். படத்தில் எலிஸபெத் ராணி ஒத்திகையைக் கவனிப்பதைக் காணலாம்.

மஹாகனம் ஜயகர் கருத்து

சமீபத்தில் மஹாகனம் டாக்டர் எம். ஆர். ஜயகர் "பிலிம் இந்தியா" என்ற மாதப் பத்திரிகை நிருபரால் பேட்டியிடப்பட்டார். அப்போது மஹாகனம் ஜயகர் சினிமா சம்பந்தமாகத் தெரிவித்த சில ரஸமான விஷயங்கள் அந்தப் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கின்றன. நம் நேயர்களுக்காக் அவற்றின் சில பகுதிகளைக் கீழே தருகிருேம்.

"நான் இங்கு அதிக சினிமாப்படங்களைப் பார்ப்பது கிடையாது. நான் தனிமையாக இருக்கிறேன்: ஒரு படத்தைப் பார்த்து ரஸிக்க வேண்டுமானுல், நம் மனதிற்குகந்த சில நண்பர்களுடன் தான் நாம் படங்களைப்போய்ப் பார்க்க வேண்டும். இங்கிலாந்தில் எனக்குக் காரியதரிசியாயிருந்த யுவதி நன்கு படித்தவள்: நல்ல கலாஞானம் உள்ளவள். பார்க்கத் தக்க படம் ஏதாவது வந்தால் அவள் என்னை இழுத்துச் செல்வது வழக்கம். அவள் என்னை அழைத்துச் சென்ற படங்கள் யாவும் மிகவும் சிறந்தவை என்றே கூறவேண்டும். லண்டனில் நான் பார்த்த படங்கள் பொது மக்களின் பொழுது போக்கு சாதனங்களாகவும் அவர்களுக்கு புத்தி புகட்டும் கருவிகளாகவும் இருப்பதை நான் கண்டு கொண்டேன். பிரசாரத்திற்கும் முதியோர் கல்வி அபிவிருத்திக்கும், ரேடியோ, பத்திரிகைகள் ஆகியவற்றைக் காட்டிலும் சினிமா தான் அதிகம் உதவுகிறது.

'ஸஸுரால் என்ற ஹிந்தி படத்தில் ஒரு காட்சி: மிஸ் மாதுரியும் மோதிலாலும்.

நான் விரும்பிய காட்சிகள்

"நான் பார்த்த இந்திய படங்கள் ஒரு டஜனுக்கு அதிகமிராது: இவற்றில் மராத்தி படங்கள் தான் அதிகம்: நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை நிலைமையை உண்மையாகவும் தெளிவாகவும், இயற்கையாகவும் எடுத்துக் காட்டுவதைத்தான் நான் அதிகம் விரும்புகிறேன். "ஸங்காரி பாஷ்" என்றபடம். என் மனதிற்குத் திருப்தி தந்தது அது ஒரு சிறந்த சித்திரம்: உயர்தர பொழுது போக்கு: உத்க்ருஷ்டமான படிப்பினையும் கொண்டது: நான் ரஸித்த மற்றொரு படம் "துகாராம்"! அதில் காணப்பட்ட பிரமிப்பூட்டும் சம்பவங்களை மட்டும் நான் ரஸிக்கவில்லை. இந்தக் குறை இல்லாவிட்டால் பெரியோரின் ஜீவியத்தை எடுத்துக் காட்டும் உயர்தர படங்களுள் அது ஒன்று என்பதில் சந்தேகமில்லை. "ஞானேஸ்வர்" படமும் இதற்கு கிட்டத்தட்ட சமமாயிருந்தது. ஆனுல் "துகாராம்"போல் அது அவ்வளவு சிறப்பு வாய்ந்ததல்ல.

எனக்கு ஏற்படும் வேதனை

"நம்மஹான்கள்செய்தமஹத்தான காரியங்களை இந்த சினிமாக்களில் காட்டுவது எனக்கு அதிக வேதனையையுண்டுபண்ணுகிறது: இந்த மஹான்களது சரித்திரங்களையும் புராணக் கதைகளையும் படம் பிடிக்காமல் தள்ளிவைப்பதுதான் நலம் என்பது என் கருத்து. நம்மதிப்புக்குகந்த இந்த சிரேஷ்ட புருஷர்களைப்பற்றித் தயாராகும் இந்தப் படங்களைப் பார்க்கும் நமக்கு, அவர்கள் சில ஆச்சர்யகரமான காரியங்களை மட்டுமே செய்தனர். என்ற எண்ணம் மேலிடுவதாயிருக்கிறது. மானிட வர்க்கத்திற்கு அவர்கள் மஹத்தான சேவை செய்தவர்கள்: அவர்கள் செய்த இத்தகைய சேவைக்கும் இந்தக் காரியங்களுக்கும் ஒரு வித சம்பந்தமும் கிடையாது. அவர்களுக்கிருந்ததாகக் கூறப்படும் அமானுஷ்ய சக்தியைப் படம் பிடித்துக் காட்டுவது யுக்தமல்ல. ஒவ்வொருவரும் சுயமாக சிந்தித்து முடிவு செய்வதையும, சொந்த முயற்சியால் முன்னணிக்கு வரலாம் என்பதையும் வற்புறுத்தக்கூடிய படங்கள் தான் பொதுமக்களுக்குத் தேவை. அநேக ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தெய்வீக சக்தி நிரம்பிய புருஷர்களது கதைகளைப் படம் பிடித்து நமக்குக் காட்டுவதால் நமக்கு பிரயோ

ஜனமில்லை. ஆனால் சமீப காலத்தில் இருந்த மஹான்களைப் பற்றிய படங்களைத் தயாரித்தால் அந்தப்படத்தைப் பக்தியுடன் பார்ப்பவருக்கு அதிக சிரத்தையும் நம்பிக்கையும் உதயமாவது சகஜம்.

இவை எதற்கு ?

"அந்த மஹான்களது குண விசேஷங்களை நாமும் தீவிர முயற்சி காரணமாக ஸ்வீகரிக்க முடியுமாயின், அவர்களுடையபடங்களைத்தயாரிக்கலாம். இத்தகைய படங்களைப் பார்க்கும்போது அவர்களைப் போல் நாமும் உயர் நிலை ஏய்த முடியும் என்ற நன்னம்பிக்கை நம் முன் உதயமாக வேண்டும். துகாராம் படத்தில் ஒரு மஹான் ஆகாய விமானத்தில் எதற்காக பறந்து வரவேண்டும்? அல்லது ஞானேஸ்வர் படத்தில் ஒரு கற்சுவர் ஏன் நகர்ந்து ஆகாயத்தில் கிளம்பவேண்டும்?

இயற்கையான படங்கள்

"இயற்கையாகவே மூடபக்தியுள்ள நம் பொது மக்கள் இத்தகைய படங்களை அதிகம் ரஸிக்கக் கூடும்: எனக்கு இவை கொஞ்சம் கூட திருப்தி தருவதில்லை. அசாதாரணமான சம்பவங்களைக் காட்டும் இத் தகைய படங்களை அதிகம் உற்பத்தி செய்யாமல் இருப்பது தான் உசிதம். உணர்ச்சி நிரம்பிய ஜனங்களுக்கு உண்மையான படங்கள் தான் அவசியம். படங்கள் மூலம் குருட்டு நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும்: திடுக்கிடும் சம்பவங்கள் மீதிருக்கும் மோஹத்தை நீக்க வேண்டும்: வாழ்க்கைப் பிரச்னைகளை சீர்தூக்கிச் சிந்திக்கும் சக்தி அதிகரிக்க வழி காட்ட வேண்டும்.;

உயர்தர ஆங்கிலப் படங்கள்

பிறகு டாக்டர் ஜயகர் சில ஆங்கிலப் படங்களைச் சுட்டிக் காட்டி, அவைகளைப் பாராட்டினார். "எடிஸன்", "எமிலி ஸோலா", "குட் பை மிஸ்டர் சிப்ஸ்", "மிஸ்டர் ஸ்மித் வாஷிங்டன் போகிறார்", "தி மார்டல் ஸ்டார்ம்" ஆகிய படங்கள் தமக்கு மட்டிலாத மகிழ்ச்சியளித்ததாகவும் அவர் தெரிவித்தார். இந்தியப் படக்காரர்கள் இந்த படங்களைத் தங்களுக்கு உதாரணமாகக் கொள்வது பயன் தரும் என்றார் அவர். "ஆல் திஸ் அண்ட் ஹெவன் டு" என்ற படத்தையும் டாக்டர் ஜயகர் வெகுவாக சிலாகித்தார்: வார்னர் பிரதர்ஸாரின் இந்தப்படத்தில் சார்லஸ் போயரும், பெட்டி டேவிஸும் மிகவும் உயர்தரமாக நடித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதே மாதிரி சிறந்த சித்திரக் காட்சிகளை நம் நாட்டில் தயாரிக்கலாம் என்றும், நம் நாட்டில் இதற்கு பொறுத்தமான சந்தர்ப்பங்கள் பல இருப்பதாகவும் அவர் கூறினார். இந்த முப்பது வருஷ காலத்திற்கப்புறமாவது. இந்திய சினிமாத் தொழில்தனது பொறுப்பையுணர்ந்து நடக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பொது மக்கள் இதற்கு வழி காட்டவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று பிரபல நக்ஷத்திரங்கள்

பெட்டிக்ராபிள் விக்டர் மச்சூர், கரோல்லாண்டிங். இருபதாம்நூற்றுண்டு பாக்ஸ் கம்பெனியாரின் "ஐவேக் அப் ஸ்க்ரிமிங்" படத்தில் நடிக்கின்றனர்

சினிமாத் தொழிலும் ஒழுக்கமும்

நம் நாட்டில் படித்த யுவர்களும் யுவதிகளும் சினிமாத் தொழிலில் ஈடுபடவேண்டும் என்றும் டாக்டர் ஜயகர் தெரிவித்தார். சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென அவர் கூறினார். சினிமாத் தொழிலில் சேர்ந்திருப்பவர்களுக்கு ஒழுக்கம் கெட்டு விடுகிறது என்ற கூற்று புறக்கணிக்கத் தக்கது என்று அவர் வெளியிட்டதுடன், எவருடைய ஒழுக்கமும், அதுபஹிரங்கமான ஆபாஸ நிலையை எட்டும்வரை, பிறரைப் பாதிக்காதென்றும் அவர் விளக்கினார். "ஒழுக்கம் தவறியவர்களில் வாழ்க்கையை ஒருவரும் சீர்திருத்த முடியாது: கெட்டுப் போகக்கூடியவர்கள் எங்கிருந்தாலும் கெட முடியும். உயர்ந்த மனப்பான்மையும், மனோதிடமும், உன்னத லக்ஷியமும் கொண்டவர்கள் எங்கிருந்தாலும் கெடாமல் இருப்பர்: பல வருஷங்களுக்கு முன்பு நான் சங்கீதம் அப்யஸித்தேன்: சில சமயம் கலாசாலை நேரத்திலும் நான் இவ்விதப் பயிற்சி பெற்று வந்த போது சிலர் என்னுடைய ஒழுக்கம் கெட்டுவிட்டதாகக் கூறினர். ஆனால் அவ்விதம் ஒன்றும் நேரவில்லை. எந்தக் கலையும் எவரையும் கெடுப்பதில்லை. கலை கசடர்களிடம் சிக்கிக்கொண்டால்தான் ஆபத்து ஏற்படுகிறது. அந்தக்கலையைப் பரிபூரணமாக அப்யஸித்தால் ஒரு தீங்கும் வருவதில்லை. அதிலே மனம் லயித்திருக்கட்டும்: இதற்கப்புறம் மற்றவை மிகவும் சாமான்யம்."

இந்தியாவுக்கு ஏற்றவை

இதற்கப்புறம் டாக்டர் ஜயகரை, ஸிர்கோ படமான "கீதை"யைப்பற்றி வினவப்பட்டபோது அவர் தாம் அந்தப் படம் பகவத்கீதையை அடிப்படையாகக் கொண்டு பிடிக்கப்பட்டது என்ற எண்ணத்துடன் தான் அந்தப் படத்தின் ஆரம்பதின விழாவில் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டதாகக் கூறினார், தமக்கு பகவத்கீதையிடம் இருக்கும் பக்தியும் ப்ரேமையும் அளவிட முடியாது என்றும், படத்தைப் பார்த்த பின்புதான் அது அமெரிக்கத் திருட்டுக் கோஷ்டியாரின் நடைமுறையைத் தழுவியது என்பது தமக்குத் தெரிய வந்ததாயும், ஆனால் படத்தில் இடையிடையே மஹாத்மாஜியின் கிராமக் கைத்தொழில் திட்டம், கதர் அபிவிருத்தி இயக்கம் ஆகியவற்றை யொட்டிய காட்சிகள் இருந்ததாகவும் சொன்னார். ஸ்திரீ-புருஷ சம்பந்தம், காதல், கொலை, ஆகிய அம்சங்களை மிகவும் பிரதானமாக எடுத்துக் காட்டும் படங்கள் இந்திய சமூகத்திற்கு நன்மை புரியமாட்டா என்றும், அதிலும் முக்கியமாக படத்தைப் பார்ப்பதால் உருவகப்படும் சிறுவர் சிறுமிகளுக்கு அதனால் பாதகம் சம்பவிக்கும் என்றும் அவர் தமது கருத்தைத் தெரிவித்தார். ஒவ்வொருவருக்கும் இந்த காமக்ரோத உணர்ச்சி அதிகமாக இருக்கும் காலம் உண்டு என்றும், உள்ளத்தை உத்சாகப் படுத்தும் காட்சிகளையும், தியாகம், தைர்யம் ஆகிய குணங்களைக் காட்டும் கட்டங்களையும் காணும்போது ஒவ்வொருவருக்கும் திருப்தி ஏற்படுவது சகஜம் என்றும் டாக்டர் ஜயகர் சொன்னார்.

முக்கியமான பிரச்னை

"நம் தினசரி வாழ்க்கையை இந்த சினிமா படங்கள் உருப்படுத்துவனஎன்பதை நான் அறிந்தவன். நம் நடவடிக்கைகள், நம் உடை, நம் ஒழுக்க முறை, இவை யாவும் சினிமா மூலம் அதிகம் பாதிக்கப்படுகின்றன. பத்திரிகையோ ரேடியோவோ அவ்வளவாக நம்மைப் பாதிப்பது கிடையாது. சினிமா மூலம் நல்ல பயனை அடைய நமக்கு உரிமை இருக்கிறது: நம் சமூகம் இதைக் கோர வேண்டும். இளைஞர்களுக்கு சினிமாப் படங்கள் மூலம் அதிகப்பிரயோஜனம் ஏற்படலாம் என்பதே என் கருத்து. படங்களைத் தயாரிப்பவர்களும், ஸர்க்காரும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும்:

நாடகமும் படமும்

பிறகு நாடகங்களைப்பற்றி டாக்டர் ஜயகர் வினவப்பட்டார். உயிருள்ளவர்கள் நம் கண் முன் நடிப்பதற்கும், வெள்ளித் திரை மீது நடிகர்களது சாயை விழுவதற்கும் அதிக வித்தியாசமிருக்கிறதுஎன்றும், ஒன்று பிரத்தியக்ஷ வஸ்து என்றும், மற்றொன்று வெறும் நிழல் என்றும் அவர் சொன்னார். எது ஏமாற்றமோ அதைக் காணத்தான் நமக்கு சந்தோஷம் வருகிறது என்றும், நம் உல்லாஸ வேளையில் நாம் சில சாத்வீகப் பொய்களால் ஏமாற்ற முறுகிறோம் என்றும் அவர் கூறினார். "தற்கால நாகரிகம் நம்மைப் பல வகையிலும் சூழ்ந்திருக்கிறது. ஆகவே நம் பொழுது போக்கும் யந்திரமயமாவதில் ஆச்சர்யமில்லை. இதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. சங்கீதம். சம்பாஷணை, படப் பிடிப்பு, ஆகிய யாவும் இன்னும் உயர்தரமானதாய் இருப்பது அவசியம். அநேகம் சினிமாப்பாட்டுகளைக் கேட்கவும் கூசுகிறது! மெட்டுகள் மிகவும் மோசமாயிருக்

சென்ற வார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படுமென்றும் இங்கிலாந்து அரசருக்கும் மந்திரி சபைக்கும் உள்ள சம்பந்தத்தைப் போலவே இங்கும் அந்த தேசிய சர்க்காருக்கும் வைஸ்ராய்க்கும் சம்பந்தம் இருக்குமென்றும் தாங்கள் கூறினீர்கள். அதுவன்றி இந்திய மந்திரி ஆபீஸை குடியேற்ற நாட்டு மந்திரி ஆபீஸோடு சேர்த்து விடுவதாகச் சொன்னதோடு இந்த முக்கிய விஷயத்தை இதுவரைத் தங்களிடம் பிறர் பிரஸ்தாபிக்காததைப் பற்றி ஆச்சரியமும் தெரிவித்தீர்கள். இத்தனையும் இப்போது மறுக்கப்படுகின்றன. கடைசியாகஎங்களிடம் தாங்கள் பேசிய போது வெளியிட்ட விஷயங்களைக் கவனித்தால் இதுவரை கட்டிய கோட்டை பூரணமாக அழிக்கப்பட்டதாகவே தெரிகிறது.

"ஏற்பாடு செய்ய முடியும்"

தங்கள் கடிதத்தில் நூதனமாக ஒரு வாதத்தைக் கிளப்பியிருக்கிறீர்கள், அதைப் பற்றி நமது சம்பாஷணையில்இதுவரைப் பிரஸ்தாபிக்கவேயில்லை. தாங்கள் மெஜாரிட்டியின் சர்வாதிகாரம்" என்பதைப்பற்றி இப்போது குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த சமயத்தில் இது சம்பந்தமாக இவ்வித அறிக்கை வெளியிடப்பட்டதுதான் விசேஷ ஆச்சர்யத்தைத் தருகிறது. அவசர சமயத்துக்காக பற்பல கட்சியினரையும் சேர்த்து அமைக்கப்படும் ஒரு மந்திரி சபையில் இவ்வித சங்கடம் நேருவது இயற்கையே. அதற்குப் பரிகாரம் தேட பல வழிகளிருக்கின்றன. தாங்கள் மாத்திரம் முன்னமே இதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருந்தால் நாங்கள் இதைத் தீர்க்கமாக விவாதித்து திருப்திகரமான ஒரு ஏற்பாடு செய்திருப்போம் கூட்டு மந்திரிசபை ஏற்படவேண்டியது அவசியமென்றும் அவர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்றும் தாங்கள் கூறினீர்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொண்டோம். பதவி பெறுவதற்குக் காங்கிரஸ்காரர்கள் முனைவது வழக்கமில்லை. இந்திய மகா ஜனங்கள் அனைவருக்கும் அதிகாரமும் சுதந்திரமும் அடைய வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். முக்கியமான விஷயம் முடிவு செய்யப்பட்ட பிறகு மந்திரி சபையை எவ்விதம் அமைப்பதென்ற விஷயத்தைப் பற்றி விவாதிக்க இருந்தோம். ஆனால் தாங்கள் மேற்சொன்ன விஷயத்தை இந்தக் கடைசி கடிதத்தில் பிரஸ்தாபித்து விஷயத்தை குழப்பிவிட்டீர்கள்.

முதல் முதலில் நான் தங்களிடம் பேச வந்தபோதே வகுப்புவாத விஷயம் முதலியனபற்றி இப்போது பேச்சில்லையென்பதை விளக்கிச் சொன்னது தங்களுக்கு ஞாபகமிருக்கும். உண்மையான அதிகாரத்தை இந்தியருக்கு அளிக்க இணங்கிவிட்டால் மற்ற விஷயங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் தாங்களாக ஒரு முடிவுசெய்து கொள்வார்கள் என்பதையும் நான் எடுத்துச்சொன்னேன். இந்த அபிப்பிராயத்தைத் தாங்களும் அங்கீகரிப்பதாக நான் நினைக்கும்படி தாங்கள் நடந்துகொண்டீர்கள். பிரிவினையைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆதரித்து வளர்க்காவிட்டால் எந்தக் கட்சியினராக விருந்தாலும் இந்தியர் பலரும் ஒன்றுபட்டு பொதுவான காரியங்களைக் கவனிக்கலாம் என்றே நாங்கள் நம்பினோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த கஷ்டகாலத்திலும் பிரிட்டிஷார் அந்த நாசக்கொள்கையை விட்டு நடப்பதாகக் காணோம். கூடுமானவரை இந்தியாவில் தனது ஆதிக்கத்தைச் செலுத்திவரவே அது விரும்புகிறது. அதற்காக இங்கு பிரிவினையை வளர்த்துவர எண்ணுகிறது. நெருங்கிவரும் படையெடுப்பைத் தடுத்து இந்தியாவைப் பாதுகாக்க முற்படவில்லை.

இந்தியராகிய நாங்கள் இந்நாட்டுப் பாதுகாப்பையே பெரிதாக மதிக்கிறோம்.

* * * *

கின்றன, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கிடைத்திருக்கும் அரும்பொக்கிஷமான இந்திய சங்கீதத்தை ஸினிமா இவ்விதம் ஆபாஸப்படுத்த விடலாகாது.

பொது மக்கள் பொறுப்பு

"சங்கீதம், போட்டோ, நடனம், கதை, உடுப்பு, ஹிந்தி பாஷை அபிவிருத்தி, இவற்றையெல்லாம் சினிமாத்தொழில் ஆதரிக்கும் என நானும் எதிர்பார்க்கிறேன். ஆனால் எவ்விஷயமாயினும் சரி, பொதுமக்கள் மிகுந்த ஜாக்ரதையாயிருக்கவேண்டும். புத்தி கூர்மையுடன் விமர்சிப்பவர்களும், சினிமா அபிமானிகளும், தங்களது பொழுதுபோக்குத் திட்டத்தைப்பற்றி அபிப்பிராயம்கூற உரிமை பெறவேண்டும், நல்ல ருசியும் நல்ல படிப்பும் கொண்ட சினிமா ரஸிகர்களுக்குத்தான் எந்தப்படம் பொது ஜனங்களுக்குக் காட்டப்படலாம் என்று முடிவு சொல்ல அதிகாரம் இருக்க வேண்டும், பத்திரிகைகளில் ஒவ்வொரு படத்தைப்பற்றியும் மிகைப்படுத்தி எழுதி வருவது சகஜமாயிருக்கிறது. என்னைப்போன்றவர்களுக்கு எது உத்தமம், எது மத்யமம், எது அதமம் என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகிறது. அமானுஷ்யக் காட்சிகளால் பாதிக்கப்படாமல், உயர்தரமான அம்சங்களைப் பிரதானமாகக் கருதி, விமர்சம் எழுதும் பத்திரிகைகள்தான் நமக்குஉதவுபவை; பத்திரிகைகளின் ஆதரவை சில ஸினிமா கம்பெனிகள் தங்கள் பக்கம் ஆகர்ஷித்துவிடலாம்: இந்த சமயத்தில் பொது ஜனங்கள் விஷயத்தை யறிந்து தராதரத்தை உணர்ந்து முன்வரவேண்டும். படப்பிடிப்புத் தொழிலின் அபிவிருத்திக்கு பகுத்தறிவு தான் முக்கியமானது"

முஸ்லிம் லீகும் நிராகரித்தது

காரியக் கமிட்டியின் தீர்மானம்

11-ம்தேதி அகில இந்திய முஸ்லீம் லீக் காரியக் கமிட்டிக் கூட்டம் கூடியபின் ஜனாப் ஜின்னா ஸர் க்ரிப்ஸ் விடுதிக்குச் சென்று கமிட்டியினர் செய்த பின்கண்ட முடிவை அறிவித்தார்:—

இப்போதுள்ள முறையில் ஸர் க்ரிப்ஸ் திட்டத்தை லீக் காரியக் கமிட்டி ஏற்றுக் கொள்ள முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சை யூனியன்கள் ஏற்பட இடம்கொடுத்து பாகிஸ்தான் திட்டத்துக்கு வகை செய்திருப்பதுபற்றி நன்றி தெரிவித்தாலும் முக்கிய விஷயங்களில் எவ்வித மாறுதலும் செய்ய சர்க்கார் இணங்காமல் பிடிவாதம் காட்டுவதால் இப்போதுள்ள முறையில் இந்தத் திட்டத்தை ஏற்பதற்கில்லையெனச் சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியாவைப்பிரிக்க வேண்டுமென முஸ்லீம்கள் விடாது வற்புறுத்தியதால் யூனியனிலிருந்து சில மாகாணங்களுக்கு விலக உரிமையளிக்க இணங்கியிருப்பதாகத் தெரிகிறது. அனால் அதை அநுஷ்டிப்பதற்கான முறை அந்த கொள்கையே பாதிப்பதாக இருக்கிறது. நிர்வாக சௌகரியத்திற்காக இப்போது பிரிக்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கும் அதே உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம்களின் பிற்கால கதிமோக்ஷத்தை நிர்ணயிக்க வல்ல ஒரு முக்கிய காரியத்தில் இவ்விதம் திட்டமற்ற விதத்தில் ஒரு முடிவு கூறுவது முஸ்லீம்களுக்குத் திருப்தியை அளிக்காது. முக்கியமான பிரச்னைகளைக் கவனிக்காமல் இந்தியாவின் பிற்கால விஷயத்தை நிர்ணயிக்க முயலுவதால் கஷ்டமே விளையும்.

"திட்டம் வாபீஸ்"

நிருபர்களுக்குப் பேட்டி

புது டில்லியில் 11-ம் தேதி நடந்த பத்திரிகை மகாநாட்டில் மகீகனம் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் கூறியதன் விவரம் பின் வருமாறு:—

காரியக் கமிட்டியார் இத்திட்டத்தை ஏற்கத் தயாராயில்லை என்றும், தேசிய கவர்ன்மெண்டில் கலந்து கொள்ளத் தயாராயில்லை என்றும் அவர்களது கடிதம் தெளிவாக்கிவிட்டது.

ஆகையால் நகல் வாபீஸாகிவிட்டது. இங்கே நான் வருவதற்கு முன்னிருந்த நிலைமைக்கு நாம் சென்று விட்டோம்.

இந்தியாவுக்கு முன் ஆபத்து தோன்றியுள்ளது. நானும் நீங்களும், மற்றும் இந்தியாவை நேசிக்கும் அனைவரும், தத்தம் வழிப்பிரகாரம் இந்தியாவுக்காக தங்கள் சக்தி பூராவையும் பயன்படுத்தவேண்டும்.

பிரிட்டன் தன்னாலான வரை பாடுபடும். அமெரிக்கா சாத்தியமானவரை செய்கிறது. இப்போது இந்தியாவும்முழுமனதுடனும் முழு முயற்சியுடனும் தன் எல்லையைப் பாதுகாக்கவும், தன் ஸ்திரீ குழந்தைகளுக்கு பக்கத்து சீன நண்பர்களுக்கு நேர்ந்த கொடிய பயங்கர விதி வராமல் தடுக்கவும், ஒவ்வொரு வகையிலும் பாடுபட வேண்டும்.

தூதர் விளக்கம்

ரேடியோப் பிரசங்கம்

இம் மாதம் 11-ந்தேதி ரேடியோ மூலம் பேசுகையில் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் கூறியதாவது:–

யுத்த மந்திரி சபை சார்பில் நான் கொண்டு வந்திருந்த நகல் அறிக்கையை உங்கள் தலைவர்கள் நிராகரித்துவிட்டதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

நிகழ் காலத்தைப்பற்றிய கஷ்டமே இப்பொழுது ஏற்பட்டுளது. முதலாவதாக பாதுகாப்பு சம்பந்தமான கஷ்டம். இது விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் மனோபாவம் ரொம்பவும் சாமானிய நிர்வாக சபையிலுள்ள இந்தியப் பிரதிநிதிகளுக்கு அதிகப்படி அதிகாரம் வழங்க நமக்குப் பூரண ஆவலிருப்பதைக் காட்டுவதற்காக யுத்த இலாகா ஒன்றைப் புதிதாகச் சிருஷ்டிக்க நாங்கள் முன் வந்தோம். இதன் பிரகாரம் ஸேனாதிபதியின் சில பொறுப்புகள் யுத்த மெம்பர் வசமும் மற்றும் சில இந்தியப் பாதுகாப்பு மெம்பர் வசமுமிருக்கும்.

இந்த ஏற்பாடு சில கக்ஷியினருக்குத் திருப்தியளித்தது; ஆனால் காங்கிரஸுக்குமட்டும் திருப்தி ஏற்படவில்லை.

* * * *

வங்கக் கடலில்

வங்கக் கடலில் எதிரி கடற்படை விமானங்களை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பல் உள்பட எதிரி கடற்படை வங்காளக் குடாக் கடலில் இருப்பதாக இம்மாதம் 6-ந் தேதி விடியற்காலை தெரியவந்தது. சமுத்திரத்திலுள்ள வியாபாரக் கப்பல்கள் எதிரிக்கப்பல்களாலும், விமானங்களாலும் பல தடவை தாக்கப்பட்டன.

விசாகப் பட்டணம் துறைமுகம் தாக்கப்பட்டது. அன்று காலையிலும், மறுபடியும் பிற்பகலிலும் ஒரு சில விமானங்கள் விசாகப்பட்டணம் துறைமுகத்தின்மீது குண்டுகள்வீசின. துறைமுகப் பிரதேசத்துக்குச் சிறிது சேதம் ஏற்பட்டது.

காகினடாமீதும் குண்டுகள் விசப்பட்டன; சேதம் சொற்பமே.

திரிகோண மலை தாக்கப்பட்டது

இம்மாதம் 9-ம் தேதி காலை ஜப்பானிய விமானங்கள் திரிகோணமலை மீது குண்டு வீசியதாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்து மஹா சமுத்ரத்தில்

'டார்ஸெட்ஷயர்', 'கார்ன்வால்' என்ற பிரிட்டிஷ் க்ரூஸர்கள் ஜப்பானிய விமானத் தாக்குதலால் இந்து மஹாசமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டன. அவ்விரு கப்பலின் தலைவர்களுள்பட 1100 மாலுமிகளுக்கதிகமாகத் தப்புவிக்கப்பட்டனர்.

இம்மாதம் 4-ம் தேதி ஆறுமுக நேரில் நடந்த திருச்செந்தூர் தாலூகா மூன்றுவது அரசியல் மஹாநாட்டிற்கு விஜயம் செய்த மாஜி மந்திரி டாக்டர் பி. சுப்பராயன், ஸ்ரீ கே. காமராஜ் நாடார் முதலியவர்கள் மகாநாடு முடிந்து புறப்படும் போது எடுத்த படம்.



மணலூர் பேட்டை மகாநாடு

★

ஸர்தார் வேதரத்னம் பிள்ளை தலைமையில் மணலூர் பேட்டையில் ராஜீய மகாநாடு நடந்தது. வலங்கிமான் ஜனாப் அப்துல் சத்தார் ஸாஹேப் மகாநாட்டைத் திறந்து வைத்தார். ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

(என். என். பி. எஸ்.)

★

ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள்

எழுதிய

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.அ.			ரூ.அ.	
வைதேகி	2	8	சுகந்தபுஷ்பம்	1	0
பத்மசுந்தரன்	2	8	கருணாலயம்	1	0
சாருலோசனா	2	8	சாந்தகுமாரி	1	0
காதலின் கனி	2	8	மாய ப்ரபஞ்சம்	1	0
ராதாமணி	2	8	சந்திரமண்டலம்	1	0
தியாகக் கொடி	2	0	புத்தியே புதையல்	0	14
நவநீதகிருஷ்ணன்	2	0	கதம்பமாலை	0	12
சாமளநாதன்	2	0	பட்டமோ பட்டம்	0	10
மங்களபாரதி	2	0	மகிழ்ச்சி உதயம்	0	10
சண்பகவிஜயம்	1	12	பிச்சைக்காரக் குடும்பம்	0	8
கௌரீமுகுந்தன்	1	12	ஆனந்தஸாகர்	0	8
ஸாரமதி	1	12	வீரவஸந்தா	0	8
தயாநிதி	1	12	நளினசேகரன்	0	8
உணர்ச்சி வெள்ளம்	1	8	மூன்று வைரங்கள்	0	8
சந்தோஷமலர்	1	8	படாடோபத்தின் பரிபவம்	0	8
சோதனையின் கொடுமை	1	8	வத்ஸகுமார்	0	8
ராஜமோகன்	1	4	படகோட்டி	0	8
அனாதைப்பெண்	1	4	மாலதி	0	8
இன்பஜ்ஜோதி	1	4	ப்ரேமப்ரபா	0	8
வானக்குயில்	1	4	சுடர் விளக்கு	0	6
கஸ்தூரி திலகம்	1	4	பக்ஷமாலிகா	0	6
கானல் நீர்	1	4	மாதவமணி	0	4
புகழ்மாலை	1	4	ஸரஸராஜன்	0	4
கலா நிலையம்	1	4	ஜெயசஞ்சீவி	0	4
ஜீவியச் சுழல்	1	4	சுகுணபூஷணம்	0	4
ஆத்மசக்தி	1	4	அம்ருததாரா	0	4
உத்தமசீலன்	1	4	அன்பின் சிகரம்	0	4
பரிமளகேசவன்	1	4	உளுத்த இதயம்	0	4

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C.R. Srinivasan, B.A.